











# விடுதலைப்புலிகள்




குரல்: 136 | வைகாசி - ஆனி. 2007 | அன்பளிப்பு: 12/=

# கரும்புலிகள் வீரமரபும் தமிழரின் எழுச்சியும்

**முதற்கரும்புலி களம்புகுந்து ஒரு புதிய வீரவரலாற்றைத் தொடக்கி வைத்து இருபது வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. கப்டன் மில்லர் என்ற அந்த வீரப் புலியின் தடத்தில் இன்று நூற்றுக்கணக்கான கரும்புலிகள் சாதனை படைத்துத் தமிழரின் விடுதலைப்போராட்டத்தை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் சிந்தனையில் பிறந்த கரும்புலிப் போர்வடிவம் இன்று உலகையே வியக்க வைக்கும் அளவுக்கு வீரமும் - தியாகமும் - நேர்த்தியும் நிறைந்ததாகப் போற்றப்படுகின்றது.

'பலவீனமான எங்கள் இனத்தின் பலமான ஆயுதம்தான் கரும்புலிகள்' என்று தலைவர் கூறியுள்ளது அரசியல் அர்த்தம் நிறைந்த வரியாகும்.

கரும்புலிப் போர்வடிவம் சிங்கள அரசையும் அதன் படைகளையும் சதா அச்சுறுத்திக்கொண்டே இருக்கிறது. அவர்களால் வெல்லப்பட முடியாத ஒரு போர்வடிவமாகவே கரும்புலி நடவடிக்கைகள் காணப் படுகின்றன.

தரைப்போரிலும் - கடற்சமர்களிலும் கரும் புலிகளின் பங்காற்றுகை அளப்பரிய போராட்டப் பங்களிப்பாகவே விளங்கிவருகின்றது.

கரும்புலிகளின் வீரச்செயற்பாடுகளும் - அதி உச்ச அர்ப்பணிப்பு உணர்வும் தமிழர்களது மனதில் ஆழமான தாக்கங்களை விளைவித்துள்ளது.

தமிழ் மக்களின் தேசிய உணர்வுக்கும் - மண்பற்றிற்கும் கரும்புலிகளின் செயற்பாடுகள் ஊக்க சக்தியாக அமைந்துள்ளன.

எதிரியிடம் இல்லாத சக்திமிக்க போராயுதம் ஒன்று தம்மிடம் இருப்பதை ஒரு இனப்பெருமை யாகவே தமிழ் மக்கள் நோக்கிப் பெருமிதம் அடை கின்றனர்.

தமிழரின் படைபலம் இப்போது உயர்நிலை யில் உள்ளது. அதுபோல மக்களின் விடுதலைபற்றிய நம்பிக்கையும் உச்ச நிலையில் உள்ளது.

கரும்புலிச்செயற்பாடுகளின் இருபதுவருட வரலாறு தமிழர்களிடம் ஒரு தேசிய எழுச்சியை உத் வேகப்படுத்திவருகின்றது. கரும்புலிகளின் வீரமரபு எமது புதிய சந்ததியினரிடமும் புகுந்து அவர்களையும் எழிச்சிகொள்ளவைப்பதை இன்று நாம் காணமுடியும்.

தமிழரை நசுக்க விரும்பும் எவரையும் கரும் புலிப்போர்வடிவம் அச்சுறுத்திக்கொண்டேயிருக்கின்றது. தமிழினத்தின் ஒரு பாதுகாப்புக் கவசமாகவே கரும்புலிப் போர்வடிவம் திகழ்கின்றது.

(02ஆம் பக்கம் பார்க்க)



05.07.2007 அன்று கரும்புலிகள் நாள் நிகழ்வில் சுடரேற்றும் தமிழீழத் தேசியத் தலைவர்

# தமிழர்க்கு எதிரான இனவெறியும் வெளிநாடுகள் மீதான வெறுப்புணர்வும்

சிங்கள அரசிடம் நிரந்தரமான ஒரு அரசியல் சித்தாந்தம் உண்டு. இலங்கைத் தீவு சிங்கள - பௌத்தர்களுக்கு மட்டுமே உரித்தான நிலம் என்பது அந்தச் சித்தாந்தமாகும். சிங்கள - பௌத்தர்களைத் தவிர வேறு எந்த இன மக்களுக்கும் இலங்கைத் தீவில் இடமில்லை என்று அந்த இனவாதச் சித்தாந்தம் கூறுகின்றது. சிங்களத்தின் எந்தக் கட்சி அல்லது எந்தத் தலைவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் இந்த இனவாத அரசியல் சித்தாந்தத்தில் மட்டும் மாற்றமே இருக்காது.

சிங்கள - பௌத்தப் பேரினவாதச் சித்தாந்தத்தின் முதலாம் எதிரியாகத் தமிழ் இனமே உள்ளது. தமிழ் மக்களும் - தமிழரின் தாயக நிலமும் அதன் தொடர்ச்சியானதும் - குரூரமானதுமான தாக்குதல்களுக்கு இடைவிடாது முகம் கொடுத்தே வருகின்றது. தமிழின அழிப்பு என்பது அதன் தாரக மந்திரமாக இருந்துவருகின்றது.

முன்னர், "இனக்கலவரங்கள்" என்ற பெயர்களில் காலத்திற்குக் காலம் தமிழின அழிப்புகளைச் செய்துவந்தார்கள்.

இப்போது "பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" என்ற போர்வையில் இன அழிப்புச் செய்துவருகின்றனர்.

முன்னர், விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயர்களில் தமிழர் நிலத்தை அபகரித்துச் சிங்களவர்களைக் குடியமர்த்தினார்கள்.

பின்னர், சிங்களத்தின் இறைமை மற்றும் தேசிய பாதுகாப்பென்று காரணம் கூறிக்கொண்டு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை தமிழர் தாயகப் பகுதிகளில் அமைத்தனர்.

இப்போது, இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்கள் மற்றும் பொருளாதார வலயங்கள் என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களைக் குடியெழுப்பிக் கலைத்து நிலப்பறிப்பைச் செய்ய முனைகின்றனர்.

உள்நாட்டில் அகதிகளாக மாறி இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் அல்லலுறுவதற்குச் சிங்கள அரசின் இனவெறிச் சித்தாந்தமே காரணமாக உள்ளது.

கொழும்பு நகரிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்ற சிங்கள அரசு எடுத்த இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் அதன் இனவாதச் சித்தாந்தத்தின் நடைமுறை வடிவமாகும்.

சிங்கள அரசு மீது அல்லது அதன் நிர்வாகக் கட்டமைப்புகள் மீது சவால்கள் சுமத்தப்படும்போதெல்லாம் அவற்றை ஒரு சாட்டாக எடுத்து தமிழ் மக்கள் மீதான ஒரு இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையாக அமுற்படுத்துவது சிங்கள அரசின் இனவாத மரபாகும்.

சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கு பணிந்தே கொழும்பு வாழ் தமிழர்களின் வெளியேற்றத்தைச் சிங்கள அரசு விலக்கிக் கொண்டது. ஆயினும் மாற்றுவழிகளில், தேவையேற்பட்டால் மீண்டும் இதேவழியிலேயே தமிழர்களை இனச்சுத்திகரிப்புச் செய்ய சிங்கள அரசு தயங்காது. தேசியப் பாதுகாப்பு என்று சிங்கள அரசு சொல்வதும் தமிழின அழிப்பையே குறித்து நிற்கின்றது.

சர்வதேசக் கண்டனங்கள் - எதிர் நடவடிக்கைகள் என்பவற்றிற்கு மத்தியிலும் சிங்கள இராணுவ இயந்திரத்தை பெருமெடுப்பில் விரிவாக்க மகிந்த அரசு முயல்கின்றது. சீனாவிலிருந்து - பாகிஸ்தானிலிருந்து நவீன போராயுதங்களை வாங்கிக் குவித்துவருகின்றது. ஐம்பதாயிரம் பேரைப் படைக்குத் திரட்ட மகிந்த அரசு உத்தேசித்துள்ளது. மகிந்த அரசின் போர் முனைப்பை உலக நாடுகள் கண்டித்து - எச்சரிக்கைகள் செய்துள்ளன. எனினும், மகிந்த அரசு அதனைக்கருத்தில் எடுக்கவில்லை.

மாறாக, சிங்கள அரசை அதன் கடும்போக்கு மற்றும் இனவெறி நடவடிக்கைகளுக்காகக் கண்டித்த உலக நாடுகளையே தூக்கியெறிந்து பேசி தனது வெளிநாட்டு வெறுப்புணர்வை மகிந்த அரசு வெளிப்படுத்தியுள்ளது.

தமிழர்களுக்கு எதிரான இனவெறி மற்றும் வெளிநாடுகள் மீதான வெறுப்புணர்வு இவை இரண்டுமே சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தத்தின் தாக்குதல் இலக்காக உள்ளன.

இந்த இனவாதச் சித்தாந்தத்தை அரசியல் அடித்தளமாகக் கொண்ட சிங்கள அரசிடமிருந்து தமிழ் மக்கள் ஒரு நியாயமான ஒரு அரசியல் தீர்வை பேசிப்பெற முடியும் என்று நினைப்பது சாத்தியமற்றதேயாகும்.

இந்த வரலாற்று உண்மையை, இலங்கை இனப்பிரச்சினையில் அக்கறையும், ஆர்வமும் உள்ள உலக நாடுகள் கருத்தில் எடுத்து யதார்த்த பூர்வமாகச் சிந்திக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

புலிகளின் குரல்

(01ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தமிழினத்திற்குத் தலைவர் பிரபாகரன் உவந்தளித்த இந்தப் போர்வடிவத்தைத் தமிழரின் பண்பாட்டு வடிவமாக மாற்றி எமது இனத்தின் பேறுடைச் சொத்தாக அதைப் பாதுகாத்து - வளர்க்கவேண்டியது தமிழ் இனத்தின் வரலாற்றுக் கடமையாக உள்ளது.

கரும்புலிகள் நினைவு நாளில் மக்கள் எல்லோரும் வெளிப்படுத்தும் மன மகிழ்ச்சியும் - எழுச்சியும் அபாரமாகவே உள்ளன.


புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளும் கரும்புலி நாளில் உணர்வெழுச்சியுடன் ஒன்றுதிரண்டு - தேசிய ஒற்றுமையையும் - தேசிய எழுச்சிகளையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

'பலம்தான் தமிழர்க்கு வாழ்வு தரும்' என்ற தலைவரின் தாரக மந்திரத்திற்குப் பலம் சேர்த்துவரும் கரும்புலிப்போர்வடிவம் எமது மக்களிடம் உண்டுபண்ணிவரும் மனப்புரட்சியால், மக்கள் கொண்டுள்ள எழுச்சிநிலை தமிழரின் போராட்டத்திற்கு பலமும் - நம்பிக்கையும் வழங்கியுள்ளது.

## நாம் சூரியக் குழந்தைகள்

சூரியனே,
உன் கதிர்கள் நாம்.
அதனால்தான் எம்மை
ஒருவராலும் சுட்டெரிக்க
முடியவில்லை.
நீ
வெப்பத்தின் தந்தை.
நாம்
வெப்பக் குழந்தைகள்.
அதனால்தான்
எதிர்ப்பவர்களையெல்லாம்
எரிக்க முடிகிறது.
நீ
மறைந்தாலும் மீண்டும் மீண்டும்
உதித்துக் கொண்டிருக்கிறாய்.
அதனால்தான்
நாமும்
விழுந்தாலும் விதையாகி
முளைத்துக்
கொண்டிருக்கிறோம்.
மாவீரரான மகத்தான
ஓவியர்கள் தீட்டிய
சிவப்புச் சித்திரங்கள்.
உன் பெயரில்
ஒளிர்ந்து
கொண்டிருக்கிறோம்.
நீ
உன் கதிர்களை ஒருபோதும்
சுட்டெரிக்கப் போவதில்லை.
அது போல்
உன்னைச் சுட்டெரிக்க
இன்னொரு சூரியன்
உதிக்கப் போவதில்லை.

மாவீரர்: மேஜர் அமுதா
"நெருப்பினுள் நின்று"
கவிதைத் தொகுப்பிலிருந்து...



# நாட்டுக்குள்ளே "நாடுகடத்தும்" நாடு

க.வே.பாலகுமாரன்



**“என்ன வேண்டும் உங்களுக்கு? என்னதான் வேண்டும்? தமிழரின் குருதியா?”** தனது மேற்சட்டையைக் கழற்றி வீசி சிங்கள நாடாளுமன்றிற்குரிய மரியாதை கொடுத்து சீறினார் மகேசுவரன். “இப்போது நடந்தது 1983இல் நடந்ததின் மறுபதிப்பு. தமிழ் மக்களைப் புறம் தள்ளினால் அவர்கள் நேரே போய் புலிகளின் மடியில்தான் விழுவார்கள். பிறகு குண்டுகளுடன் திரும்பி அவர்கள் கொழும்பு வரும்போது உங்களால் தடுக்கமுடியாது போய் விடும்” இது அமைதியான ஆனால் அழுத்தமான அனுரகுமார திசநாயக்க என்கிற ஜே.வி.பிக்காரரின் குரல். இடையில் இன்னொரு குரல். “இந்தப் புத்தி ஜே.வி.பிக்கு முன்னரே வந்திருந்தால் – சுனாமிக்குப் பின்னான மீளமைப்புக் கட்டமைப்பை (p-toms) கட்டவிட்டிருந்தால் இந்த நிலை வந்திருக்குமா?” இது ஜெயராசா பெர்னான்டோப் பிள்ளையின் ஆதங்கம் வழியும் குரல். **அங்கிருந்து இங்கு – இங்கிருந்து அங்கென எத்தியெறியப்பட்ட எம் மக்களின் ஞானக் குரலிது.“நாடுகடத்துவது பற்றி பேப்பரிலைதான் படிச்சிருக்கிறம் அதை இன்றைக்குத்தான் நேரடியாகப் பார்த்தம். இரவோடு இரவாக நாடு இரண்டாகப் பிரிந்துவிட்டது என்றல்லவோ நினைத்தோம்” (தினக்குரல் 10/06)**

எத்தகையதொரு சம்பவத்திலும் ஏதாவதொரு சிறு நன்மையாவது கிட்டும் என்பார்கள் நேர்மறைச் சிந்தனையாளர். தமிழருக்கான செய்தி மிகப் பழையது தான், எனினும் பிரபல செய்தி நிறுவனமொன்று இட்ட தலைப்பினைக் காணுங்கள். **“இத்தீவு உனது நாடில்லையென்பதை எப்படி உனக்கு உணர்த்துவது?”** சகல படுபாதகங்களையும் ஒன்றிணைத்து ஒரு தொகுப்பு ஆட்சியை எவ்விதம் நடத்துவது என்பதில் படுபாதகங்களின் பரவலான தொகுப்பாளரான மகிந்தரிடம் அக்கிரம ஆட்சியாளர்கள் பாடம் கற்கமுடியும். ஐ.நாடுகள் அவையால் 1998இலிருந்து மனித குலத்திற்கெதிரான பெருங்குற்றங்களாகவும் போர்க்குற்றங்களாகவும் வகைப்படுத்தப்படும் இனக்கொலை, இனச்சுத்திகரிப்பு, கட்டாய வெளியேற்றம் போன்றவற்றிற்கு உதாரணம் காட்ட சருவதேசம் தனித்தனி நாடுகளைத் தேடத்தேவையில்லை. சிறிலங்கா பக்கம் திரும்பினால் போதும். முன்பு இனக்கொலை பற்றிக் குறித்தோம். இப்போது இனச்சுத்திகரிப்புப் பற்றி எழுத வேண்டியதாகின்றது. 21ஆம் நூற்றாண்டின் இனச்சுத்தி கரிப்பு வரிசையில் சூடானுக்கருகில் தனக்குரிய இடத்தைச் சிறிலங்கா இப்போது பெற்றுவிட்டது. மேற்குச் சூடானின் டார்பூர் பிரதேசத்தில் அரபு முஸ்லீம் யான் யாவித் (JANJAWEED) குழுவால் விரட்டப்படும் அரபுக்கள் அல்லாத ஆபிரிக்க மக்களின் அவலம் தோய்ந்த படங்களில் காணப்படுவது போல எதிர்காலம் என்கிற கேள்விக்குறியை முகத்தில் தாங்கியவண்ணம் நிற்கும் எம் மக்களின் காட்சிக்கோலங்கள் உலகெங்கும் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

இனச்சுத்திகரிப்பு அல்லது இனத் தூய்மைப்படுத்தல் என்றாலென்ன? இச்சொற்பதத்திற்கான விளக்கம் இலகுவானதல்ல என்கின்றனர் ஆய்வாளர். ஏனெனில் ஒரு முனையில் இப்பதம் நாட்டிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்படுவோரை, இன்னொரு முனையில் இனக்கொலையையும் தன்னுள் அடக்கியுள்ளது. ஒருவிதத்தில் இப்பதம் விரிந்த விளக்கத்தையும் இன்னொரு வகையில் குறுகிய விளக்கத்தையும் கொண்டுள்ளது. ஒரு குறிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து திட்டமிட்ட கொள்கையடிப்படையில் ஒரு குழுவானது இன்னொரு குழுவை மதத்தின், இனத்தின் அல்லது தேசத்தின் பெயரால் படிப்படியாக அழித்து வருதல்! இன்னொரு வகையில் கூறினால் ஒரு இனக்குழுமத்தைக் குறிப்பிட்ட பிரதேசத்திலிருந்து வெளியேற்றி ஒரு தூய்மைப்படுத்திய இனத்தை உருவாக்கும் பல்வேறு கொள்கைகளை, நடைமுறைகளைக் குறிக்கின்றது. இன்னொரு வகையில் கூறினால் குறிக்கப்பட்ட பிரதேசமொன்றிலிருந்து **“விரும்பத்தகாத மக்கள் கூட்டமொன்றை” மத இன வேற்றுமைப்படுத்தல் அடிப்படையில் அரசியல், தத்துவ மூலோபாயக் காரணங்களுக்காக வெளியேற்றல்** என்றும் சொல்ல முடியும் என்கிறது விக்கிபீடியா எனப்படும் தகவற்களஞ்சிய இணையத்தளம். ஆகவே இங்குள்ள விளக்கம் என்னவென்றால் யூன் 7ஆம் திகதி நள்ளிரவில் கொழும்பில் தங்ககங்களிலிருந்து விரட்டப்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் இனச்சுத்திகரிப்பின் இன வெறுப்பின் விளைவே என்பதை உலகம் இப்போது உணர்கின்றது என்பதுதான். இருந்தாலும் ஆங்கிலேயர் படிப்படியாக ஆட்சியதிகாரங்களைக் கையளிக்கத் தொடங்கிய (குறிப்பாக டொனமூர் கால கட்டம்) காலத்திலிருந்தே இக்கொள்கை சிங்களப் பெருந்தேசியவாதிகளால் பின்பற்றப்பட்டமை, அது பெரும் ஒடுக்குமுறையாகப் படிப்படியாக வளர்ச்சி கண்டு பெரும் இனக்கொலைகளை நிகழ்த்தித் தற்போது **கொழும்பு தங்ககங்களில் தங்கியிருந்த தமிழரை அடாவடியாக வெளியேற்றியமை என்கிற புள்ளியில் வந்து நிற்பதை** உலகம் குறிப்பாக ஆங்கிலேயர் உணரத்தான் செய்வார்கள். எமது விடயத்தில் தலையிட உமக்கென்ன உரிமை என கட்டப்பொம்மன் மாதிரியில் கோத்தபாய மீசை துடிதுடிக்கக் கேட்டதற்கு மிக அமைதியான டொமினிக் சில்கொட் எமக்குச் சட்டரீதியாக உரிமை உண்டு. சர்வதேச சட்டங்களில் கையெழுத்திட்டமை மறந்துபோச்சா? என்கிற வகையில் பதில் இறுத்தமை கவனிக்கத்தக்கது. உலகின் எந்தப் பகுதியிலும், எந்தக் காலகட்டத்திலும், எந்த வகையிலும் நடந்தேறிய நடந்தேறும் இத்தகைய கொடுமைகளை ஒத்ததே இங்கு நடப்பன என்பது **உலகத்திற்கு இப்போது உறைக்கின்றது.**



ஆகவே, இங்கே கேள்வியெழுகின்றது. இத்தகைய மனித குலத்திற்கெதிரான பாரிய குற்றங்களை யார் இழைத்தார்கள்? இதன் விளைவுகளெவை? இவர்களில் யாராவது தண்டிக்கப்பட்டார்களா? உலகின் நிலையென்ன? **இனச் சுத்திகரிப்பென்பது எப்போதுமே பெருத்த, இழிவான வன்முறையோடும், குருதி பாயும் களங்களோடும் இராணுவ நடவடிக்கைகளோடும் தொடர்புபட்டவை.** பல்லாயிரமாண்டு காலமாக இக் கொடுமை நிகழ்ந்தாலும் 1990இன் பின்னரே இச் சொற்பதம் பரவலான புழக்கத்திற்கு வந்தது. முன்னாள் யூகோசிலேவியாவின் பொசுனிய, குரோசிய, சேர்பிய இனச்சுத்திகரிப்புக் களத்திலிருந்தே பிறந்ததாகக் கூறப்படுகின்றது. ஐ.நாவின் பாதுகாப்புச் சபையும் பொதுச்சபையும் இத்தகைய குற்றங்களை மனித குலத்திற்கெதிரான பெருங்குற்றங்கள் எனவகைப்படுத்திப் போர்க்குற்றங்களாகக் கணித்து இவற்றினைப் புரிந்தோரைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனைகளை ஏலவே வழங்கத் தொடங்கியுள்ளனர். தற்போது சர்வதேசக் குற்றவியில் நீதிமன்றம் முன்னால் யூகோசிலாவியா, றுவாண்டா, சியரா லியோன் போன்ற பகுதிகள் போர்க்குற்றங்களை விசாரிக்கும் சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாளர்கள் தண்டனைகளை வழங்கத் தொடங்கி விட்டனர். பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயம் நிறுவுவது மாற்றமுடியாத உலகத்திற்கு மிக முக்கியமான நடவடிக்கை என கருதப்படுகின்றது. ஆயினும் குற்றம் இளைத்தோரை கைதாக்கும் அரசியல் உறுதிப்பாட்டின் வலு இன்னமும் கேள்விக்குரியதாக இருப்பதாகவே கருதப்படுவதையும் நாம் கவனத்தில் கொள்ளத்தான் வேண்டும்.

உலக வரலாற்றில் வெவ்வேறு வடிவங்களில் பல்வேறு காரணங்களிற்காக இனச்சுத்திகரிப்பும் அதற்காக இனக்கொலையும் இடைவிடாமல் நடந்தேறுகின்றன. பதினைந்தாம் நூற்றாண்டின் பின்னர் பெரும் அவலமாகக் கருதப்படும் மண்ணின் மைந்தர்களான பூர்வீக் குடிகள் ஐரோப்பிய லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க ஆசிய நாடுகளில் அழிக்கப்பட்டமை விரட்டப்பட்டமைக்குச் சாட்சியமாகக் கருதப்படும் அமெரிக்கப் பூர்வீகக் குடிமக்கள் 19ஆம் நூற்றாண்டின் தமது வளமான வாழ்விடங்களிலிருந்து மிகத் தொலைவில் ஒதுக்குப்புற வனப்பகுதிகளுக்கு விரட்டப்பட்டனர். 20ஆம் நூற்றாண்டில் மிகப் பெருந்தொகையான ஒரு கோடியளவு மக்கள் 1947 பிரிவினையின் பொழுது இந்தியாவிலிருந்தும் (முஸ்லீம்கள்) பாகிஸ்தானிலிருந்தும் (இந்துக்கள், சீக்கியர்கள்) வெளியேறியமை, 1941 இனக்கொலைக்கு முன்பதாகவே 70 இலட்சம் யூதர்கள் கிட்லரின் இனச் சுத்திகரிப்புக் கொள்கையால் ஜேர்மனி, ஆஸ்திரியா மற்றும் நாசிகள் குடியிருப்புப் பகுதிகளில் வெளியேற்றப்பட்டமை, 1948இன் பின் இசுரேல் உருவாக்கத்தின் பின் வெளியேற்றப்பட்ட பல மில்லியன் பாலத்தீனியர், நிறவேற்றுமைக்கால கட்டத்தில் தென்னாபிரிக்கக் கறுப்பின மக்கள் ஒதுக்குப்புறப் பகுதிகளுக்கு விரட்டப்பட்டமை, தீமோர் பப்புவாநியூக்கினி இந்தோனேசியரின் இனச்சுத்திகரிப்புச் செயற்பாடுகள் என இப்பட்டியல் மிக மிக நீண்டவை. இதன் நீட்சியின் முடிவிலே சூடானும் சிறிலங்காவும் உலகின் வெறுப்புக்குள்ளாகின்ற நாடுகளாக மாறியுள்ளன.

இங்கே நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது, இத்தகைய பெருந்துயரக் களங்கள் சில பெரும் சோக வரலாறாக முடிந்தமையும் **பல விடுதலை ஓர்மத்தைப் பிறப்பித்த தீரக்களங்களாகவும் மாறிய கதையைத்தான்.** “செருமனியின் கரப்பான்கள்” என கிட்லரால் அழைக்கப்பட்ட யூதர் தமது தாயகத்தை உருவாக்கிய வரலாறு, ருவண்டாவில் கூட்டு இனத்தாரால் கொல்லப்பட்ட பத்து இலட்சம் துட்சி இன மக்கள் மேல் சூழுரைத்து போரை வெற்றிபெற்றருவாண்டா மக்கள் விடுதலை இராணுவம் எல்லாமே எமக்குச் செய்திகள் சொல்வனவே. கிழக்குத் தீமோரில் பொஸ்னியாவில் கொசோவோவில் நடந்தேறிய இனக்கொலையும், இனச் சுத்திகரிப்பும் குருதியை உறையவைக்கும் குரூரம் நிரம்பியவை. பொசுனியாவின் புதைகுழிகளும் செம்மணிப் புதைகுழிகளும்

(13ஆம் பக்கம் பார்க்க)

# சஞ்சலப்படுகிறது சம்பூர்

**சேனாதி**

மீண்டுமொருமுறை இனச்சுத்திகரிப்பைச் சட்டமாக்கியிருக்கிறது சிறிலங்கா அரசு. 30 மே 2007 திகதிய வர்த்தமானியில் வெளியான 1499/25 இலக்க விதிகளின்படி மூதூர் பிரதேச செயலகத்தின் அரைவாசிப் பகுதியில், அதாவது 90 சதுர கிலோமீற்றர் பரப்பில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த 12 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 4249 தமிழ்க் குடும்பங்களின், அதாவது 15,648 தமிழர்களின் வாழ்வு மற்றும் தொழிற்தளம் சிங்கள அரசின் காட்டுமிராண்டிச் சட்டத்தால் நிரந்தரமாகப் பறிக்கப்படுகிறது.

**_ஐநா அகதிகள் ஆணையத்தின் ஏப்ரல் 2007 அறிக்கையின்படி, மூதூரில் இருந்து 51,450 பேர் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். இவர்களில் 35,422 பேர் சென்ற வருட இறுதியில் மட்டக்களப்பிற்கு சென்றிருக்கிறார்கள். 9,653 பேர் அம்பாறைக்குச் சென்றிருக் கிறார்கள். 6,375 பேர் திருமலையின் புறநகர்ப் பகுதியில் வாழ்கிறார்கள். இவர்கள் அனைவரும் சிறிலங்கா படைகளின் விமானம், பீரங்கி, பல்குழல் பீரங்கிகள் மற்றும் கடற்படையின் தாக்குதல் காரணமாக வெளியேறியவர்கள். (2006 இல் திருமலையில் மோதல்கள் ஆரம்பித்தபோது மூதூரிலிருந்து வெளியேறிய முஸ்லிம்களை உடனடியாகவே சிறிலங்கா அரசு பலவந்தமாக மீளக் குடியேற்றிவிட்டதால் அந்த விபரங்கள் இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை)_**



மூதூரில் சிறிலங்கா இராணுவத்தின் கீபிர் விமானக் குண்டுவீச்சின் போது கோரமாகக் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள்





தமிழர் பண்பாட்டின் பூர்வீக உறைவிடங்களில் ஒன்றான சம்பூர்ப் பகுதியின் வாழ்வுத் தளம், 2006 இன் முன் நடுப்பகுதி தொடக்கம் சிறிலங்கா நடத்திய வான்தாக்குதலாலும் பல்குழல் எறிகணைத் தாக்குதலாலும் கடற்படையின் தரைநோக்கிய பீரங்கித் தாக்குதலாலும் உருக்குலையத் தொடங்கியிருந்தது. 2006 ஓகஸ்ட் 27ம் திகதியிலிருந்து சிறிலங்கா படைகள் ஊருக்குள் இறங்கி நடத்திய இன அழிப்பு நடவடிக்கையின் மூலம் சம்பூரின் குடிகள் தங்கள் ஆயிரமாண்டுகாலத் தாய்மடியிலிருந்து பிடுங்கி வீசப்பட்டார்கள்.

முதலீட்டுச் சட்ட அவையின் கீழ் வரக்கூடிய சிறப்புப் பொருளாதார வலயம் என்ற முகமூடியுடன் அரங்கேறியிருக்கும் இந்த இனவெறிச் சட்டத்தின் நோக்கும், விளைவும் பயங்கரமானவை.

திருமலையை மையப்படுத்தி இயங்கிய தமிழ் அரசாட்சியானது ஆயிரமாண்டுத் தொன்மையுடையது. அவ்வரசுகளின் விளைநிலமாகவும் அவ்வப்போது அரசால் வழங்கப்பட்ட மானியமாகவும் விளங்கிய வளமிக்க நிலங்களைக்கொண்டது மூதூர் கிழக்குப் பிரதேசம். பத்தாம் நூற்றாண்டிலே சோழர்கள் செல்வாக்குச் செலுத்திய காலத்தில் மூதூர், கிண்ணியா, ஈச்சிலம்பற்று ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசம் ராஜராஜ வளநாடு எனவும் விக்கிரமச் சோழ வளநாடு என்றும் வழங்கப்பட்டது. அதன்பின், கிபி 1215இல் கலிங்க மாகோன் படையெடுப்பின் பின், அவன் வகுத்த வன்னிமைகளின் அடிப்படையில், முற்குக இளவரசர்களின் பரிபாலனம் அங்கே நெடுங்காலமாக நிலவியது. அவ்வாறான பலநூற்றாண்டுகாலச் சீரும் செழுமையும் கொண்ட தமிழ்த் தொன்மத்தின் தொட்டிலைச் சனநாயகச் சால்வை போர்த்திய அரக்கர்களான ராஜபக்சர்கள் கவிழ்த்துக் கொட்டியிருக்கிறார்கள்.

இவ்வாறு சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழரின் தொன்மங்களை சிதைக்கும் கொடுமை இலங்கைத் தீவிற்குப் புதிதல்ல. 1950 இல் மட்டக்களப்புத் தெற்கு என்று அறியப்பட்ட இடத்தில் கல் ஓயாத் திட்டத்தைக் கொண்டுவந்தது டி எஸ் சேனநாயக் காவின் நிருவாகம். பண்டைய தமிழ் ஆட்சி மையங்களும் பண்பாட்டுத் தலங்களும் இன்று அம்பாறை அல்லது திகாமடுல்லை என்ற, பெரும்பாலும் சிங்களவர்களே ஆதிக்கம் செலுத்தும் இடமாக மாறியிருக்கின்றன. திருமலை மாவட்டத்தில்கூட கந்தளாயிலும், இன்று மொறவேவையாக இருக்கும் முதலிக்குளத்திலும், கோமரங்கடவெல எனப்படும் குமரன் கடவையிலும், பதவி சிரிபுர எனப்படும் தனிக்கல் அல்லது பதவிக் குளத்திலும் சிங்களச் சினையை விதைத்த வர் அவரே.

ஜே ஆர் ஜெயவர்தனவின் கொடுங்கோலின்போது 1988 ஏப்ரல் 16ம் திகதிய வர்த்மான அறிவித்தலின்படி மணலாற்றின் 42 கிராமங்களில் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த 13,288 தமிழ்க் குடும்பங்கள் உடனடியாக வெளியேறும்படி உத்தரவிடப்பட்டனர். 99 வருடக் குத்தகைக்கு நிலத்தை எடுத்திருந்த 14 தமிழ்த் தொழிலதிபர்களின் நிலங்கள் உடனடியாகப் பறிக்கப்பட்டன. மகாவெலி அதிகார சபையின் கீழ் கொண்டுவரப்பட்ட மணலாற்றுப் பகுதி, 9,289 சிங்களக் குடும்பங்கள் விதைக்கப்பட்ட வெலிஓயாவாக மாறியது. அதன்படி, பச்சைத் தமிழ்க் கிராமங்களான செம்மலை, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், தென்னமரவாடி அனைத்தும் அநுராதபுர மாவட்டத்தின் கடற்கரைகளாயின. இதேபோன்று மகாவலி சீ திட்டமும் நடைமுறையானால் வாகரைப் பகுதி பொலந்நறுவைக்குள் திணிக்கப்படும் கொடுமையும் நடக்கலாம்

சேனநாயக்காவின் திட்டம் தமிழர் தாயகத்தை பக்கவாட்டில் அரித்துக் கிழக்கின் இனப்பரம்பற் கோலத்தை சிங்களவருக்குச் சாதகமாக மாற்றியது. ஜெயவர்த்தனாவின் திட்டம் தமிழர் தாயகத்தின் வடக்குப் புறத்தையும் கிழக்குப் புறத்தையும் துண்டாடும் ஆப்பாகவும் செயற்பட்டு இனப்பரம்பற் கோலத்தையும் மாற்றவிழைந்தது. இன்றைய ராஜபக்சர்களின் திட்டம் மட்டக்களப்பு மாவட்டதிற்கும் திருமலை மாவட்டத்திற்கும் இடையே ஒரு சிங்களச் சொருகலைக் கொண்டுவருவதோடு திருமலையின் இனவிகிதத்தை மாற்றும் நோக்குடையது என்பது வெளிப்படை.

சம்பூரிலே வெகுவேகமாக பொருளாதாரத் திட்டங்களைத் தொடக்கி, வேலையாட்கள் மற்றும் நிருவாகம் என்ற போர்வையில் சிங்களக் குடும்பங்களைக் கொண்டுவரவே ராஜபக்ச நிருவாகம் எண்ணுகிறது. அதற்கான உதவிகளைப் பல பக்கத்திலும் கேட்டிருக்கிறது.

2006 டிசம்பரில் இந்தியாவின் தேசிய அனல் வலுக் கூட்டுநிறுவனமானது 500 மெகாவற் மின்னாக்கியைக் கட்டிக் கொடுப்பதென சிறிலங்கா அரசுடனும் இலங்கை மின்சார சபையுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்திருந்தது. அதன்படி, இவ்வருடம் சனவரி மாதம் இந்திய நிறுவனத்தின் பரீட்சகர் குழுவை இலங்கை அரசாங்கம் தம்பலகாமக் குடா, கிளப்பன்பேர்க் குடா மற்றும் சம்பூர் ஆகிய இடங்களுக்குக் கொண்டுபோய் காட்டியது.

கிளப்பன்பேர்க் குடாவின் தென்மேற்குப் பகுதியையே பொருத்தமான இடமாக இந்தியப் பரீட்சகர் குழு பரிந்துரைத்தது. தம்பலகாமக் குடாவானது இதற்கான நகர்ப் புலமாகப் பயன்படும் எனவும் பிற்காலத்தில் இன்னுமோர் நிலையத்தை அமைப்பதற்காக வேண்டுமானால் சம்பூரை மீண்டும் பார்க்கலாம் என்றும் அவர்கள் சொல்லியிருந்தார்கள்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்த தொழிநுட்பச் சிக்கலின் அடிப்படையில் கிளப்பன்போர்க் யோசனை கைவிடப்பட்டது. சீனன் குடாவிலிருக்கும் வான் படைப் பயிற்சிப் பறப்புத் தளத்தை மீளவும்

(13ஆம் பக்கம் பார்க்க)

**_1881 இல் நடத்தப்பட்ட குடிசன மதிப்பின்படி, சம்பூர் மற்றும் மூதூர் கிழக்கு ஆகியன திருமலை மாவட்டத்தின் அப்போதைய நான்கு உப அரச அதிபர் பிரிவுகளில் ஒன்றான கொட்டியாரப்பற்று வன்னியர் பிரிவினுள் அடங்குகின்றன. அதன்படி அப்போது அங்கே வாழ்ந்த ஐரோப்பியர் 01, ஐரோப்பிய ஆசியர் மற்றும் பரங்கியர் 13(ஆண்-07, பெண்-06), சிங்களர் 11(ஆண்-11, பெண்-இல்லை), தமிழர் 3027(ஆண்-1646, பெண்-1381), மூர்கள் எனப்பட்ட முஸ்லிம்கள் 1673(ஆண்-881, பெண்792), வேடுவர்கள் 38(ஆண்-21, பெண்-17)_**

**_1827ம் ஆண்டின் சமயவகை மதிப்பீட்டின்படி ஒட்டுமொத்த திருமலை மாவட்டத்தில் இந்துக்கள் 14,182 பேர், பௌத்தர்கள் 250 பேர், மூர்கள் 3245 பேர், கிறிஸ்தவர்கள் 1481 பேர். இதில் கிறிஸ்தவர்கள் கிட்டத்தட்ட அனைவருமே தமிழர் ஆவர்._**

# சர்வதேசத்தின் அரசியல் முற்றுகைக்குள் மகிந்த அரசு சிக்குகின்றதா!



எல்லாளன்

ஒன்றரை வருட மகிந்தரின் ஆட்சியில் சிங்கள அரசு நெருக்கடிகள் பலவற்றை எதிர்கொண்டுள்ளது. சர்வதேசத்தில் இருந்துவரும் அரசியல் நெருக்கடிகளாலும் - உள் முரண்பாட்டால் எழுந்த அரசியல் சிக்கல்களாலும் மகிந்த அரசு தடுமாறுகின்றது. தமிழருக்கு எதிரான இனக்குரோதச் செயற்பாடுகள் என்ற நிலையைத் தாண்டி வெளிநாடுகள் மீது வெறுப்புணர்வு காட்டல் என்ற கட்டத்திற்கு மகிந்த அரசு சென்றுள்ளது. இதனால், சர்வதேச நாடுகள் கொழும்பு அரசாங்கம் மீது சீற்றத்தை வெளிப்படுத்தி வருகின்றன.

தமிழருக்கு எதிராக இழைக்கப்படும் கொடூரமான மனித உரிமை மீறல்கள் எல்லை கடந்துள்ளன. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று உலகிற்குக் கூறிக்கொண்டு தமிழரை இன அழிப்புச் செய்யும் சிங்கள அரசின் செயற்பாடுகளைச் சர்வதேச சமூகம் கேள்விக்குட்படுத்த ஆரம்பித்துள்ளது.

தமிழரின் இனச்சிக்கல்களுக்கு இராணுவ வழியில் தீர்வு தேடமுடியாது என்று உலக நாடுகள் சிங்கள அரசிற்கு இடித்துக்கூற முற்பட்டுள்ளன. தமிழினத்திற்கு எதிரான மனித உரிமை மீறல்களை உடனடியாக நிறுத்து! போரை நிறுத்து! சமாதானத்திற்கான கதவுகளை உடனடியாகத் திற! என்று உலக நாடுகள் மகிந்த அரசை நோக்கி உரத்துக்கூறுகின்றன. ஆயினும், இவற்றுக்குச் செவிமடுக்க மகிந்த அரசு தயாராக இல்லை.

மகிந்த ராஜபக்சவும் - அவரது அமைச்சர்களும் “போர் அன்றி வேறெந்தவேலையும் இல்லை” என்று முழங்கிவருகின்றனர். தங்களது முடிவில் கைவைக்கும் எந்த நாட்டையும் கடுமையாக விமர்சித்துக் கருத்துக்கூறவும் அவர்கள் தயங்கவில்லை.

கொழும்பு அரசியலை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் சிங்கள அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் இடையே ஒருவித “பனிப்போர்” நிலவுவதைக் காணமுடியும்.

சிங்கள அரசிற்கு எதிராக உதவிநிதிக் குறைப்பு - ஆயுத விற்பனைக்கு மறுப்பு - எச்சரிக்கை விடுப்பு - அழுத்தங்கள் கொடுப்பு என்று உலக நாடுகள் சில அரசியல் - இராணுவ - பொருளாதார ரீதியில் மகிந்த அரசிற்கு எதிராக நடவடிக்கைகள் எடுத்துவருகின்றன. இதன் வளர்ச்சிக்கட்டமாக ஐக்கிய நாடுகள் சபை என்ற உலக அரசியல் மன்றத்தின் சக்திமிகுந்த பிரிவாகிய பாதுகாப்புச் சபைக்குச் சிங்கள அரசின் மனித உரிமை மீறல் விவகாரத்தை எடுத்துச் செல்வது தொடர்பாக ஐரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் ஆலோசித்து வருவதாகவும் செய்திகள் வருகின்றன.

கொழும்பு நகரிலிருந்து தமிழர்களை 24 மணிநேரத்திற்குள் வெளியேற்ற உத்தரவிட்டதுடன், அந்த வெளியேற்ற உத்தரவைக் கண்டித்து விமர்சித்த உலகநாடுகளைப் பகிரங்கமாகவே தாக்கி அறிக்கைவிட்ட கோத்தபாய ராஜபக்சவை உலகநாடுகள் சில தனியாகவும் குறிவைத்துள்ளன என்றும் செய்திகள் கசிந்துள்ளன. கோத்தபாய ராஜபக்சவிற்கும் - இவரைப் போன்று பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் சிங்களத் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் வெளிநாடு செல்வதற்கான விசாக்களை வழங்காமல் தடுப்பதற்கு உலக நாடுகள் உத்தேசித்து வருவதாகவும் செய்திகள் வெளிவருகின்றன.

மகிந்த அரசு மீது சர்வதேச நாடுகள் காட்டும் சீற்றத்தைச் சுட்டிக்காட்டியுள்ள ஐ.தே கட்சி மகிந்த ஆட்சியில் சிங்கள அரசின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுவிட்டதென்றும், இலங்கை அரசை உலக நாடுகள் தனிமைப்படுத்த முயல்கின்றன - இது சிங்கள தேசத்திற்கு ஆபத்தை விளைவிக்கப்போகின்றன என்றும் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளது. மகிந்த பதவி விலகி வீடு போகவேண்டும் என்றும் எதிர்க் கட்சிகள் கோரத் தொடங்கியுள்ளன.

ஆதரவுத்துணையுடன் சமாளித்துள்ளது என்பதும் உண்மையாகும்.

சிங்கள அரசு மீது தற்போது சர்வதேச நாடுகள் காட்டும் பகைமைப்போக்கு நீடித்து நிலைக்கும் என்று எவரும் எதிர்வு கூறமுடியாது. சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் ஒரு அரசியல் காய்நகர்த்தல் மூலம் தற்போதைய நெருக்கடிகளை மகிந்த ராஜபக்ச இல்லாதொழிக்கவும் கூடும். கோடைகால மழைமேகம் போல சிங்களம் மீதான சர்வதேச பகைமை, திடீரெனக் கலைந்து அதனுடன் நட்புறவு பாராட்டினாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

புலிகள் இயக்கத்தின் நிதானப்போக்கையும் - மகிந்த அரசின் கடும்போக்கையும் உலகம் சரிவர இனங்கண்டுள்ளது. இது தமிழ் மக்களுக்கு நம்பிக்கையளிக்கும் விடயமாகவே உள்ளது. தமிழரின் அரசியல் பிரதிநிதிகள் புலிகள் இயக்கம் தான் என்பதை உலகநாடுகளே ஒப்புக்கொண்டுள்ளன என்று ஐ.தே கட்சித் தலைவர்களுள் ஒருவரான ரவி கருணாநாயக்க கூறியிருப்பது ஒரு அரசியல் யதார்த்தத்தைத் தெளிவு படுத்தியுள்ளது. உலக நாடுகளிடையே ஏற்பட்டுவரும் அந்த அரசியல் மாற்றம் மகிழ்ச்சியளிப்பதாகவே உள்ளது.

மகிந்த அரசின் அமைச்சராக இருந்து பதவி விலக்கப்பட்ட மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராச்சி போன்றோர் புதியதாகக் கட்சி தொடங்கி மகிந்த ராஜபக்சவிற்குத் தலைவலியை உண்டு பண்ணியுள்ளனர். இவர்களுடன் சந்திரிக்கா அம்மையாரும் இணைந்து மகிந்தவின் ஆட்சிக்கு சமாதிகட்ட முயலப்போகின்றார்கள் என்றும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இவ்விதம் மகிந்த அரசானது தனது ஒன்றரைவருட ஆட்சிக்காலத்திலேயே சர்வதேச ரீதியாகவும் - உள்நாட்டிலும் அரசியல் ரீதியான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இராணுவ ரீதியாகவும் வடபுலப் போர்முனையில் சிங்களப் படைகள் சந்தித்துள்ள தேக்கநிலை மகிந்த அரசைக் கவலையடையச் செய்துள்ளது.

முப்படைப் பலத்தையும் புலிகள் இயக்கம் மரபுப் போர்முறையில் தாக்கமாக வெளிப்படுத்தியுள்ளதும் மகிந்தரின் இராணுவத் தீர்வுக் கனவையும் கேள்விக்குரியதாக்கிவிட்டுள்ளது. புலிகளின் வான்படை, கடற்படை, தரைப்படையின் வளர்ச்சியையும், புலிகளின் சிறப்புப் படையணிகளின் எழுச்சியையும் சிங்கள அரசு கண்ணாரக்கண்டு வருகின்றது.

வன்னி நிலத்தில் நில ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் எண்ணம் தமது அரசிற்கு இல்லை என்று கோத்தபாய ராஜபக்ச கூறுவதை, மேற்கூறியபடி சிங்களத்தின் இராணுவ முடக்கல் நிலையுடன் சம்பந்தப்படுத்திப் பார்க்கமுடியும். இருந்தாலும் சிங்களப்படைத் தளபதிகள் வன்னி நிலம் மீது போர் தொடுக்கும் எண்ணத்துடனேயே உள்ளனர் என்பது உண்மையாகும்.

சிங்கள அரசு தற்போது சந்தித்துள்ள அரசியல் - இராணுவ நெருக்கடி நிலைகளை அது முன்னரும் பல தடவைகள் சந்தித்துள்ளது. அந்த நெருக்கடிகளை சர்வதேச நாடுகளின் பொருண்மிய மற்றும் அரசியல்

தாயகத் தமிழர்களும் - புலம்பெயர்ந்து உலகெங்கும் வாழும் பலஇலட்சம் தமிழர்களும் புலிகளின் பின்னால் அணிதிரண்டு நிற்பதை உலகம் அவதானித்தபடியே உள்ளது ஒரே தலைமையின் கீழ் - ஒற்றுமை உணர்வுடன் ஈழத்தமிழர்கள் தமது அரசியல் விடுதலைக்காகப் போராடுவதைச் சிங்கள - முஸ்லீம் அரசியல் தலைவர்களே சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த தேசிய ஒற்றுமைதான் எமது விடுதலைப் போராட்டத்தின் பெரும் பலமாகும். இந்த தேசிய ஒற்றுமையின் செயல்பூர்வ வெளிப்பாடான இராணுவ பலமே எமது விடுதலைப் போரை வெற்றிபெறச் செய்யும்.

தமிழரின் படைபலம் இன்று மகிழ்ச்சியளிக்கக் கூடிய வகையில் உயர்தரத்தில் உள்ளது. இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் சிக்கியுள்ள எமது தாயகப் பகுதி நிலங்களில் வாழும் மக்கள் பல்வேறு அவலங்களைச் சந்திக்கின்றனர். இராணுவ வலயங்கள் - பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயர்களில் விரட்டப்பட்ட எமது மக்கள் இப்போது பொருண்மிய வலயங்கள் என்ற பெயரிலும் வெளியேற்றப்பட்டு நில அபகரிப்பு நடைபெறுகின்றது. கொழும்பில் தமிழர்கள் வெளியேற்றப்பட்டதற்குக் கடும் சீற்றத்தை வெளியிட்ட உலகநாடுகள் தாயக நிலப்பரப்பில் தமது வீடுகளைவிட்டு இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் வெளியேற்றப்படுவதை கண்டிக்காது வெறுமனே பார்த்துக்கொண்டிருப்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு புதிராகவே உள்ளது.

மனித உரிமை விவகாரங்களிலும் அரசியல் - மற்றும் நலன்களைக் கலந்து சிந்திப்பது அருவருப்பாகவே உள்ளது. ஆனால் இதுதான் இன்றைய உலக அரசியலின் யதார்த்தம் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ளத்தான் வேண்டும்.

மகிந்த அரசின் இனவெறிச் செயற்பாடுகளையும் - போர் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முனையும் அதன் இராணுவ அணுகுமுறையையும் உலகம் புரிந்துகொண்டு செயற்படவேண்டும் என்றே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.



# சமாதான ஆய்வாளர்கள் செய்யவேண்டிய காரியம்

கு.கவியழகன்

மகிந்த ராஜபக்ச சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது அவரிற்கு எதிராக விழுந்த வாக்குகள் சிங்கள பௌத்தர்கள் அல்லாதவர்களின் வாக்குகள். அவரை இந்த நாட்டின் தலைவராக்க விழுந்த வாக்குகளோ ஏறத்தாளச் சிங்கள பௌத்தர்களில் 80வீத வாக்குகள். ஆகவே சிங்கள பௌத்தர்கள் இந்தக் காலகட்டத்தில் தம்மைத் தலைமை தாங்கும் சித்தாந்தமாக மகிந்த சிந்தனையையே ஆதரித்தார்கள். இதுதான் இந்த இங்கைத்தீவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுத்த முயற்சி தோற்றமைக்கான மையக்காரணி.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதமைக்குக்கும் நடப்பிலிருந்த சமாதானத்தைக் குழப்பியதற்கும் கடந்த சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிக்காதது அல்லது அவ்வாறு வாக்களிக்குமாறு விடுதலைப்புலிகள் கோடி காட்டாததே காரணம் என சர்வதேச சமூகம் விசனமுற்று விடுதலைப்புலிகளை வெறுப்புடன் பார்க்கும் ஒரு நிலைமை இருந்தது. ஆனால் உண்மை எதுவெனில் சிங்கள மக்கள் விடுதலைப்புலிகள் பலவீனப் பட்டுவிட்டதாக நம்பியதும், விடுதலைப் புலிகள் மீதான ஒரு யுத்தத்தின் வெற்றி சாத்தியம் எனவும் அவ்வாறான வாய்ப்புக்கள் இருக்கும்போது சமாதானாத்திற்கான சில சலுகைகள் கூட அனாவசியமானவை என்றும் சிங்கள மக்கள் கருதியதேயாகும். சிங்கள மக்களின் இந்த பொதுவான அபிப்பிராயத்திற்குத் தலை வணங்காமல் ஆட்சியில் யார் இருந்தாலும் அவர் காரியம் செய்யமுடியாது.

ஒருவர் சனாதிபதியாவது வெற்றியைத் தீர்மானிக்கும் சிறுபான்மையினரின் வாக்குகளினாலாக இருக்கலாம். ஆனால் அவர் சனாதிபதியானதும் அவர் காரியம் செய்யவேண்டியது சிங்கள பௌத்தர்களின் அபிப்பிராயத்திற்கே அன்றி சிறுபான்மையினரின் அபிப்பிராயத்திற்காக அல்ல. இந்த நூதனமான அரசியல் மெய்மையை வெளிநாட்டு இராஜதந்திரிகள் கண்டுணர மிகவும் கடினப்படுகிறார்கள்.

80 வீத பௌத்த சிங்களவர்களின் வாக்குகள் மகிந்தவிற்கு கிடைத்ததென்றால் பௌத்த சிங்களவர்களின் பொதுவான அபிப்பிராயமானது யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்றும் அன்னியத் தலையீடுகள் அனாவசியமான விட்டுக் கொடுப்புக்களைத்தான் புலிகளுக்குச் செய்யுமென்றும் இருந்ததாகத்தான் அர்த்தம். ரணில் சனாதிபதியாகியிருந்தால் இந்த அபிப்பிராயத்திற்கு எதிராக ரணிலால் செயலாற்றியிருக்க முடியுமா? அவ்வாறு முடியுமென்ற நம்பிக்கையிருந்தால் இந்த அபிப்பிராயத்தை மாற்றுவதற்காக அவர் எத்தகைய முயற்சி எடுத்தார்? அல்லது இந்த அபிப்பிராயம் ஒரு பொருட்டல்லவெனில் அவர் ஏன் சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் மூலம் புலிகளை விழுத்தியிருப்பேன் என்றும் கருணா பிளவிற்குத் தாங்களே காரணம் என்றும் உரிமை கொண்டாடினார்?. இந்த வினாக்களுக்கு விடை தேடினால் அறியக் கூடியது எதுவெனில் சிங்கள பௌத்தர்களின் அபிப்பிராயத்திற்கு எதிராக ஒரு சனாதிபதி செயலாற்ற முடியாது என்பதே.




சிங்களப் பௌத்தர்கள் மகிந்தவை சனாதிபதியாக்கியதன் மூலம் அடைந்த இலாபம் என்ன? பொருளாதார வளர்ச்சியில் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டதா? வாழ்க்கைத் தரத்தில் ஏதாவது அவர்களுக்குச் சாதகமான மாற்றங்கள் நிகழ்ந்ததா? அல்லது அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நலவாழ்வுத் திட்டங்கள் ஏதும் மேம்பட்டதா? உற்பத்தியாளர்களுக்குப் புதிய வாய்ப்புக்கள் கிடைத்ததா? அல்லது சர்வதேச உறவில் இலங்கைக்கு அந்தஸ்து முக்கியத்துவப் பாத்திரம் கிடைத்ததா? எதுவுமே நடக்கவில்லை. சாதாரண வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மகிந்தவிற்கு வாக்களித்த பௌத்த சிங்களவர்களே திணறுகின்றார்கள். மானியங்கள்கூட நிறுத்தப்படுகின்றன. வெளிநாட்டு வருவாய்க்கான எல்லா மூலங்களும் அடைபட்டுப்போகின்றன. சர்வதேச சமூகம் மகிந்த அரசைத் தனிமைப் படுத்தவும் எத்தனிக்கின்றது. ஆயினும் சிங்கள மக்களின் ஆதரவு அவருக்கு இன்றளவும் உண்டெனில் அது எங்ஙனம் என்ற கேள்விதான் முக்கியமானது.

அது எதுவெனில் சிங்கள மக்கள் மகிந்தவால் அடையப்பெறும் இராணுவ வெற்றிகள் குறித்து மிகவும் உற்சாகத்துடன் இருக்கின்றார்கள். பெருமிதம் கரைபுரண்டு ஓடுகிறது. மகிந்த தன் கட்சியின் மூலம் முன்வைத்த இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டம் ஒரு முட்டாள்த்தனமாகவோ, அல்லது கேலிக்கூத்தாகவோ சர்வதேசத்திற்கும் தமிழர்களுக்கும் படக்கூடும். ஆனால் சிங்கள பௌத்தர்கள் அதை எவ்விதம் பார்க்கின்றார்கள் எனில் அது தங்கள் இனத்தின் மிடுக்கிற்கான வெளிப்பாடென்றே. அத்தகையதொரு உணர்வை அறுவடை செய்வதற்காகவே மகிந்த இப்படியொரு கேலிக்கூத்தான தீர்வைக்கூடத் தன் கட்சியின் தீர்வாக முன்வைத்திருந்தார் என்பதை அடையாளங்காணத் தவறிவிடக் கூடாது.

இன்று தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தை யாரும் தவறாக வியாக்கியானம் செய்யலாம். அது மக்களின் அதிருப்தி காரணமாக எழுந்ததல்ல. மகிந்த அரசாங்கம் அச்சுறுத்தப்படுவது மக்களாலுமல்ல. அது வெறுமனே உட்கட்சி ஆளுமைப் போட்டிகளாலும், சுயநலன்களாலும், பதவி அதிருப்திகளாலும் உருவானது. இதன் மூலம் உருவாகிய அரசியல் குழப்பம் மகிந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு உதவக்கூடும். எதிர்க்கட்சியும் ஆளும் கட்சி அதிருப்தியாளர்களும் இலங்கையில் சமாதானத்தை விரும்பும் சர்வதேச சமூகமும் இணைந்து மகிந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கும் மாற்று அரசாங்கத்தை அமைக்கவும் முடியும். ஆனால் அதன் மூலம் சமாதானத்தை மட்டும் கொண்டுவந்துவிடுவதற்கான வாய்ப்பு கனிந்துவிடும் என்று சர்வதேச சமூகம் நம்பிவிடக்கூடாது. யுத்தத்தின் வலிப்பட்டுப்போயிருக்கும் தமிழ் மக்களும் கூட நப்பாசை அடைந்துவிடக்கூடாது.

ஏனெனில் ஏற்கனவே நாம் கண்டுகொண்டதைப்போல இங்கு அரசாங்கம் மாறினாலும் அது சிங்கள பௌத்தர்களின் அபிப்பிராயத்தினால் மாறும் அரசாங்கம் அல்ல. எனவே மாறும் அரசாங்கமும் இத்தகைய சிங்கள பௌத்தர்களின் அபிப்பிராயத்திற்கே காரியம் செய்யவேண்டியிருக்கும். சர்வதேசத்தின் ஆதரவைத் தமது அரசாங்கத்திற்கு ஒரு காப்பரணாக அமைப்பதற்காகச் சமாதானம் குறித்துச் சில போக்குக்களைக் காட்டி ஏமாற்றலாமே தவிர சமாதானத்திற்காகக் காரியம் செய்யமுடியாது என்பது அவர்களுக்கே தெரியும்.

எனவே சமாதானத்தை விரும்புபவர்கள், குறிப்பாகச் சர்வதேச சமூகம் சமாதானத்திற்கு ஒத்துழைக்கக்கூடிய மனப்பாங்குள்ள அரசாங்கத்தை மட்டும் ஆட்சிக்கு ஏற்றினால் அது நடைபெறாது. மாறாகச் சிங்கள மக்களின் அபிப்பிராயத்தைச் சமாதானத்தின்பால் திருப்புவதற்கான காரியங்களில் இறங்கவேண்டும். ஒப்பீட்டளவில் முன்னர் ரணில் அரசாங்கம் பதவியேறியபோது இத்தகையதொரு மாற்றம் தென்பட்டது. இது சமாதானமாக வாழும் நாகரீக மேன்மை பற்றி ரணில் அரசாங்கம் பிரச்சாரம் செய்தோ அல்லது கொள்கை விளக்கமளித்தோ வந்ததல்ல. புலிகள் மீதான இறுதிவெற்றி நிச்சயம் என்ற கருத்தாக்கத்தை ஏற்படுத்தி அதை பேணிவந்த சந்திரிக்கா அரசாங்கம் புலிகளிடம் இறுதித் தோல்வியைக் காண நேர்ந்துவிடுமோ என்ற அச்சம் தென்னிலங்கையில் உருவாகியதனால் ஆகும். போர்முனையிலும் பொருளாதார மையங்களைப் பாதுகாப்பதிலும் அரசின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாட்டினாலாகும். இதுவே சிங்கள வெகுசன அபிப்பிராயத்தைச் சமாதானத்திற்காக ஆணைகேட்ட ரணிலின் பக்கம் திருப்பியது.

இப்போதும் யாரேனும் சமாதானத்தை விரும்புவார்களேயானால் அது மேற்குலகாகட்டும், இந்தியாவாகட்டும், இலங்கையின் சிறுபான்மைத் தமிழர்களாகட்டும் அல்லது ரணிலாகட்டும் அவர்கள் செய்யவேண்டியது யாதெனில் பௌத்த சிங்கள மக்களை இனத்தீவிரவாதிகளின் பிடியிலிருந்து மீட்பதற்கான காரியமாக இருக்கவேண்டும். அதற்கான செயல் எதுவெனில் ராஜபக்ச சகோதரர்களால் மீண்டும் சிங்கள மக்களிடம் ஏற்படுத்தப்படும் புலிகள் மீதான வெற்றி பற்றிய கருத்தாக்கப் பொய்மையை நிரூபிக்கவேண்டும்.

அவ்வாறு நிரூபிப்பதற்கான மார்க்கம் செறிவான கருத்தாடல்களை அம் மக்களிடையே நடத்தவேண்டும் என்றோ அல்லது இதுமாதிரி வேறொன்றையோ கூறினால் அது ஒரு அபத்தமான பிதற்றல் என்று ஒரு குழந்தைக்குக்கூட விளங்கக்கூடியது. மார்க்கம் ஒன்றுதான், ஒன்றேயொன்றுதான். விடுதலைப்புலிகள் தமது போர் வலிமையை நிரூபித்துக் காண்பிப்பதாகும். சமாதானத்தை விரும்புபவர்கள் செய்யவேண்டிய காரியம் விடுதலைப்புலிகள் இத்தகைய எத்தனத்தை எடுப்பதற்கு எல்லாவகையிலும் ஆதரவு நல்குவதாகும்.

# முற்றுப் பெறாத முற்றுகையும் முடிவு பெறாத வெளியேற்றமும்

நேதாஜி

தமிழர் தாயகத்தில் வடகிழக்கில் போர் நடை பெறுகின்றது. என கூறிக்கொண்டாலும் போர் நடை பெறாத மேல் மாகாணமும் வடமேல் மாகாணமும் அடிக்கடி சுற்றி வளைக்கப்படுகின்றன. முற்றுகைக் குள்ளாகின்றன. தமிழர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு கேட்கப்படுகின்றார்கள். முறையற்ற முறையில் கைது செய்யப்படுகிறார்கள். கடத்தப்படு கிறார்கள். கப்பம் கோரப்படுகின்றது. காணாமல் போய்விடுகின்றார்கள். படுகொலை செய்யப்படு கின்றார்கள். அவிசாவளை, அநுராதபுரம், முத்துராக வல, வென்னப்புவ என பல இடங்களிலும் பல தமிழர்களது சடலங்கள் அடையாளம் காணப்பட முடியாதவாறு சிதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன. இவை நூறுக்குமேல் என கூறப்படுகின்றது.

இத்தகைய இனச் சுத்திகரிப்பின் ஒரு பரிமாணமே கொழும்பிலிருந்து 07.06.2007 அன்று அதிகாலை வேளை 58 பெண்கள் உட்பட குழந்தைகள் முதியோர்கள் என 328பேர் பலவந்தமாக அவர்களது வதிவிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு பேருந்துகளில் ஏற்றப்பட்டு வவுனியா, திருமலை, மட்டக்களப்பு என வடகிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களுக்கே தெரியாத இடங்களில் அகதி முகாம் களுக்குள் இறக்கிவிடப்பட்டனர். இந்த அடிப்படை மனித உரிமை மீறலை சர்வதேசம் கண்டித்தது. ஜனாதிபதி மன்னிப்புக்கோரவில்லை. பிரதமர் மன்னிப்புக் கோரினார். அதை ஒரு அமைச்சர் (டிலான் பெரேரா) பாராட்டினார். ஆனால் இன்னொரு அமைச்சர் அதை (ஜெயராச் பெர்ணாண்டோபுள்ளே) கண்டித்தார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய இராஜபக்ச இந்த கொழும்புத் தமிழர் வெளியேற்றத்தை நியாயப்படுத்தினார். பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேராவை பலிக்கடாவாக்க அரசாங்கம் முயற்சி செய்தது. அவர் இராஜினாமா செய்ய முயன்றார். அது பின்னர் சரிக்கட்டப்பட்டுவிட்டது. 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயம் குறிப்பிடும் இலங்கைப் பிரசைகள் எவருக்கும் இலங்கையின் எப்பாகத்திலும் வாழும் உரிமையுண்டு என்ற சட்ட ஏற்பாடு பொருளற்றுப் போய்விட்டது.


இந்த இனச் சுத்திகரிப்புச் செயற்பாடானது சர்வதேச மட்டத்தில் அராஜகவாதிகளால் மேற்கொள்ளப் பட்ட இனச்சுத்திகரிப்புச் செயற்பாடுகளோடு ஒப்புநோக்கத்தக்கது.


ஜெர்மனிய நாட்டில் வாழ்ந்த யூத இனமக்களை ஹிட்டரின் தளபதியான அடோல்ப் ஹிச்மனின் இராணுவம் கடத்திச் சென்று நாடு கடத்தியது. தென்னா பிரிக்காவில் கொடிய நிறவெறியனான அயன் ஸ்மித் என்ற வெள்ளை இனத்தவன் கறுப்பு இனத்தவர்களை வெளியேற்றித் தனியான குடியிருப்புகளுக்குள் தள்ளிவைத்தான். பொஸ்னியாவில் முஸ்லிம்கள் சர்வாதிகாரி மிலோசுவிக்கின் உத்தரவின் பேரில் இராணுவத்தால் இனச் சுத்திகரிப்புச் செய்யப்பட்டார்கள். இத்தகைய இனச் சுத்திகரிப்பில்தான் இன்று மகிந்த ராஜபக்சவின் இனவாத அரசு ஈடுபட்டுள்ளது. வாழ்க்கைச் செலவு உயர்வாலும் வாழ்க்கைத்தர வீழ்ச்சியாலும் நொந்துபோயிருக்கும் சிங்கள மக்களைத் திசை திருப்புவதற்காகப் பேரினவாதிகள் இத்தகைய அதிரடி நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். இது இன்று நேற்று ஆரம்பமானதொன்றல்ல.

## 1958இல் பண்டாரநாயகா

1958ஆம் ஆண்டு இனக்கலவரம் ஏற்பட்டு தமிழ் மக்கள் தென்னிலங்கையில் தாக்கப்பட்டு ஒரு சில நாட்களில் அகதிகள் ஆக்கப்பட்டு கொழும்பு றோயல் கல்லூரி அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டார்கள். இன்னும் பல இடங்களில் கொழும்பினதும் புறநகரங்களிலும் இவ்வாறு பல அகதி முகாம்கள் திறக்கப்பட்டன. ஆனால் அவர்களால் மீள தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியவில்லை. இறுதியாகக் கொழும்பு அகதிகள் யாவரும் கடல் மார்க்கமாகவே வடகிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். உள்ளூர் யதார்த்தம் ஏற்பட்டது. தமிழ்த்தேசியம் மானசீகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

83 இனக் கலவரத்தின் போது தென்னிலங்கையில் தமிழர் ஒருவர் நிர்வாணமாக்கப்பட்டு சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டு பின் பெற்றோல் ஊற்றி கொலை செய்யப்பட்டார்.






## 1983இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

1983ஆம் ஆண்டு தென்னிலங்கையில் பேரின வாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையைத் தொடர்ந்து தமிழ் மக்கள் கொழும்பிலும் மற்றும் பல இடங்களிலும் கொலை செய்யப்பட்டார்கள். இந்த இனப்படுகொலையின் போது வெள்ளவத்தை, பம்பலப் பிட்டி போன்ற பல இடங்களில் பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்தார்கள். இவர்களைத் தொடர்ந்தும் அகதி முகாம்களில் தங்கவைக்க நேரிட்டதால் அகதி முகாம்களும் தாக்கப்படும் அபாயம் தோன்றியது. இதனால் இவர்களில் பலர் கடல்மார்க்கமாகவே வடகிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டார்கள். இலங்கை அரசுக்குச் சொந்தமான சரக்குக் கப்பலான லங்காராணி, லங்கா கல்யாணி போன்ற கப்பல்களை இலங்கை அரசாங்கம் பயன்படுத்தியது. அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி சிதம்பரம் என்ற பயணிகள் கப்பலையும் வழங்கினார். எல்லாக் கப்பல்களும் கொழும்புத் துறை முகத்திலிருந்து தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு காங்கேசன்துறைத் துறைமுகத்தை நோக்கி வந்து சேர்ந்தன. ஒற்றையாட்சி என்றும் இலங்கை ஒரே நாடு என்றும் கூறிவந்த ஜே.ஆர். வடக்கு கிழக்கு தான் தமிழர் களுக்குப் பாதுகாப்பு என்பதை உட்கிடையாக ஏற்றுக் கொண்டார். 1957இல் உருவாக்கப்பட்ட பண்டா-செல்வா உடன்படிக்கையில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்ற கருத்து காணப்பட்டமையால் தான் கண்டிக்குப் பாதயாத் திரை போனதாகச் சொன்ன ஜே.ஆர். இறுதியில் தமிழர் தாயகம் பற்றிய யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டார். சர்வதேச சமூகமும் தனது மௌனத்தைக் கலைத்தது. இறுகமூடிய கண்கள் அகலத்திறந்தது.

## 2007 மகிந்த இராஜபக்ச

கடந்த 07.06.2007 அன்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய இராஜபக்சாவும் பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேராவும் இணைந்து கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்களைப் பலவந்தமாக வெளியேற்றிப் பேருந்துகளில் ஏற்றித் திருமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற இடங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். மகிந்த இராஜபக்சாவின் ஒருப்பாட்டுடன் இடம்பெற்ற இந்த அப்பட்டமான மனித உரிமை மீறலின்போது 58 பெண்கள் உட்பட 328 தமிழர்கள் இவ்வாறாகப் பலவந்தமாக வடகிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். ஒரே நாடு, ஒற்றையாட்சி என்று முழக்கமிடும் மகிந்த இராஜபக்சவும் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டார். சர்வதேச சமூகம் பலத்த எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

## சொல்லாத செய்தி என்ன?

கடந்த ஐம்பது வருடங்களாக ஆட்சி நடத்தும் இங்கனப் பேரினவாதிகள் பேரினவாத விஸ்தரிப்புக்காக எதைக் கூறிக்கொண்டாலும் உள்ளூர் யதார்த்தத்தை மிறி செயல்பட முடியாதவர்களாகவே இருக்கிறார்கள். 1958ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்போது பிரதமர் பண்டாரநாயக்கா கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களை அத்தனகல்லைக்கோ நோரகொல்லைக்கோ அனுப்பி வைக்கவில்லை. வடகிழக்குப் பிரதேசங்களுக்கே அனுப்பிவைத்தார். 1983ஆம் ஆண்டு இனக்கல வரத்தின்போது ஜே.ஆர். ஜெயவர்த்தனா பாதிக்கப்பட்ட தமிழர்களைத் தனது சொந்த தொகுதியான கொழும்பு மேற்கில் இருந்து வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கே அனுப்பிவைத்தார். அவர்களைத் தனது வாசஸ்தலமான வார்ட் பிளேசிற்கு அழைத்துச் செல்லவில்லை. அங்கு அவரால் பாதுகாப்பு வழங்க முடியவில்லை. வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்கே அனுப்பிவைத்தார். இதே போல மகிந்த இராஜபக்ச குடும்ப ஆட்சியாளர்களும் கொழும்பு விடுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர் களை அம்பாந்தோட்டைக்கோ அல்லது வீரவிலவுக்கோ அனுப்பவில்லை. மாறாக வடக்கு - கிழக்கு மாகாணங் களுக்கே அனுப்பி வைத்தார்கள், தமிழர்கள்;

ஆகவே இங்கே சிங்களப் பேரினவாதிகள் தமது செயல்கள் மூலம் சொல்லாத செய்தி என்ன? சிங்கள தேசம் தமிழர்களுக்குப் பாதுகாப்பானது அல்ல. தமிழர் தாயகம் தான் தமிழர்களுக்குப் பாதுகாப்பானது. இந்த யதார்த்தத்தை எவராலும் மீறிச்செயற்பட முடியாது.

கொழும்புத் தமிழர்கள் கொழும்பில் வாழும் வரை முற்றுகைகளும், சுற்றிவளைப்புகளும் இடம்பெறத்தான் போகின்றன. கொழும்புத் தமிழர்கள் வெளியேற்றப்படும் அவலம் முற்றுப் பெறவில்லை. அது எதிர்காலத்திலும் தொடரத்தான் போகின்றது. சிறிலங்காவின் ஊடக அமைச்சர் அநுர பியதர்சன யாப்பா பத்திரிகையாளர் மகாநாட்டில் அதனை ஒத்துக் கொண்டார். அவர் சொன்ன விளக்கம் ஜனநாயக மரபுகளைப் பேணிப்பாதுகாக்கவே இத்தகைய வெளியேற்றம் என்கிறார்கள். தமிழர் தாயக பூமியை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவக் குவிப்புகளும் மனித உரிமை மீறல்களும் சிறிலங்காவின் ஜனநாயக மரபுகளுக்குள் அடங்க மறுப்பவையாகவே தொடர்ந்தும் இருக்கின்றன.

**விடுதலைப் புலிகள் மக்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல; விடுதலைப் புலிகள் ஒரு மக்கள் இயக்கம்; புலிகள் தான் மக்கள்; மக்கள் தான் புலிகள்.**

**– தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.**

# மக்கள் எழுச்சியும் விடுதலைப் போரும்

**– கலாநிதி க. சோமாஸ்கந்தன் –**

ஒரு விடுதலைப் போராட்டம் வெற்றி பெறவேண்டுமானால் மக்கள் எழுச்சியும் வழிநடத்திச் செல்லும் திறமையான தலைமையும் இருத்தல் அவசியம். தலைமை மக்களில் இருந்து பிறப்பெடுக்கின்றது. அதே தலைமை மக்கள் மனமறிந்து விடுதலைக்கான அனைத்தையும் திட்டமிட்டுச் செய்கின்றது. எழுச்சிபெறாத மக்கள் கூட்டம் விடுதலை பெற்றதாக வரலாறு இல்லை. எழுச்சி மட்டும் போதாது, சிறந்த தலைமையும் வாய்க்கவேண்டும். மக்களும் தலைமையும் ஒன்றிணைந்து செயற்படும்போது விடுதலை உறுதியாகின்றது. எமது விடுதலைப் போராட்டத்தை மலினப்படுத்த விளைவோர் தமிழீழ மக்கள் வேறு தமிழீழ விடுதலைப் புலிகள் வேறு என்று காட்ட முயல்கின்றனர். புலிகள் அமைப்பு மக்களால் உருவாக்கப் பட்டது. புலிகளின் பலம் மக்கள் பலம் வரிசை வவுனியா சுந்தரலிங்கம், மட்டக்களப்பு தம்பிமுத்து, யாழ்ப்பாணத்துப் பொன்னம்பலம் மற்றும் துரையப்பா, பண்ணாகம் அமிர்தலிங்கம் என்று மிகவும் நீளமானது. இன்று நடப்பது மக்கள் மயப்படுத்தப்பட்ட சுதந்திரப் போராட்டம். இங்கு அரசியல் விளையாட்டுகளுக்கு இடமில்லை. தமது தேவையை உணர்ந்த மக்களுக்கு பொருத்தமான தலைமையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்குகிறார்கள்.



உலகின் மிக நெடிய காலம் நீடித்த விடுதலைப் போர் என்று கருதப்படும் அயர்லாந்தின் (IRELAND) வரலாறு இங்கிலாந்தின் இரண்டாம் கென்றி மன்னனின் (HENRY II) *1171*ஆம் ஆண்டு ஆக்கிரமிப்புடன் ஆரம்பிக்கிறது. கத்தோலிக்க மதத்தையும் கெயிலிக் (GAELIC) மொழியையும் தமது முக்கிய அடையாளமாகக் கொண்ட ஐரிஷ் மக்களை அடக்குவதற்கும் அவர்கள் இருப்பை இல்லாதொழிப்பதற்கும் இங்கிலாந்தின் அரசர்களும் ஆட்சியாளர்களும் எடுத்த நடவடிக்கைகள் ஏராளம். மீண்டும் மீண்டும் நடத்தப்பட்ட இராணுவத் தாக்குதல்களாலும், அதற்கு ஐரிஷ் மக்கள் காட்டிய எதிர்ப்பாலும் பெருமளவு பொதுமக்கள் கொல் பாடில்லை. பொத்துவில், அம்பாறை முஸ்லிம்களுக்கு சொந்தமான நிலங்களும், சம்பூர், மூதூர் கிழக்கில் தமிழர்களுக்குச் சொந்தமான பாரம்பரிய கிராமங்களும் சிங்களக் குடியேற்றத்திற்காக அண்மையில் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஐரிஷ் மக்கள் தங்கள் சொந்த மண்ணில் நிலமற்றவர்களாக வாழ குடியேற்றத்தின் மூலம் நிர்ப்பந்திக்கப்பட்டனர். எஞ்சிய அவர்களுக்கான நிலத்திலும் விவசாயம் செய்வதற்குக் கட்டுப்பாடுகளும் தடைகளும் விதிக்கப்பட்டன. ஐரிஷ் மக்களின் பிரதான உணவான உருளைக் கிழங்கு எமக்குச் சோறு போல வாழ்வாதாரமாகும். *1845 – 1849* காலப்பகுதியில் பூஞ்சை நோய் உருளைக் கிழங்குச் செய்கையைப் பாதித்தது. இந்த மூன்று வருடப் பஞ்சத்தில் *1,50,000* ஐரிஷ் மக்கள் உயிரிழந்தனர். பெருந்தொகையானோர் அமெரிக்காவிற்கு கடல்கடந்து சென்று குடியேறினர். அமெரிக்கக் குடிமக்களின் கணிசமான அளவினர் அயர்லாந்து வம்சாவளியினர். அமெரிக்கஅதிபர்கள் கெனடி, ரேகன் ஆகியோர் இதில் அடங்குவர். குடி யேற்றத்தின் பயனாய் *1703*ல் *14*வீத நிலம் மாத்திரம் ஐரிஷ் கத்தோலிக்க மக்கள் கைகளில் இருந்தன. மிகுதியாவும் புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்த இங்கிலாந்தின் குடியேற்றவாசிகளிடம் சென்றுவிட்டன. அயர்லாந்தின் தனி நாட்டுக் கோரிக்கை வலுப் பெறுவதற்கு தொடர்ச்சியாக நடந்த குடியேற்றங்களும் மேற்கூறிய மூன்றுவருடப் பஞ்சமும் காரணமாகின்றன. *1850* தொடக்கம் தேசிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. ஆங்கிலேயர் மீதான வெறுப்புணர்ச்சி முனைப்புப்பெற்றது. ஐரிஷ் மொழி பண்பாட்டை உயிர்ப்பிக்க வேண்டும் என்ற எண்ணமும் சமாந்தரமாக எழுந்தது.



தற்காலப் பொதுவுடமைச் சித்தாந்தத்தின் தந்தையான கார்ள் மாக்ஸ் (KARL MARX 1818 - 1883) ஐரிஷ் மக்களின் விடுதலை வேட்கையை கூர்மையாக அவதானித்துள்ளார். அவர் ஜேர்மனியில் பிறந்த யூதர் எனினும் *1849*ல் லண்டனில் குடிபுகுந்தவர். *1850*ல் கார்ள் மாக்ஸ் அயர்லாந்து ஒரு தனியரசாக அமையக்கூடாது என்ற கருத்தை வெளியிட்டார். *1867*வரை அவர் இந்த நிலைப்பாட்டை எடுத்தார். இதேவருடம் அவர் அயர்லாந்து பிரித்தானியாவிடமிருந்து பிரியத்தான் வேண்டுமென்றார். தனது மன மாற்றத்திற்கான விளக்கத்தை அவர் *1869*ல் வெளியிட்டார். ஆழமான ஆய்வு இம் முடிவை எடுக்கத் தூண்டியது என்றார். இதன் பின்னர் அவர் அயர்லாந்தின் விடுதலைக்கான கருத்தியல் போரை முன்னெடுத்தார். ஆனால் மார்க்சின் கருத்துக்கள் ஐரிஷ் மக்கள் மீது குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தவில்லை. மாறாக ஐரிஷ் இளைய தலைமுறையினர் தனியரசு அமைக்க வேண்டும் என்ற கருத்தைச் சுயமாகக் கொண்டிருந்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப நாட்களில் விடுதலைக்கான இலட்சியத்துடன் சுயாட்சிக் கோரிக்கை அணியினர் (HOME RULE PARTY)குடியரசுவாதிகள் (REPUBLI CANS) போன்ற அமைப்புக்கள் தோன்றின. பிரித்தானியாவுடன் இணைந்திருக்க வேண்டும் என்ற ஐக்கியவாதிகள் கட்சியும் (UNIONISTS) மாறுபட்ட கருத்துடன் தோன்றியது. போராட்டம் வலுப்பெறுவதை உணர்ந்த பிரிட்டிஸ் பாராளுமன்றம் சுயாட்சி மசோதாவை (HOME RULE DILL) *1885*ல் கொண்டுவந்தது. ஆனால் இது வாக்கெடுப்பில் தோல்வியடைந்தது. *1893*ல் இந்த மசோதா கீழ்சபையால் நிறைவேற்றப்பட்டாலும். பிரபுக்கள் சபை அதை நிராகரித்து விட்டது. பேச்சுவார்த்தை பயனற்றது, ஆயுதப் போராட்டம் ஒன்று தான் விடியலைத் தரும் என்று முடிவுக்கு ஐரிஷ் கத்தோலிக்க மக்கள் வந்தனர். ஐரிஷ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முற்றாக மறுப்பது ஆபத்தான கொள்கை என்று உணர்ந்த பிரிட்டிஸ் அரசு *1914*ஆம் ஆண்டு பல நிபந்தனைகள், வரையறைகள் உள்ளடங்கிய சுயாட்சி மசோதாவை நிறைவேற்றியது. இச்சட்டம் குடியரசுவாதிகளைத் திருப்திப்படுத்தத் தவறியது, அவர்கள் பூரண குடியரசுக் கொள்கையை வலியுறுத்தினர். *1916*இல் இக்கொள்கையைக் கொண்ட சில ஆயுதம் தாங்கிய குழுக்கள் போராட்டத்தில் இறங்கின. அரசு அதை இரும்புக்கரம் கொண்டு நசுக்கியது. முக்கிய முன்னணிப் போராளிகள் *18*ப் பேருக்கு அரசு மரணதண்டனை நிறைவேற்றியது. இதன் பின் மக்கள் கொதித்தெழுந்தனர். பாரதூரமான இந்தத் தண்டனை ஐரிஷ் விடுதலைப் போரைத் தீவிரப்படுத்தியதோடு மக்கள் பங்களிப்பையும் விரிவாக்கியது.

பிரித்தானியாவின் இங்கிலாந்துத் தீவுக்கு மேற்கே *50*மைல் தொலைவிலுள்ள அயர்லாந்தை எளிதில் கைவிட அரசு சம்மதிக்கவில்லை. உலக வல்லரசு என்ற நிலையைத் தக்கவைப்பதற்கும் அயர்லாந்து மீதான பிடி அவசியமாக அமைந்தது. அயர்லாந்து விடுதலை பெற்றால் இந்தியா போன்ற நாடுகளுக்கு அது முன்னுதாரணமாக அமையும் வாய்ப்பும் இருந்தது. எனினும் சில அரசியல் சீர்திருத்தங்களை அயர்லாந்திற்கு வழங்க பிரித்தானியா தயாராகியது. *1914*இல் நிறைவேறிய சுயாட்சி மசோதா அதில் முதன்மையானது. *1918*இல் இந்த மசோதாவின் கீழ் அயர்லாந்தின் பொதுமக்கள் சபைக்கான தேர்தல் நடைபெற்றது. இதில் குடியரசுவாதிகள் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றனர். இதைத் தொடர்ந்து குடியரசுவாதிகள் அயர்லாந்தின் பொதுமக்கள் சபையை நிராகரித்தனர். ஈமன் டி வலரா (EAMMON DE VALERA 1882 - 1975) என்ற அமெரிக்காவில் பிறந்த ஐரிஷ் போராட்டத் தலைவரை ஜனாதிபதியாகக் கொண்ட அயர்லாந்துக் குடியரசை அவர்கள் பிரகடனப்படுத்தினர். இதன்பின் ஆங்காங்கே பிரிட்டிஷ் படைகளுக்கு எதிரான கெரில்லாத் தாக்குதல்கள் நடந்தன. இது நாடு தழுவிய போராக இடம்பெற்றது. ஆங்கில – ஐரிஷ் போர் என்று *1919* தொடக்கம் *1921*வரை நடந்த தாக்குதல்கள் வர்ணிக்கப்படுகின்றன. கெரில்லாத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத பிரிட்டிஷ் அரசு குடியரசுவாதிகளைப் பேச்சுக்கு வருமாறு பகிரங்க அழைப்பு விடுத்தது.

டி வலராவின் சம்மதத்தோடு ஆர்தர் கிரிபித் மற்றும் மைக்கேல் கொலின்ஸ் ஆகியோர் பேச்சுக்குச் சென்றனர். புரட்டஸ்தாந்து மதம் சார்ந்த குடியேற்றவாசிகள் பெரும்பான்மையாக வாழும் வட அயர்லாந்து தவிர்ந்த எஞ்சிய பகுதிக்குக் கனடாவுக்குக் கொடுத்ததைப் போன்ற அரசுரிமைத் தகுதியை (DOMINION STATUS) வழங்க பிரிட்டிஷ் அரசு ஒத்துக் கொண்டது. அயர்லாந்துத் தீவு தெற்கு வடக்காகப் பிரிக்கப்பட்டுத் தெற்கு ஐரிஷ் சுதந்திர நாடு (IRISH FREE STATE) என்று அழைக்கும் திட்டம் வகுக்கப்பட்டது. இத்திட்டத்தை குடியரசுவாதிகளின் பெரும்பகுதியினர் ஏற்றுக்கொண்டனர். மேற்கூறிய இருவரும் உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர். வட அயர்லாந்து பிரித்தானியாவுடன் இணைக்கப்பட்டது. இப்போது வட அயர்லாந்துப் பிரச்சினை என்ற புதியவடிவம் தோன்றியுள்ளது. வட அயர்லாந்தை விட்டுக்கொடுத்ததை எதிர்த்துத் தலைவர் டிவலரா உட்பட ஒரு தொகுதியினர் உள்நாட்டுப் போரில் ஈடுபடத் தயாராகினர். *1916*இல் நடந்த தோல்வியடைந்த ஐரிஷ் கிளர்ச்சிக் குழுக்களில் ஒன்றான சின்பெயின் (SINN FEIN) அமைப்பின் கட்டளைத் தளபதிகளில் ஒருவராக டி வலரா இருந்தவர். சின்பெயின் என்றால் கெயிலித் மொழியில் தனியே நாங்கள் (OURSELVES ALONE) என்று பொருள். தெற்கு அயர்லாந்தின் சோக வரலாறாக *1922 –1923* இல் குடியரசுவாதிகள் இரு அணிகளுக்கிடையில் பெரும் உள்நாட்டுப் போர் வெடித்தது. *1923*இல்



என்பது மறுக்க முடியாத யதார்த்தம். தமிழீழ மக்கள் பிரிந்து செல்ல விரும்புகின்றனர். இதற்கமைவாக விடுதலைப் புலிகள் தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைக்கின்றனர்; எண்ணற்ற உயிர்த்தியாகம் செய்து அதற்காகப் போரிடுகின்றனர். மக்கள் விரும்பாததை விடுதலைப் புலிகள் முன்னெடுப்பதற்கு வாய்ப்பில்லை. விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்யும் மாவீரர்கள் தமிழீழ மக்கள் பெற்றெடுத்துச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த பிள்ளைகள் என்பதை மறக்கக் கூடாது. தமிழீழ மக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்திப் பார்ப்போரைக் கண் இரண்டிருந்தும் பார்க்க மறுப்போராகக் கருதுகிறோம்.

தமிழீழ மக்களின் தனி நாட்டுக் கோரிக்கை ஒரு வரலாற்றுத் தேவை. எம் முன்னாட் தலைவர்கள் சிங்களவர்களோடு கூடிவாழ்வது சாத்தியம் என்று நம்பினார்கள். நெருக்கமான நட்புறவுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைமையுடன் கொண்டிருந்தனர். தமது இருப்பிடங்களைக் கொழும்பில் அமைத்துக் கொண்டனர். அப்படியானவர்களில் ஒருவரான வவுனியா பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.சுந்தரலிங்கம் தமிழீழக் கோரிக்கையை பகிரங்கமாக எழுப்பினார். அவர் தனது பேரப்பிள்ளைகளுக்கு "ஈழப்போராட்டம்" என்ற கடிதத்தொகுப்பை தனது இறுதிக்காலத்தில் விட்டுச்சென்றார். ஆனால் தனது கணக்கியல் மூளை கொண்டு டொனமூர் ஆணையத்தின் அரசியல் பரிந்துரைகளுக்கு அமைவாக முழுச்சிங்கள அமைச்சரவை (PAN SINHALA CABINET)அமைக்கச் சுந்தரலிங்கம் ஆலோசனை வழங்கினார். தமிழ்த் துரோகிகள் லப்பட்டனர். *17*ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இங்கிலாந்தின் மன்னர் ஆட்சியை தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டு வந்த சர்வாதிகாரி ஒலிவர் குரொம்வெல் (OLIVER CROMWELL) (1599-1658)பெருமளவு ஆங்கில குடியேற்றவாசிகளை அயர்லாந்துத் தீவில் குடியேற்றினான். அயர்லாந்துத் தீவு இங்கிலாந்தின் மேற்கில் அமைந்துள்ளது, *31,839* சதுர மைற் பரப்பைக் கொண்டுள்ளது. இங்கிலாந்துத் தீவுக்கு அடுத்த மிகப் பெரிய நிலப்பரப்பை அது கொண்டுள்ளது.

ஒரு மக்கள் கூட்டத்தின் தேசியக் கட்டமைப்பையும் பாரம்பரிய அடையாளத்தையும் அழித்தொழிப்பதற்கு இங்கிலாந்து கண்டுபிடித்த உபாயமாகக் குடியேற்றம் சுட்டிக்காட்டப்படுகிறது. எதிர் போராட்டங்கள் எழவிடாது ஊடறுப்பதற்கும் குடியேற்றப்பட்ட நாட்டைத் தமது என்று கோருவதற்கும் இந்த உபாயம் வகைசெய்கின்றது. குடியேற்றம் பற்றி இத்தாலியின் அரசியல் தத்துவாசிரியன் மாக்கியாவெல்லி(MACHIAVELLI) (1469-1527)பின்வருமாறு கூறுகிறார். "அரசன் தான் கைப்பற்றிய பகுதியை தனது ஆதிக்கத்தின் கீழ் தொடர்ந்து வைத்திருக்கவேண்டுமாயின் அங்கு தனது குடியேற்றங்களை ஸ்தாபிப்பது, இராணுவமுகாம்களை விட மேலானதாகும். ஏனெனில் இராணுவத்திற்கு அரசனே ஊதியம் கொடுக்கவேண்டும். குடியேற்றப்படுவோர் சந்ததி சந்ததியாக அந்த மண்ணில் நின்று தாக்குப்பிடிக்கக் கூடியவர்களாவர். எனவே குடியேற்றம் ஒரு வகை நிரந்தர இராணுவமாகும்." சிங்களவர்கள் சுதந்திரம் பெற்ற நாட்தொட்டு மாக்கியாவெல்லியின் கோட்பாட்டுக்கு அமைவாகத் தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை அமைக்கின்றனர். இன்னுமது ஓய்ந்த

அமைதி ஏற்பட்டது. சின்பெயின் அமைப்பிலிருந்து விலகிய டி வலரா தனது தலைமையில் புதிதாகவொரு குடியரசுக் கட்சியைத் தொடங்கினார். *1932*இல் அவர் நாட்டின் தலைமைப் பதவியைத் தேர்தல் மூலம் கைப்பற்றினார். *1948* வரை அவர் இப்பதவி வகித்தார். அவருடைய பதவிக் காலத்தில் *(1938)* தெற்கு அயர்லாந்திலுள்ள பிரிட்டிஷ் இராணுவத் தளங்கள் அகற்றப்பட்டன. *1938*இல் தெற்கு அயர்லாந்து என்றும் ஐரிஷ் சுதந்திர நாடு என்றும் அழைக்கப்பட்ட பகுதி அயர்லாந்து என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இன்று அயர்லாந்துக் குடியரசு ஐ.நா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றில் உறுப்புரிமை பெற்ற செழிப்பான தனி நாடாக இடம்பெறுகிறது.

ஏறத்தாழ முப்பது வருடகாலம் நீடித்த எரித்திரிய விடுதலைப்போர் மேற்கு நாடுகள் உருவாக்கிய சுயநிர்ணயக் கோட்பாட்டைத் தமது இராணுவ கேந்திர நலனுக்கு ஏற்றவாறு அதே மேற்கு நாடுகள் மீறியதால் ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகளின் காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட ஆசிய – ஆபிரிக்க நாடுகளுக்கு சுய நிர்ணயக் கோட்பாடு அடிப்படையில் விடுதலை நிவாரணம் உண்டு என்ற விதிமுறை எரித்திரிய மக்களுக்கு மறுக்கப்பட்டது. போர் என்பது அரசியலின் நீட்சி என்ற வாக்கியத்திற்கு உதாரணமாக எரித்திரியாவின் விடுதலைப்போர் அமைகின்றது. இத்தாலியின் காலனித்துவ ஆட்சியின் கீழ் *1889* தொடக்கம் *1941*வரை எரித்திரியா கிடந்தபின் *1941* தொடக்கம் *1952*வரையில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தது. இரண்டாம் உலகப்போரில் தோல்வி அடைந்த இத்தாலி வெற்றிபெற்ற நாடுகளுடன் செய்த உடன்படிக்கையின் அடிப்படையில் தனது காலனித்துவ நாடுகளுக்கு விடுதலை வழங்கச் சம்மதம் தெரிவித்தது. லிபியா, சோமாலியா ஆகியவை இதன்படி விடுதலைபெற்றன. ஆனால் எரித்திரியாவுக்கு விடுதலை வழங்கப்படவில்லை. மாறாக அது எதியோப்பியாவின் பிற்போக்கு மன்னர் கெயில் செலார்சியின் (HAILE SELASSIE) ஆட்சிக்கு வழங்கப்பட்டது. எரித்திரியாவின் ஆயிரம் மைல் நீளமான கிழக்கு எல்லை செங்கடல் ஓரமாக இருந்தது. அமெரிக்காவின் இராணுவத் தேவைக்கும் புவியியல் அரசியல் நலனுக்கும் செங்கடல் கரையோரம் அதற்குத் தேவைப்பட்டது. அத்தோடு எரித்திரியாவின் அஸ்மாரா நகர்ப்புறத்தில் பிரிட்டிசார் அமைத்த தொலைத் தொடர்பு நிலையத்தை தனதாக்க அமெரிக்கா விரும்பியது. நாங்கள் உங்களுக்கு எரித்திரியாவைப் பெற்றுத் தருகிறோம், நீங்கள் எங்கள் பாவனையில் மேற்குறித்த நிலையத்தை விட்டு விடுங்கள் என்று எதியோப்பியாவுடன் அமெரிக்கா பேரம் பேசியது. எரித்திரியாவைப் பிரித்தானியாவும் அமெரிக்காவும் கூட்டாக வஞ்சித்தன.

இதன் பிரகாரம் எரித்திரியா, எதியோப்பிய அரசரின் கீழுள்ள தன்னாட்சியுடைய பகுதியாக அமெரிக்கா ஒழுங்கமைத்த ஐ.நா தீர்மானம் பிரகடனஞ் செய்தது. நன்கு விவரிக்கப்படாத சமஷ்டி முறையின் கீழ் எரித்திரியா ஆட்சி செய்யப்படும் என்றும் கூறப்பட்டது. ஆனால் இந்த சந்தேகத்திற்கிடமான சமஷ்டி ஆட்சிமுறை பற்றிப் பேசப்பட்ட *1952*ஆம் ஆண்டிற்குப் பின் எரித்திரிய மக்களின் தன்னாட்சி உரித்துக்களைப் பறிப்பதில் மன்னர் செலாசி வேகமாக ஈடுபட்டார். சமஷ்டி ஆட்சிமுறையை அறிமுகம் செய்த ஐ.நா எரித்திரிய மக்களின் முறைப்பாடுகளை ஏற்க மறுத்தது. ஐ.நாவின் மறுப்பைச் சாதகமாக ஏற்றுக்கொண்ட அரசர் *1962*இல் சமஷ்டி முறைமையை அழிப்பதாகப் பிரகடனஞ்செய்தார். *1961* இல் தொடங்கிய எரித்திரிய விடுதலைப் போர் *1970* அளவில் பரந்துபட்ட மக்கள் போராக வளர்ச்சி கண்டது. மேற்குலகம் தம்மை ஏமாற்றிவிட்டதை அவர்கள் நன்கு உணர்ந்தனர். செலாசியும் அவர் சார்ந்த மேற்குலகமும் எரித்திரியப் போரைப் பிரிவினைப் போர் என்று பிரசாரம் செய்தனர். உண்மை அப்படி இல்லை. மக்கள் விருப்பத்திற்கு மாறாகப் பிறிதோர் நாட்டுடன் இணைக்கப்பட்ட ஒரு நாடு தனது இழந்த விடுதலையை மீழப்பெற நடத்தும் போராகத் தான் அது இருந்தது. இதை ஆபிரிக்க நாடுகள் உணர்வதற்குப் பல வருடம் எடுத்தது.

எதியோப்பிய மன்னர் கெயில் செலாசியின் ஆட்சி இராணுவப் புரட்சி மூலம் *1974*இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. கேணல். மென்கிஸ்து கெயில் மரியம் (COL. MENGISTU HAILE MARIAM) தலைமையிலான இளம் இராணுவ அதிகாரிகள் ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்கள் கொமியூனிசச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கினர். விவசாய நிலங்கள், தொழிற்சாலைகள், நிதி நிறுவனங்கள், ஏற்றுமதி இறக்குமதி என்பவற்றை இந்த இராணுவ ஆட்சியாளர்கள் தேசிய உடமையாக்கினார்கள். *1972 – 1974* காலப்பகுதியில் எதியோப்பியாவில் நிலவிய மிகக் கொடிய பஞ்சத்தின் விளைவுகளை இந்த நடவடிக்கை கட்டுப்படுத்தும் என்று அவர்கள் நம்பினார்கள். மாறாக உள்நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. இதைச் சாதகமாகப் பயன்படுத்திய எரித்திரியப் போராளிகள் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி (ERITREAN PEO PLE'S LIBERATION FRONT - EPLF) என்ற அமைப்பின் கீழ் ஒன்று திரண்டு தாக்குதல்களை தீவிரப்படுத்தினர். எதியோப்பிய இராணுவ ஆட்சியாளர்களின் கொள்கைகளும் செயற்பாடுகளும் நிதி மற்றும் ஆயுத உதவிகளை வழங்கிய அமெரிக்காவுக்கு வெறுப்பூட்டியது. அமெரிக்கா தனது உதவிகளை நிறுத்திய போது சோவியத் ஒன்றியம் வெற்றிடத்தை நிரப்பியது. குண்டு வீச்சு விமானங்கள் உட்படப் பல தரப்பட்ட நவீன ஆயுத தளபாடங்களையும் இராணுவ ஆலோசனைகளையும் சோவியத் ஒன்றியம் எதியோப்பியாவிற்கு மிகக்குறைந்த விலையிலும் இலவசமாகவும் வழங்கியது. ஆனால் எதியோப்பிய இராணுவத்தால் எரித்திரிய விடுதலைப் போரை மடக்க முடியவில்லை. விடுதலைக்காக எரித்திரிய மக்கள் கொடுத்த விலை மிகப் பெரியது. ஒரு மக்கள் கூட்டம் விடுதலையே குறியாக, இழப்புக்களைப் பொருட்படுத்தாது போராடத் துணிந்தால் எந்தவொரு சக்தியாலும் அவர்களை வீழ்த்த முடியாது. இதற்கு எரித்திரியா சிறந்த உதாரணம்.

மக்கள் ஆதரவையும் சோவியத் ஒன்றியத்தின் நம்பிக்கையும் இழந்த கேணல் மென்கிஸ்துவின் இராணுவ ஆட்சி *1991* மே மாதத்தில் வீழ்ச்சி அடைந்தது. குறைந்த விலையிலும் இலவசமாகவும் வழங்கிய தனது ஆயுத தளபாடங்களை முன்னேறிவரும் எரித்திரியப் போராளிகள் அள்ளிச் செல்வதை சோவியத் ஒன்றியத்தால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இனி பணம் தந்தால்தான் எமது இராணுவ உதவி என்ற நிலைக்குச் சோவியத் ஒன்றியம் வந்தது. *1991* மே *24*ஆம் நாள் எதியோப்பிய இராணுவத்திற்கு எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணிப் போராளிகள் இறுதியடி கொடுத்து வெற்றிவாகை சூடினர். அதன் பின் சர்வதேச சமூகம் எரித்திரிய நாட்டின் தோற்றத்தை அங்கீகரிக்கவேண்டிய நிலை தோன்றியது. ஐ.நா தலைமையிலான மக்கள் கருத்துக்கணிப்பு *1993* ஏப்பிரலில் நடத்தப்பட்ட பின் எரித்திரியா நாடு சட்டபூர்வமாக உதயமாகியது. "இராணுவ வெற்றிகளுடன் மக்களின் பங்களிப்பு இணைந்து நாட்டின் தோற்றத்திற்கு இடமளித்தது" என்ற ஆய்வாளர் மேலும் கூறுகின்றார். "முதலாவதாக உயிர், பொருள் அனைத்தையும் பாரிய அளவில் இழந்த நிலையிலும் அந்த மக்கள் தமது விடுதலை அமைப்பிற்கு ஆதரவு அளித்தமையும், இரண்டாவதாக விடுதலை அமைப்பு வெளிப்படுத்திய தாக்குப்பிடிக்கும் வலு, படை நடத்தும் திறன், ஆயுதங்களைக் கையாளும் திறமை, எதிரியின் தரை அமைவு பற்றிய நுண்ணறிவு என்பனவும், மூன்றாவதாக எரித்திரியப் போராளிகளின் கட்டுப்பாடுடன் கூடிய கட்டமைப்பு, அனுபவ அறிவுமிக்க கட்டளை பீடம், துல்லியமாகத் தாக்கும் சிறப்பு ஆகியவற்றைக் கொண்டிருந்தமையும், நான்காவதாக போருக்கு மத்தியில் கல்வி, சுகாதாரம் உள்ளடங்கலான மக்கள் நலன் பேணும் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தியமை யும், ஐந்தாவதாக நாம் மக்களோடு மக்களானவர் என்பதைப் போராளிகள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்தமையும் வெற்றியின் காரணங் களாக அமைகின்றன" (THE ERITREAN STRUGGLE FOR INDEPENDENCE-DOMI NATION, RESISTANCE AND NATIONALISM 1941 - 1993, BY RUTH IYOB, CAMBRIDGE. U.K 1995)

விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்யும் மாவீரர்கள் தமிழீழ மக்கள் பெற்றெடுத்துச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த பிள்ளைகள் என்பதை மறக்கக் கூடாது. தமிழீழ மக்களையும் தமிழீழவிடுதலைப் புலிகளையும் வேறுபடுத்திப் பார்ப்போரைக் கண் இரண்டிருந்தும் பார்க்க மறுப்போராகக் கருதுகிறோம்.



தற்கால ஆபிரிக்காவின் மிக நீண்ட காலம் நிலவிய ஆயுதப் போரான எரித்திரிய விடுதலைப் போர் பற்றிப் பார்த்தபின் தென்னாபிரிக்காவின் வெள்ளை நிற வெறியரசிற்கு எதிரான கறுப்பின மக்களின் நடவடிக்கையைக் கருத்தில் எடுப்போம். தென்னாபிரிக்க நாட்டிற்கும் தமிழர்களுக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. தமிழீழ மக்கள் நடத்தும் விடுதலைப்போருக்கு அங்கு காத்திரமான ஆதரவுப்புலம் இருப்பதற்கு இதுதான் காரணம். தென்னாபிரிக்காவை ஆட்சி செய்த வெள்ளையர்கள் கறுப்பினப் பூர்வக் குடிகளை அடக்கியொடுக்கி வேலை வாங்கச் சிரமப்பட்டனர். இந்தியாவிலிருந்து ஏழைத்தொழிலாளர்களை வெள்ளையர்கள் அழைத்துச்சென்றனர். இவர்களிற் பெரும்பாலானோர் தமிழர்கள். தெலுங்கர்களும், குயராத்திகளும் சிறு எண்ணிக்கையில் இருந்தனர். இவர்களுக்கு ஒப்பந்தக்கூலிகள் என்று பெயர். இவர்கள் ஐந்து ஆண்டு காலம் வெள்ளை முதலாளியிடம் வேலை பார்க்க வேண்டும். ஐந்தாண்டு முடிந்தபின் விரும்பினால் அதே முதலாளியிடம் மேற்கொண்டு ஐந்துவருட காலம் தொடர்ந்து பணியாற்றலாம். *21* வருடகாலம் தென்னாபிரிக்காவில் தங்கியிருந்து வக்கில் தொழிலையும், இந்திய மற்றும் கறுப்பின மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய காந்தி அடிகள் தமிழர்களோடு நெருங்கிப் பழகினர். காந்தி நடத்திய போராட்டத்தில் பங்கு பற்றிய தமிழர்களில் பலர் சிறையில் உயிர் நீத்துள்ளனர். அவர்களில் ஒருவர் *17* வயதினரான தில்லையாடி வள்ளியம்மை. இவர் சிறையில் கடும் சித்திரவதைக்கு உள்ளாகி விடுதலையான சில நாட்களில் உயிர்நீத்தார். சத்திய சோதனை என்ற காந்தியடிகளின் தன் வரலாற்று நூலில் "வள்ளியம்மையின் உடல் மறைந்தாலும் அவர் பெயர் என்றென்றும் நிலைத்திருக்கும்" என்ற குறிப்பு உள்ளது. வள்ளியம்மையைப் போல் நாகப்பன், நாராயணசாமி ஆகிய தமிழ் இளைஞர்களும் தென்னாபிரிக்க வரலாற்றில் இடம்பிடித்துள்ளனர்.

காந்தியடிகள் "இந்தியன் ஒப்பீனியன்" என்ற ஆங்கிலப் பத்திரிகையை அங்கிருந்த போது நடாத்தினார். தமிழர்களுக்காக இப்பத்திரிகையின் தமிழ் பதிப்பையும் அவர் வெளியிட்டார். தமிழ் தொழிலாளர்களுடன் உரையாடுவதற்காக அவர் இயன்றளவு தமிழ் மொழியைக் கற்றார். தென்னாபிரிக்காவில் தமிழர்கள் பற்றிக் காந்தி, "போராட்டத்தின் கடுமையைத் தாங்கியவர்கள் தமிழர்களே. உயிர்த்தியாகம் செய்தவர்களில் மிக அதிகமானவர்கள் தமிழர்கள். கடைசிவரை போராடியவர்களும், கடைசியாகச் சிறையிலிருந்து வெளிவந்தவர்களும் தமிழர்களே" என்று கூறியுள்ளார். (ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு, எழுதியவர் ஐ.சண்முகநாதன், பூம்புகார் பதிப்பகம் சென்னை. *2003*. பக்கங்கள் *93–94*) கறுப்பினத்தவர்களின் இன விடுதலைப் போருக்கு அடியெடுத்துக்கொடுத்தவர்கள் இந்தியர்களே. இதை மூத்த கறுப்பின விடுதலை வீரர்கள் மறக்கவில்லை. ஈழத்தமிழர்களின் விடுதலை முன்னெடுப்பில் நெல்சன் மண்டேலா உள்ளிட்ட பெருந்தலைவர்கள் அக்கறை காட்டுகின்றார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்காகச் சென்ற மாதம் இரு கோடரிக் காம்புகளை மகிந்த ராஜபக்ச அரசு தென்னாபிரிக்கா அனுப்பியது. அமைச்சர் டக்கிளஸ் தேவானந்தாவும், நாடோடி ஆனந்த சங்கரியும் பல கோப்புக்கள், அறிக்கைகள் போன்றவற்றை தென்னாபிரிக்கா எடுத்துச்சென்றனர். இவர்களோடு பேசிய ஒரு மூத்த கறுப்பினத் தலைவர் முகத்தில் அறைந்தாற்போல் இருவருக்கும் பின்வருமாறு கூறினார். "நாங்கள் வெள்ளை நிறவெறி அரசுடன் போராடிய காலத்தில் சில கறுப்பர்கள் வெள்ளையர்களின் கைக் கூலிகளாகச் செயற்பட்டனர். நாடு நாடாகச் சென்று எமக்கு எதிராகப் பிரசாரம் செய்தனர். அவர்கள் கைகளிலும் கோப்புக் களும் அறிக்கைகளும் இருந்தன"

மனித நாகரீக வரலாற்றில் மிகவும் அநாகரீக ஆட்சிமுறையாகக் கருதப்படும் அப்பாத்தைற் (APARTHEID) என்ற இன ஒதுக்கல் முறைமை தென்னாபிரிக்கா என்ற நாடு தொடங்கிய *1910*ஆம் ஆண்டு தொடக்கம் *1994*இல் கறுப்பர்கள் தலைமையில் மக்கள் ஆட்சி ஏற்படும் வரை நிலவியது. அப்பாத்தைற் ஆயுட்காலம் ஏறத்தாழ *84* வருடங்கள் என்று கணிப்பிடப்படுகின்றது. இந்த ஆட்சி முறையின் அடித்தளமாக வெள்ளையர்கள் நிறைவேற்றிய *1913*இன் நிலவுரிமைச் சட்டம் (THE LAND ACT OF 1913) அமைகின்றது. இதன் மூலம் கறுப்பர்கள் தாம் பிறந்த நாட்டிலேயே *87*வீதமான நிலத்தை இழந்தனர். தென்னாபிரிக்காவின் வளமான மண்ணை இச் சட்டம் வெள்ளையர் உடமையாக்கியது. *1923*ஆம் ஆண்டில் வெள்ளையர்கள் உருவாக்கிய நகர்ப்புறச் சட்டம் (THE URBAN ACT OF 1923) கறுப்பின மக்களைச் சுகாதார வசதிகள் அற்ற சேரிவாழ்விற்குத் தள்ளியது. *1936*இல் நிறைவேற்றப்பட்ட சுதேசிகள் பிரதிநிதித்துவச் சட்டம் (THE REPRESENTATION OF NATIVES ACT OF 1936) கறுப்பர்களின் வாக்குரிமையைப் பறித்தது. *1913*ஆம் ஆண்டின் நிலவுரிமைச்சட்டம் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. *87* வீதமான நிலம் *3*மில்லியன் வெள்ளையர்களுக்குச் சொந்தமாக்கப்பட்டது. எஞ்சிய *13*வீதமான நிலம் *8*மில்லியன் கறுப்பர்களின் வாழ்விடமாக அனுமதிக்கப்பட்டது.

*1950*இல் நிறைவேற்றப்பட்ட இரு வெவ்வேறு சட்டங்கள் இன ஒதுக்கல் கொள்கையை நிறுவனமயப்படுத்தியது. முதலாவது மக்களின் பதிவுச்சட்டம் (POPULATION REGISTRATION ACT) இச் சட்டப்படி தோலின் நிற அடிப்படையில் அனைவரும் வெவ்வேறாகப் பதிவு செய்யப்பட்டனர். இரண்டாவது குழும வாழ்விடச்சட்டம் (GROUP AREAS ACT) கறுப்பர்களும் இந்தியர்களும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் மாத்திரம் வாழ முடியும். அதே பகுதி வெள்ளையர்களுக்குத் தேவைப்பட்டால் அங்கு வாழ்வோரை பொலிஸ் மற்றும் இராணுவ உதவியோடு அப்புறப்படுத்த இச் சட்டம் வகை செய்கின்றது. இப்படியாகச் சட்டத்தின் மூலம் மிகப்பலம் வாய்ந்த நவீன பொலிஸ் மற்றும் இராணுவ உதவியோடு இன ஒதுக்கல் ஆட்சி நடைமுறையில் இருந்தது. மீறுவோரைத் தண்டிக்க மிகக்கொடிய கிருமினல் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதன் கீழ் கறுப்பர்களின் பெருந்தலைவர் நெல்சன் மண்டேலா *27* வருடம் *6*மாதம் சிறையில் அடைபட்டார். விடுதலையான போது அவருக்கு வயது *71*. மார்ச் *21, 1960* இல் கறுப்பர்கள் போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அன்று வெள்ளைப் பொலிஸ் *69* அப்பாவிக் கறுப்பர்களைச் சுட்டுக்கொன்றது. இது சார்ப் வில் சம்பவம் (SHARPEVILLE INCIDENT) என்று குறிப்பிடப்படுகின்றது. மக்கள் எதிர்ப்பு வெளிப்படையாக நடந்தது. *1960* இற்குப் பின் உலகநாடுகள் வெள்ளை அரசிற்கு எதிராகப் பொருளாதாரத் தடையைப் படிப்படியாகக் கொண்டு வந்தன. *1976*இன் சொவெற்றோ (SOWETO) மாணவர் படுகொலை வெள்ளை அரசின் முடிவுக்குக் கட்டியம் கூறியது. கறுப்பர்களின் ஆயுதப்போராட்டம் தீவிரமடைந்ததோடு, பொருளாதாரத் தடைகளும் வலுப்பெற்றன. இன ஒதுக்கல் கொள்கையை நிறுத்திய வெள்ளையர்கள் பெரும்பான்மைக் கறுப்பர்களிடம் ஆட்சியை *1994*இல் ஒப்படைத்தனர்.



# தடங்கள் தொடர்கின்றன...

மலைமகள்

தனது 50 கலிபர் சுடுகலன் அணியில் தான் உட்பட எல்லோருமே காயமடைந்து, சிலர் வீரச்சாவடைந்துவிட, அந்தக் கணத்தில் – 50 கலிபர் சுடுகலனைப் பாதுகாக்க வழியற்றுத் தவித்துப்போனார் கப்டன் இசைநிலா. நகரவே முடியாத காயம் எனினும் குற்ற



**கப்டன் எழில்நிதி**
*வீரசிங்கம் விஜிந்திரா*
*யாழ்ப்பாணம்.*

உணர்வு உறுத்திக்கொண்டிருந்தது.

அந்தச் சுடுகலனை நகர்த்துமாறு இசைநிலா கத்திக்கொண்டிருந்தார். 2006.08.11 அன்று யாழ் மாவட்டத்தின் முகமாலை, கிளாலிப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சியை முறியடித்து விடுதலைப்புலிகளின் அணிகள் முன்னேறிவிட்டிருந்தன. கிளாலிக் கரையோரப் பகுதியால் உள்நுழைந்த லெப்.கேணல் கலைவிழியோடு கப்டன் இசைநிலாவின் 50 கலிபர் சுடுகலன் அணியும் புகுந்துவிட்டிருந்தது. பல அணிகள் பல வழிகளால் நுழைந்திருந்தாலும், சமகாலத்தில் எல்லோராலும் சம தூரத்துக்கு நகரமுடியாததால், உட்புகுந்த புலி அணிகள் ஒன்றை ஒன்று சந்திக்க முடியாமல் தனித் தனியாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. ஒவ்வொரு அணியிலுமிருந்த ஒவ்வொரு போராளியும் சிறிலங்காப் படையினரின் பலபக்கத் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

கரையோரமாகப் போன லெப்.கேணல் கலைவிழியின் அணி மிக வேகமாக, சிறிலங்காப் படையினரின் இரண்டாம் நிரைக் காப்பரண்களை அண்மித்துவிட்டிருந்தது. எனினும் கடுமையான அந்தச் சண்டையில் பலர் காயமடைய நேரிட்டது. காயமடைந்தவர்கள் தாமாக நகர்ந்து வெளியேறுவதற் கிடையில் மறுபடி மறுபடி எதிர்த் தாக்குதல்களைச் சந்தித்தனர்.

இயலாத காயத்துடன் தனது சுடுகலனையே நினைத்தபடி “எடுத்துக்கொண்டு வா, எடுத்துக்கொண்டு வா” என்று போர்க்களத்தைவிட்டு வெளியேறிய பின்பும் இசைநிலா கத்திக்கொண்டிருந்தார். எடுத்துவரக்கூடிய நிலையில் களத்தில் எவருமில்லை.

இதே முன்னரங்கில் இதற்கு முன்னரும்

**லெப். தமிழ்சுடர்**
*சந்திரன் சர்மிகா*
*யாழ்ப்பாணம்.*



சிறிலங்காப் படையினரின் கடுமையான முன்னகர்வை இசைநிலா திறமையுடன் எதிர்கொண்டிருந்தார். அப்போது அவர் பிகே.எல்.எம்.ஜி சுடுகலனின் சுடுநராக இருந்தார். தீச்சுவாலை – 01 என்று பெயரிட்டு சிங்களப் படையினர் செய்த மூன்று நாள் முற்றுகைச் சமரில் முன்னரங்கக் காப்பரண்கள் இரு தரப்பிடமும் மாறி மாறி கைமாறிக்கொண்டிருந்தன. எஞ்சி நின்று போராடிக்கொண்டிருந்த விடுதலைப் புலிகளுக்கு பின்னரங்கிலிருந்து உதவிகள் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கவில்லை. முகமாலைப் பகுதியில் துண்டாடப்பட்ட நிலையில் களமாடிக்கொண்டிந்த இரு அணிகளில் ஒன்றில் இசைநிலா நின்றார். பிகே.எல்.எம்.ஜியின் பொறுப்பாளரும் உதவியாளருமில்லாமல் தனித்து நின்ற இசைநிலாவிடம் மூன்று நாட்களும் ரவைகளுக்குப் பஞ்சமிருக்கவில்லை. வீழ்ந்து கிடந்த சிங்களப் படையினரிடமிருந்து தேவையான ரவைகளை எடுத்துக்கொண்டிருந்தார். மேலதிகமான சுடுகுழல் ஒன்றைக்கூட சிங்களப் படையினரின் சுடுகலனிலிருந்து கழற்றிவைத்திருந்தார்.

மூன்று நாட்கள் தொடர்ந்த தீச்சுவாலை முறியடிப்புச் சமரில் மேலதிக ரவைக்கூட்டு அணியையும் கழற்றாமல் களைப்பை வென்று களமாடிய இசைநிலாவுக்கு இப்போது அதனிலும் பெரிய சுடுகலன் ஒன்றைவிட்டு வந்தது. நெஞ்சைச் சுட்டுக்கொண்டிருந்தது.



**லெப்.கேணல் கலைவிழி**
*நல்லதம்பி நித்தியா*
*யாழ்ப்பாணம்.*

காயத்தோடும் மனதோடும் போராடிய இசைநிலா 2006.08.16 அன்று மருத்துவமனையில் விழிமூடிப்போனார்.

★★★

லெப்.கேணல் கலைவிழி போன கரையோரப் பாதைவழியே லெப்.தமிழ்சுடர் தனது உந்துகணை செலுத்தியுடன் போயிருந்தார். தேவையான இடங்களில் எதிரிக் காப்பரண்களைத் தாக்கி விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது இடையில் அதைக் கண்டார். அது கப்டன் இசைநிலா அணியினரின் 50 கலிபர் சுடுகலன். அந்த அணியினர் இழப்பைச் சந்தித்துவிட்டனர் என்பதை தமிழ்சுடர் புரிந்துகொண்டார். தன்னால் தனித்து அதைத் தூக்கிச் செல்லவும் முடியாது என்பதால் தகர்த்துவிட்டார். எமக்கு இல்லாதது எதிரிக்கும் இல்லாது போகட்டும்.

★★★

கடற்கரைப் பாதைவழியே முன்னிலை நோக்குணராக கப்டன் இசைநிலா போனார். அவர் திரும்பிய திசையெல்லாம் சிறிலங்காப் படையினரே தென்பட்டனர். காப்பரண்கள், குறுக்கு அகழிகள், அங்கே, இங்கே என்று சிறிலங்காப் படையினரைத் தான் கண்ட இடங்களின் ஆள்கூறுகளைக் கணிப்பிட்டு, எறிகணைசெலுத்தும் அணிக்கு அறிவித்துக்கொண்டிருந்தார். சிங்களப் படையினரின் தலைகளில் இடியாக எறிகணைகள் விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன. எனினும் மழைக்குச் சற்றுமுன்னர் புற்றிலிருந்து புறுப்பட்டுவரும் ஈசல்கள் போல படையினர் வந்துகொண்டிருந்தனர்.

அங்கே, இங்கே என்று எறிகணைகளை

**கப்டன் இசைநிலா**
*தியாகராஜா உதயகுமாரி*
*யாழ்ப்பாணம்.*



விழுத்திக்கொண்டிருந்தவரைச் சூழ இப்போது படையினர்தான் நின்றனர். தான் நிற்குமிடத்தைக் குறிப்பிட்ட இசைநிலா நிலைமையை விளக்கி, தன்னைப் பார்க்காமல் தான் நிற்குமிடத்துக்கு எறிகணைகளை வீசுமாறு கேட்டார்.

ஓயாத அலைகள் – 02 நடவடிக்கையின் போது கிளிநொச்சிக் களமுனையிலே லெப்.கேணல் செல்வி எடுத்த அதே முடிவு. இப்போது எவரும் சொல்லாமலே இசைநிலா எடுத்தார்.

பரம்பரை தொடர்கின்றது.

★★★

சண்டை மிகக் கடுமையாக நடந்துகொண்டிருந்தது. கரையோரமாகச் சிறிலங்காப் படையினரின் இரண்டாம் நிரைக் காப்பரண்கள் அருகே கலைவிழி நின்றார். காயமடைந்த போராளிகளை உடனுக்குடனேயே பின்னரங்கிற்குப் போகுமாறு அனுப்பிக்கொண்டிருந்தார். நெருக்கடியான அந்தக் களத்தில் காவும் குழுவினர் வந்து காயக்காரரை அகற்ற வாய்ப்பில்லை.

இயலுமான காயக் காரர்கள், வீழ்ந்திருந்த தோழியரின் வித்துடல்களைச் சுமந்துபோனார்கள். கலைவிழியோடு கூடவே நகர்ந்த கப்டன் எழில்நிதிக்கு காயம் ஏற்பட்டது. மறுபடி மறுபடி காயம் ஏற்பட்டதால் அவரால் நடக்கமுடிய வில்லை. நடந்துவரக்கூடிய எல்லோரையுமே கலைவிழி அனுப்பிவிட்டிருந்தார்.

களத்தைவிட்டுக் கலைவிழியையும் வெளியே



**கப்டன் இசைநிலா**
*மகாதேவன் கஜந்தி*
*வவுனியா*

வருமாறு கட்டளைமையம் பணித்தது. காயத்துடன் கிடந்த எழில்நிதியைத் தூக்கிக்கொண்டு தான் வருவதாகக் கூறிய கலைவிழி தன்னோடு நின்றவர்களையும் அனுப்பிவிட்டிருந்தார். சிங்களப் படையினரின் கடும் தாக்குதல் மத்தியில் எழில்நிதியை மீட்டுவர முயன்ற கலைவிழி வரவேயில்லை.

ஓயாத அலைகள் – 03 நடவடிக்கையில் பரந்தன் களமுனையில் சூனியப் பகுதிக்குள் வீழ்ந்துகிடந்த மேஜர் மாதுரியின் வித்துடலை எடுக்காமல் வரமாட்டேன் என்று போய், வித்துடலாக வந்த லெப்.கேணல் மைதிலியைப் போலவே கலைவிழியும்.

# வைரவரிகள்

எவ்வளவு கஸ்ரப்பட்டு பயிற்சி எடுத்தும் கூட இதுவரை நடவடிக்கைக்குச் செல்ல சந்தர்ப்பம் கிடைக்காதபடியால் செங்கதிர் அழுதுகொண்டே இருந்தாள். அவள் மட்டுமல்ல எல்லோருமே. MI.17 உலங்கு வானூர்தி மீதான தாக்குதலுக்குச் சென்றபடியால் எமக்கும் இதுவரை சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. 25.01.1998 காலை மலர்வதற்கு முன் எங்கள் உள்ளங்கள் தான் மலர்ந்து மகிழ்ந்து கொண்டன. ஆம் குமுதன் அண்ணாவின் தலைமையில் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டோம். அதில் செங்கதிரும் ஒருத்தியாய்........

வழமைபோல் பயிற்சிகள் ஆரம்பமாகின, பெருங்கடலில், சிறுங்கடலில், சேற்று நிலத்தில், மணல்பிரதேசத்தில், காட்டில், வெட்டைவெளியில், கட்டடத்தில், தடைகளில் என பாரம் தூக்கியபடியான பயிற்சிகள் இரவு பகலாய் ஓய்வு உறக்கமின்றி உண்பதற்கே நேரம் இன்றி கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. எலும்பும் தோலுமாய் எம் உருவங்கள் இருந்தன. செம்பகத்தின் கண்கள் போல் எம் கண்கள் சிவந்து கிடந்தன, எனினும் பயிற்சி தொடர்ந்தது. இப்படித்தான் எதிரியின் இலக்கு மீது சாக வேண்டும் என்பதற்காய் இவர்கள் பயிற்சியில் கூட தம்மைச் சாகடித்துக் கொண்டிருந்தார்கள்.

★★★

எமது ஆயுதங்களும் வெடிமருந்துகளும், நீர்க்காப்பிடப்பட்டுத் தயார்படுத்தல்களோடு எஞ்சி நின்ற தோழிகளிடமும், பயிற்சி ஆசிரியர்கள், அங்கிருந்த முகாம் போராளிகளிடமும் விடை பெற்றோம்.

★★★

எமக்கான நகர்வுப் பாதைகளையும் தாக்குதல் வியூகத்தினையும் தாக்குதலுக்கான முடிவுகளையும் தளபதி தெளிவு படுத்தினார். இரவு உணவை மாலையே உண்டு, படங்கள் எடுத்து அவர்கள் விழிகசிந்து நிற்க நாம் கையசைத்து மீண்டும் விடை பெற்றோம். சிலருக்கு அதுவே இறுதி விடைபெறலாகவும் இருந்தது.

★★★

30.01.1998 மாலை 6.45க்கு பற்றைகள், அருவிகள்கடந்து, வெளிகள் வெட்டைகள் தாண்டி, நீரேரிக்கரையை அடைந்தோம். இராணுவ முன்னணிக் காவல் நிலையில் ‘ரீப்’ லைற்றின் ஒளிச் சிதறல்கள் மெல்லிய நீரலையில் பட்டுத் தெறித்து நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் வர்ணஜாலமாய் அது காட்சியளித்தது. ஆனால் அதுவே மனதுக்குள் ஒரு ஆவேசக் கணலையும் மூட்டிக்கொண்டிருந்தது. எம்மக்கள் தங்க இடமின்றி அகதியாய் தெருவெங்கும் குப்பி விளக்கே இன்றி அலைந்து திரிகையில் இவனோ எமது மண்ணில் திருவிழா நடைபெறும் கோயில்கள் போலல்லவா? இருக்கின்றான். நீரேரியால் நகர்ந்தோம். பாரப்பைகளை அணைத்தபடி சில இடங்களில் மார்பளவு நீரும், சில இடங்களில் கால் அளவு நீருமாகவே இருந்தது. இவற்றுக்கு ஏற்றால்போல் எம்மை எமது உருவை மறைத்தபடி நகரவேண்டி இருந்தது. எமது அணிக்கு முன்பாக ஆசா அக்காவின் அணி இயக்கச்சிப் பகுதியில் இருந்த ஆட்லறிகளை தகர்ப்பதற்காகச் சென்று கொண்டிருந்தது.

★★★

முன்னணிக் காவல் நிலையின் கம்பி றோல்த் தடையைத்தாண்டி, காப்பரனையும் மறைப்பு வேலியையும் தாண்டி மீண்டும் இராணுவ வலயத்தின் உள்ளேயே கடல் நீரேரியால் நடந்து கொண்டிருந்தோம். ஓரிடத்தில் தரையில் நீர் வடியும் வரையும் நின்றோம். அப்போது மங்கை அக்கா என்னிடம் **அறிவுக் குமரண்ண நாங்கள் வரேக்க “பொயின்றில்” இருந்து டோச் அடித்துப் பார்த்தானே அதாலே ஏதும் பிரச்சினை வராதோ** எனக் கேட்டார். சாதாரண போராளியான என்னிடம் அவர் கேட்டதற்கு நான் வேவுக்காரர் சொன்னபடியே அவன் இப்படித்தான் நெடுகவும் அடிப்பான். ஆனால் பயத்தில ஒண்டுமே செய்யமாட்டான் என்று சொன்னதையே சொன்னேன். பின் வெளிகள் ஊடாகவும் மணற்பாங்கான தரைத்தோற்றத்தின் ஊடாகவும் தடயம் இன்றி நகர்ந்து வீதி ஒன்றைக் கடந்து ஓரிடத்தில் தங்கி, உடனே எமது நீர்க்காப்பிடப்பட்ட ஆயுத வெடிபொருட்களை வெளியில் எடுத்து எம்மை தயார் செய்து கொண்டோம். பின் தடயப் பொருட்களையும், நனைந்த உடைகளையும் மறைத்துக் கொண்டு இரவு 12.40 க்கு தூங்கினோம். பின் அதிகாலை 4.10க்கு எழுந்து அதிக முட்பற்றைகள் நிறைந்த இறுசல் காட்டுக்குள் நுழைந்து முக்கோண நிலை எடுத்துத் தூங்கினோம்.

★★★

கரும்புலி கப்டன் குமரேஸ் எப்போதும் பம்பல் அடித்தபடி எல்லோருடைய பழ ரின்னையும் வெட்டி வெட்டிச் சாப்பிட்டுக்கொண்டே இருந்தான். கரும்புலி கப்டன் செங்கதிர் ஆசை தீரும் மட்டும் நித்திரை கொண்டதால் அவளின் கண்கள் தவளையின் கண்போல வீங்கிக் கிடந்தது. அன்று தான் எல்லோருக்குமே நல்ல ஓய்வு கிடைத்தது. ஆசை தீரும் மட்டும் நித்திரை கொண்டாச்சு இனிச் செத்தாலும் பரவாயில்லை என்று சொன்னபோது அவளின் மெல்லிய உதடுகள் உதிர்த்த அந்த புன்சிரிப்பை எப்படித்தான் மறக்க முடியும். கரும்புலி மேஜர் குமுதன் அண்ணா அடிக்கடி அருகில் இருந்த மரத்தில் ஏறி எமது இலக்கு அமைந்திருக்கும் அந்த ஆனையிறவுத் தளத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்.

★★★

கரும்புலி கப்டன் செங்கதிர் நாம் கேட்காமலே (குமுதன், குமரேஸ், நான்) சொல்லிக்கொண்டிருந்தாள். நான் ஒன்பது வயதில என்ற ஆசை அண்ணாவைக் கண்டாப்பிறகு காணவே இல்லை என்றபோது அவளின் கண்கள் கண்ணீரால் நிரம்பி இருந்தன. இயக்கத்துக்கு வந்தாப்பிறகு “அம்மா அப்பாவைக் கூடக் காணேல்ல” அது தான் எனக்குக் கவலை. மற்றும்படி இந்த மண்ணுக்காக என்னைத் தியாகம் செய்வதில் எனக்கு பெரும் மகிழ்வுதான். இதை நாங்களும் பெரும் வேதனையோடுதான் கேட்டுக் கொண்டிருந்தோம். இருவர் நீர் எடுக்கச் சென்றபோது இராணுவத்தினர் வேட்டைக்குப் போய்க் கொண்டிருந் தார்களாம். நல்லவேளை அவன் இவர்களைக் காணவில்லை. ஆசா அக்காவின் ரீம் எம்மில் இருந்து 75 மீற்றரில் தான் தங்கி இருந்தது. மதிய உணவை எல்லோரும் உண்டோம். தடயப் பொருட்களை பாரப் பையினுள் திணித்து நானும் சுபேசன் அண்ணாவும் குமரேசும், இன்னும் ஓர் போராளியும் முற் பற்றைகளின் ஊடாக இழுத்துச் சென்று ஓரிடத்தில் மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் போது தான் அந்த வெடிச்சத்தம் எங்களை தங்கியிருந்த இடத்துக்கு வேகமாக ஓடவைத்தது – ஓடினோம். அங்கு போய்ப் பார்த்தபோது போராளி ஒருவரின் “ஜக்கட்” தவறுதலாக வெடித்து இருந்தது. முற்பற்றைகளும் மரக்கிளைகளும் துகழாகிக் கிடந்தது.

நல்லவேளையாக யாருக்கும் எந்தக் காயமும் ஏற்படவில்லை. வெடிக்கும் போது நேரம் 4.40 இருக்கும். பின்னர் உடனேயே எமது நிலைகளை மாற்றி நகர ஆரம்பித்தோம். அது மிகவும் இறுசலான முற்பற்றைகள் நிறைந்த காடானபடியால் நகருவது மிகவும் கடினமானதாகவே இருந்தது. நகரும் திசை மாறி அதைத் தவற விட்டபடியால் சங்கத்தார் வயலின் அருகில் இருந்த முகாமை அடைந்து விட்டோம். அங்கிருந்து மெயின் முகாமுக் ‘ரெலிபோன்’ லைன் செல்லும் பாதையினைத் தொடர்ந்து நகர்ந்து ஓரிடத்தில் நீர் குடித்துக்கொண்டிருந்தபோது.

★★★

கரும்புலி மேஜர் ஆசா அக்காவின் குழுவும் அவ்விடத்துக்கே வந்து சேர்ந்தது. எல்லோரும் எல்லோரிடமும் விடைபெற முன்னர். கரும்புலி கப்டன் உமையாள் என்னிடம் **அண்ணா மில்லர் அண்ணாட்ட என்னத்தில போறிங்கள் எனக் கேட்டதற்கு** நானோ கிபிரில தான் போக வேண்டும் என்று சொன்னேன் ஆனால் அவளோ அதைவிடவும் வேகமாய் போயே விட்டாள். எல்லோருமே கட்டாயாம் திரும்பி வாங்கோ, காயப்பட்டால் எல்லாம் ‘சாச்’ இழுத்துப் போடாதேயுங்கோ – என அதியுயர் பாசத் தின் வெளிப்பாடாய்ச் சொல்லிக்கொண்டே இருந் தார்கள். கரும்புலி மேஜர் மங்கையக்கா **இலக்கை அழிச்சா கட்டாயம் திரும்பி வருவேன்** என்று சொல்லிப் போட்டுப் போனவ தான். பின்னர் அவா வரவில்லையே என அறிந்தபோது இலக்கு அழிக்கப்படவில்லை என்பதைத் தெரிந்து கொண்டோம். இப்படித்தான் எல்லோருமே எல்லோரிடமும் மனமின்றி விடைபெற்றோம்.



**கரும்புலி மேஜர் அறிவுக்குமரனின் குறிப்பேட்டு வரிகளிவை. பல கரும்புலி நடவடிக்கைகளில் பங்கு கொண்டு அவற்றைக் கரும்வேங்கை என்ற பெயரில் வைரவரிகளாக்கிய மேஜர் அறிவுக்குமரன் 11.04.2000 அன்று திருகோணமலைக் கடற்பரப்பில் கடற்படையுடனான மோதலின் போது வீரச்சாவடைந்தார்.**

★★★

31.01.1998 இரவு 7.50 தங்கித்தங்கி, மெல்ல மெல்ல அவதானித்தபடி L.P காரனின் கண்ணில் படாமல் நகர்ந்து கொண்டிருந்தோம். ஓரிடத்தில் தங்கி பழ ரின் சாப்பிட்டபோது குமுதன் அண்ணா ஏசியபடியால் குமரேஸ் வேண்டாம் என்றே இருந்தான் பின்னர் மெதுவாக எனக்கு **வயிறு ஏலாமக் கிடக்கு ஆமிக்காம்பில சோடா குடிச்சாத்தான் சரிவரும்** என்று சொல்லி முடித்தான். கண்டிவீதியை கடப்பதற்காய் அதில் இருக்கும் காவல் நிலையில் எதிரியின் நடமாட்டத்தை அவதானிப்பதற்காய் வீதியில் இருந்து 30 மீற்றரில் தங்கியிருந்தோம். எம்மால் அதில் இருக்கமுடியவில்லை. எதிரியின் மலநாற்றம் மூக்கைத்துளையிட உமிழ் நீர் வாயை முட்டியிருந்தது. துப்பினால் எதிரிக்கு கேட்டுவிடும் என்பதால் துப்பாமலே இருக்க வேண்டியிருந்தது. பின் கண்டி வீதியை எதிரியின் காவல் அரனுக்கு அருகினாலேயே பரவல் வரிசையில் நகர்ந்து கடந்து. முற்பற்றைகள், வெளிகள் நீர் நிலைகள், சேற்று நிலங்கள் தாண்டி எதிரியின் “சாச்சர் லைற்றின்” பார்வையில் எம்மை அடிக்கடி மறைத்தும் நகர்ந்து புகையிரத வீதியையும் கடந்து நகர்ந்து கொண்டிருந்தோம். காவல் அரண்கள், அடுத்துள்ள பயிற்சி மைதானம், மண் அணை, வெட்டை வெளிகள் தாண்டி இறுதியாய் தங்குமிடத்தில் 12.30 மணிவரை தங்கினோம்.

கரும்புலி மேஜர் குமுதன் அண்ணா எல்லோருக்கும் குளுக்கோஸ் தந்தார். கரும்புலி லெப் . கேணல் சுபேசன் அண்ணா தான் குடித்த மீதி நீரை எனக்கு இறுதியாய் தந்தார். தண்ணீர்க் கான்களை அதிலேயே போட்டு விட்டு நகர்ந்தோம். அது பால்போன்ற நிலவு வெட்டை. எந்த இருட்டிலும் வானவிளிம்பு தெரியும் . அதைவிட கிளாலிப் பக்கமும் , வாடியடிப்பக்கமும், உல்லாச விடுதிப்பக்கமும் என எப்பக்கமும் எரிந்துகொண்டிருக்கும் ரீப் லைற்றினதும் “போக்கஸ்” லைற்றினதும் ஒளிகள் பாம்பு ஊர்ந்தலே காட்டிக்கொடுத்துவிடும். அப்படியான உப்பள வெட்டை அது, மெல்லென அதனூடாக ஊர்ந்து ஊர்ந்தும் இருந்தபடியும் நகர்ந்து சுமார் 450 மீற்றர் தூரம் நகர்ந்திருந்திருப்போம். நாம் உள் நுழையும் காவல் நிலைக்கு முன்னால் நேர் எதிரே 65 மீற்றரில் நிலை எடுத்து எம்மையும், வெடிமருந்துகளையும், இறுதியாய் தயார் செய்து கொண்டோம்.

★★★

ஓர் போராளியும் நானும் காப்புச் சூட்டுக்கு தயாராகும் போது லெப் .கேணல் சுபேசன் அண்ணாவும் கண்ணாளனும் கம்பிறோல்த் தடையைத் தகர்ப்பதற்காய் டோபிடோவுடன் போனபோதுதான்.

★★★

வானவேடிக்கையையும் மிஞ்சியதாய் ஆசா அக்காக்கள் சென்ற முகாமின் பக்கம் வெடியதிர்வுகள் கேட்ட வண்ணமே இருந்தது. அதில் மேஜர் ஜெயராணி, கப்டன் உமையாள், கப்டன் தனா, கப்டன் நளா, கப்டன் இந்து, மேஜர் மங்கை, மேஜர் ஆசா ஆகியோர் உடல் கரைத்து தேச விடிவுக்காய் தம் தேகத்தை உப்பளக்காற்றோடு கரைத்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)



# பண்பின் உறைவிடம்

# லெப்.கேணல் கலையழகன்

வீ.மணிவண்ணன்.



**லெப். கேணல் கலையழகன்,**
அனைத்துலகத் தொடர்பகத் துணைப் பொறுப்பாளர்,
சிவபாதசுந்தரம் ஞானசீலன்,
யாழ் மாவட்டம்.

பிறப்பு 02 – 09 – 1976

வீரச்சாவு 18 – 04 – 2007




கலையழகன் என நினைக்கும் போது, என்றும் மாறாத புன்னகை பூத்த முகமே எல்லோருக்கும் நினைவிற்கு வரும். கள்ளம் கபடமற்ற சிரிப்பும், எல்லோருடனும் அன்பாக, பண்பாக பழகும் தன்மையும், அனைவரையும் உபசரிக்கும் இயல்பும் அவனது இலட்சணங்கள். ஆனால் அவனுக்குள் இருந்த அற்புதமான திறமையும், ஆழமான ஆளுமையும், பன்முகத்தன்மையும் பலருக்குத் தெரியாது. குழந்தைத்தனமான முகத்திற்கு சொந்தக்காரன் பல்வேறு பொறுப்புக்களை தோளில் சுமந்து திரிந்த ஒரு அற்புதமான போராளி என்பது சிலருக்கும் மட்டும் தெரியும்.

ஆரம்பப் பயிற்சியை முடித்துக்கொண்ட கலையழகன், 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தேசியத்தலைவர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கேணல் கிட்டு அரசறிவியல் கல்லூரி மாணவனாக இணைத்துக்கொள்ளப்பட்டான். தலைவர் அவர்களின் எண்ணத்திற்கு ஏற்ப அரசறிவியலும், படையப்பயிற்சியும் இக்கல்லூரி மாணவர்களிற்கு மாறிமாறி வழங்கப்பட்டது. அக்கல்லூரியின் முதன்மை மாணவர்களில் ஒருவனாக மாவீரன் கலையழகன் திகழ்ந்தான். பேச்சாற்றல், நுட்பமாகப் பதில் கொடுக்கும் தன்மையினை கல்லூரியில் அவன் வளர்த்துகொண்டான். அங்கு அவனது ஒழுக்கம், கட்டுப்பாடு, மற்றவர்களோடு பழகும் தன்மை, எல்லோருக்கும் உதவும் பண்பு, நேர்மை என்பன அவனைத் தூய்மையான போராளியாக வெளிச்சம் போட்டுக்காட்டியது.

நான்கு வருடங்களிற்கு மேலாக அரசறிவியல் கற்ற கலையழகன் தேசியத்தலைவர் அவர்களது கருத்துரைகளினாலும், தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் தொடர் வகுப்புக்களினாலும் முழுமையான போராளியாகப் புடம் போடப்பட்டான். இந்தக்காலப் பகுதியில் கொமாண்டோப் பயிற்சியிலிருந்து கனரகப்பீரங்கிப் பயிற்சி வரைக்குமான பல்வேறு வகையான படையப்பயிற்சிகளை அவன் பெற்றான். 1995ஆம் ஆண்டு மாதகலில் ஆரம்பித்த அவனது போர் நடவடிக்கைகள் ரிவிரச, சத்ஜெய, ஜெயசிக்குறு,, ஓயாத அலைகள்-03, ஆனையிறவுச்சமர் என நீண்டது. அண்மைய முகமாலை தாக்குதல் களத்திலும் அவன் பங்குபற்றியிருந்தான். இக்கல்லூரியின் முதலாவது அணி மாணவர்களின் பட்டப்படிப்பு நிறைவடைந்த போது, மிகச்சிறந்த மாணவர்கள் சிலரில் ஒருவனாக கலையழகன் தெரிவு செய்யப்பட்டு தலைவர் அவர்களினால் சிறப்புப் பரிசும் 'திறவோர்' எனும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டான். அரசியல் அறிவும், படைய அறிவும் ஒருங்கே இணைந்து தலைவர் அவர்கள் எதிர்பார்த்த பல்துறைசார் போராளியாக அவன் இந்தக் காலகட்டத்தில் வளர்ந்திருந்தான்.

கல்லூரிக் காலங்களில் பகுதி நேரமாக கலையழகன் தொலைத்தொடர்பாளனாக செயற்ப்பட்டான். பின்பு சிறிது காலம் மொழிபெயர்ப்பு அறிவினை பெறுவதற்கான கல்வியையும், பாதுகாப்பு பயிற்சியையும் பெற்ற கலையழகனுக்கு தேசியத்தலைவர் அவர்களைப்பற்றிய வரலாற்றுப்பதிவுகளை ஆவணமாக்கும் பணியில் ஈடுபடும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவ்வரிய சந்தர்ப்பத்தை தனது வாழ்நாளில் தனக்கு கிடைத்த பெரும் பேறாகவே அவன் கருதியிருந்தான். கால ஓட்டத்தில் அவனுக்கு வேலைச்சுமை அதிகரித்த போதும் தலைவர் அவர்களின் வரலாற்றை ஆவணமாக்கும் பணியினை தானே செய்யவேண்டும் என்ற ஆர்வமும் துடிப்பும் அவனுக்கிருந்தது. தலைவர் அவர்களது ஆரம்ப கால சம்பவங்களைத் தேடி எடுத்து தொகுப்பதிலும், தலைவர் அவர்களின் ஆரம்பகாலத் தோழர்களிடமும், ஆதரவாளர்களிடமும் தகவல்களைத் திரட்டி அதனைச் சரிபார்த்து ஆவணமாக்குவதிலும் அவன் அதிக ஆர்வம் செலுத்தியிருந்தான், வேறு சில தேசப்பற்றாளர்களுடன் சேர்ந்து கலையழகனின் கடும் உழைப்பின் பயனாகவே "Leader for all Season" என்ற தலைவர் அவர்களைப்பற்றிய புகைப்பட ஆவணநூலும், 'விடுதலைப் பேரொளி' என்ற தலைவர் அவர்களைப்பற்றிய தொகுப்பு நூலும் வெளிவந்தன.



செஞ்சோலை, காந்தரூபன் சிறார்களுக்கான எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைவதற்காக, அவர்களிற்கான அழகான, அமைதியான இருப்பிடங்களை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்ற தலைவர் அவர்களின் பெருவிருப்பத்தினை நிறைவேற்றும் பொறுப்பு கலையழகனிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப்பணியை விரும்பி ஏற்றுக்கொண்ட கலையழகன் அதற்காக கடுமையாக உழைத்தான். புலம் பெயர்ந்த மக்கள், அமைப்புக்கள், மத்தியில் இதற்கான நிதி வளங்களை திரட்டுவதற்காக கடும் பிரயத்தனமெடுத்தான். ஏராளமான பேரை அவன் சந்தித்தான், கதைத்தான், திட்டங்களை வழங்கினான். இறுதியில் அவன் இந்தப்பணியில் முழுமையாக வெற்றியடைந்திருந்தான். செஞ்சோலை 'காந்தரூபன் சிறார்களுகான இருப்பிடங்கள் அமைக்கப்பட்டு தலைவர் அவர்களால் அவை திறந்து வைக்கப்பட்டது அவனுக்குப் பெரும் மன மகிழ்வையும் திருப்தியையும் தந்திருந்தது. அவனது ஆன்மா அன்று நிறைவடைந்திருந்தது. இதே போலவே நவம் அறிவுக்கூட போராளிகளிற்கான அமைவிடத்திற்கும் கலையழகனின் பங்கு கணிசமானதாக இருந்தது.

எமது தேசத்திற்கான வெளிநாட்டுத்தொடர்புகளை, அனைத்துலக பணிகளை செய்வதற்கான தயார்ப்படுத்தலுக்காக கலையழகன் பல்வேறு நாடுகளிற்கு அனுப்பப்பட்டான். வெளிநாட்டுப் பயணமானது அவன் கல்லூரியில் கற்ற பல விடயங்களை நேரில் பார்த்து அறியக்கூடியதாக இருந்தது. புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களின் தாயகப்பற்று, விடுதலையுணர்வு, வாழ்க்கைநிலை என்பவற்றை அவன் அறிந்து கொண்டான். எமது பொறுப்பாளர்கள், செயற்பாட்டாளர்களின் கடின உழைப்புப் பற்றியும், எதிர் கொள்கின்ற பிரச்சினை குறித்தும் இங்கு சகதோழர்களிற்கு எடுத்துரைத்தான். அதே நேரம் தேசியத்தலைவர், விடுதலைப் போராட்டம் குறித்த தெளிவான கருத்துக்களை அவன் செல்லுமிடமெல்லாம் முன்வைத்தான். நட்பு ரீதியாக நிறையப் பேருடன் உறவாடி தொடர்புகளைப் பேணிவந்தான். புலம்பெயர்ந்த எமது உறவுகளின் தாயகம் தொடர்பான பிரச்சினைகளை அந்த மக்களின் நிலையில் நின்று

**(04 ஆம் பக்கத் தொடர்ச்சி )**

இயக்கவிருப்பதால் அந்த ஓடுபாதையில் இருந்து 4,464 மீற்றர் தொலைவில் இருக்கும் இந்த இடத்தில் 45 மீற்றரைவிட உயரமான கட்டுமானங்களைக் கட்டமுடியாது என்பதே பிரச்சனை. அருகிலிருக்கும் கடற்படையின் படகு பராமரிக்கும் துறைக்கும் இது இடைஞ்சலாக இருக்கும் என்ற கருத்தும் நிலவியது.

இதற்கு மாற்றாக சம்பூரில் மின்னிலையத்தை அமைக்கலாம் என்றும் அதற்கான பாதையையும் படகுத் துறைகளையும்கூடத் திருத்தித் தரலாம் என்றும் போட்டுப் பார்த்தது சிறிலங்கா அரசு. விடுதலைப் புலிகள் கைப்பற்றத் துடிக்கும் இந்த இடத்தில் மின்னிலையத்தை அமைத்தால் அது இந்தியாவில் அரசியல் பின் விளைவுகளைத் தரக்கூடும் என்று இந்தியக் கூட்டுநிறுவனம் கருதுகிறது. அது இப்போது இந்திய வெளிவிவகார அமைச்சின் கருத்தை நாடிநிற்கிறது.

மூதூரிலே முதலீடு பண்ணும் திட்டம் சீனாவிற்கும் உண்டு. இந்தியா பின்னடிக்கும் நிலையில், சீனர்களே நிலக்கரி மின்திட்டத்தைப் பொறுப்பேற்கும் சாத்தியங்களும் உள. இதைவிட, அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் கட்டளையகம் 2002ம் ஆண்டு வழங்கிய ஆலோசனையில், கிழக்கைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க வேண்டுமானால், திருமலைத் துறைமுகத்தின் தென்புலத்தைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பது அவசியம் என்று கூறியிருந்ததையும் சில ஆய்வாளர் சேர்த்துப் பார்க்கிறார்கள்.

இதற்கிடையே, மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பும் மூதூரிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களும் கொழும்பில் இது தொடர்பான வழக்கொன்றைத் தாக்கல் செய்திருப்பதாகச் செய்திகள் வெளிவருகின்றன. கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டது தொடர்பான வழக்குப்போல இதுவும் அமையாலாம் என யாராவது நம்பினால் ஏமாற்றமே மிஞ்சும் என்பதே அவதானிகளின் கருத்து. இந்த விடயத்தில் பெரும்பாலான சிங்களக் கட்சிகள் ஒருமித்துச் செயற்படும் என்றே எதிர்பார்க்கலாம்.

கொழும்பிலிருந்து தமிழரை வெளியேற்றல், தமிழரை மென்மேலும் ஒடுக்கும் சட்டங்கள் என்ற வரிசையில் இன்னும் பல தடாலடி நிகழ்வுகளை கொழும்பின் ஆட்சியாளரிடத்திலிருந்து எதிர்பார்க்கலாம் என்றே தோன்றுகிறது. தென்னிலங்கையில் ஜேவிபி போன்ற தீவிர நிலைப்பாட்டாளர்களின் எதிர்ப்பரசியலை நீர்த்துப் போகச் செய்வதற்கும், படையினரின் வெற்றிச் செய்தி தொடர்ச்சியாக் கிடைக்காத பொழுதுகளில் தமது சிங்கள வாதத் தலைமைத்துவ ஈர்ப்பைப் பேணுவதற்கும், படையினரின் செயற்பாடுகளின் விளைவு சிங்களவருக்குச் சாதகமாகப் பயன்படுகிறது என்ற வகையில் அவர்களின் உளவுரணைத் தக்கவைப்பதற்கும் இவ்வாறான அடாவடிகளை ராஜபக்சர்கள் தொடரக்கூடும்.

இந்நிலையில், உயர்பாதுகாப்பு வலயம் என்ற இனஒடுக்கல் செயற்பாட்டால் தாயகத்திற்குள்ளும் வெளியேயும் புலம்பெயர்ந்து இருக்கும் அனைவரும் தங்களின் வீடுகளுக்குத் திரும்ப விரும்பினால், அவர்களுக்கு இருப்பதில் சுலபமான நேர்வழி அவர்கள் அனைவரும் ஆயுதம் ஏந்துவதே.

***கிராம அலுவலர் பிரிவின்படி மூதூர் கிழக்கின் சனத்தொகை தற்போதைய இடப்பெயர்வு காலத்தில் சம்பூர் கிழக்கு குடும்பங்கள்:338, ஆட்தொகை:1352, சம்பூர் மேற்கு கு:398, ஆ:1582, கூனித்தீவு கு:192, ஆ:952, நவரெத்தினபுரம் கு:240, ஆ:872, பாட்டாளிபுரம் கு:400, ஆ:636, நல்லூர் கு:237, ஆ:406, கடற்கரைச்சேனை கு:595, ஆ:2188, கட்டைபறிச்சான் வடக்கு கு:343, ஆ:1267, கட்டைபறிச்சான் தெற்கு கு:374, ஆ:1285, சேனையூர் கு:425, ஆ:1232, பள்ளிக்குடியிருப்பு கு:539, ஆ:2020, உப்பூறல் கு:168, ஆ:645***

**(03ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஒத்த கொடுமையைக் கொண்டவையே. இங்கெல்லாம் வதைபட்டோர் போராடிய பொழுதும் மேற்குலகின் புவிசார் பொருண்மிய நலன்கள் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க உதவியதும் கவனிக்கத்தக்கதே. எத்தகைய நிலையிலும் விடுதலைப்போராட்டத்தைத் தக்கவைப்பதே வெற்றிக்கு வினையாற்றும் என்பதே எமக்கான போதனை.

ஆகவே இப்பொழுது விடயங்கள் மிகத் தெளிவாகிவிட்டன. எனவே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் பறிக்கப்பட்ட எண்ணாயிரம் சதுரகிலோமீற்றர் தாயக நிலம், யாழ் மாவட்டத்தின் 150 சதுரகிலோமீற்றர் பாதுகாப்பு வலயமும் கடற்தடை வலயத்திற்கு உள்ளான கடற்பரப்பும், 22.12.1984 திகதிய அரச அறிவித்தல் மூலம் விழுங்கப்பட்ட மணலாற்றின் 42 கிராமத்தின் 13288 குடும்பங்களின் பூர்வீக நிலமும், தற்போதைய மூதூர் கிழக்கு சம்பூர் பாதுகாப்பு உயர் வலயமும் இனச்சுத்திகரிப்பின் சான்றுகளே. இனக்கலவரத்தின் பொழுதும் இராணுவ வெறியாட்டத்தின் பொழுதும் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் இனக்கொலைக்குச் சான்று. இனவேறுபாட்டின் விளைவால் தாயகம் விட்டேகிய ஏழு இலட்சத்திலிருந்து பத்து இலட்சம் வரையான எம் புலம் பெயர் மக்கள் வாழும் அலைந்துழல்வு வாழ்வும், இன்றைய ஆக்கிரமிப்புப் பிரதேசப் படுகொலைகளும் ஆட்கடத்தல்களும், சட்டமுறைப்படி தாயகத்தைச் சிதைத்திடும் செயற்பாடுகளும், பொருண்மியத் தடைகளும் யாவும் மேற்சொன்ன இனச்சுத்திகரிப்பையும் இனக்கொலையையும் இரு எல்லைகளாகக் கொண்டவையே. சிங்களவர் ஆள்மனக்கிடங்கில் புதைந்துகிடக்கும் ஒரே இனத் தூய்மைக்கோட்பாடும் அன்னியர் மீதான காழ்ப்பும், வெறுப்பும் கிட்லர் காலத்திய செருமனியினால் ருவாண்டாக் கூட்டு இனத்தின், சேர்வியரின் உளச்சிக்கலைப் போன்றவையே.



ஆகவே எம் விடயத்தில் மூக்கை நுழைத்த பன்னாட்டுச் சமூகம் அடுத்து என்ன செய்யப்போகின்றது. 1945ஆம் ஆண்டில் நாசிகளை விசாரிக்க உருவாக்கப்பட்ட பன்னாட்டு இராணுவத் தீர்ப்பாயத் (நூரம்பத் தீர்பாயம்)தின் சாசனமும் 1998ஆம் ஆண்டின் ஐ.நா.வின் போர்க்குற்றங்கள் தொடர்பான பிரகடனமும் கூறுவது இதுவே. “போருக்கு முன்போ அல்லது போரின் பொழுதோ குடியியல் மக்களுக்கு எதிராக இளைக்கப்படும் அனைத்து மனிதத் தன்மையற்ற குற்றங்கள், அரசியல், இன, மத காரணங்களின் பெயரால் நடத்தப்பட்ட அடக்குமுறைகள் இனப்பாகுபாட்டுக் கொள்கையின் விளைவாக மேற்கொள்ளப்படும் ஆயுதத் தாக்குதல்கள், ஆக்கிரமிப்புக்கள் மூலம் மக்களை வெளியேற்றல் மற்றும் இனப்படுகொலைகள் யாவும் மனித குலத்திற்கு எதிரானதும் போர்க்குற்றங்களுமாகும். 1998ஆம் ஆண்டின் றோ உடன்பாட்டின் படி உருவாக்கப்பட்ட பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்று இனக்கொலை, இனச்சுத்திகரிப்பு மேற்கொண்ட முன்னால் யூகோஸ்லாவியா (டச்சு நாட்டின் கேக்கில்) ருவாண்டா (தன்சானியாவின் ஆருசாவில்) போன்றவைக்காக தனித்தனியான பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயங்களை உருவாக்கியுள்ளது. இவை இப்போது தண்டனைகளை வழங்கத்தொடங்கிவிட்டன. இவ்வாறாக ஒரு பன்னாட்டு நீதிவழங்கும் முறைமை இப்போது தோற்றம் பெறுகின்றது. எனினும் இவை தொடர்பில் அவ்வவ் நாடுகளின் அரசியல் உறுதியும் கேள்விக்குரியதாகவே உள்ளதென்பதும் கவனிக்கத்தக்கதே. இவையே உலக நடப்புக்கள்.

எனவே எம் விடயத்திலும் “ஆமை குன்றேறுவது” போல அசையும் பன்னாட்டுச் சமூகம் நீதி வழங்குகின்றதோ இல்லையோ அல்லது அதனை நீதி வழங்க வைக்கவேண்டுமாயினும் நாம் பெருங் கவிஞன் சு.வி பாடியதுபோல

***“வண்ணமுறக் காப்போம்***
***மண்ணின் சுயத்தை***
***வாழ்தலின் வல்லமையை***
***சாவை மறுதலித்து.”***

பார்க்க வேண்டுமென்று வலியுறுத்தியவன். குறிப்பாக கனடாவில் வாழும் தமிழர்களிற்கான தாயகப்பணிகளை ஒருங்கிணைப்பதில் அவன் கடுமையாக உழைத்தான். புலம்பெயர் தமிழர்களின் பலத்தை, வளத்தை ஒருங்கிணைப்பதில் அவன் ஆற்றிய பணி அளப்பரியது. அவை வரலாற்றில் பொறிக்கப்படவேண்டியவை.

கடந்த வருட நடுப்பகுதியில் கலையழகன் அனைத்துலகத் தொடர்பக துணைப்பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். இதற்கு இவனது பண்பும், ஆளுமையும், விடையங்களை இலகுவாகக் கையாளும் ஆற்றலும் காரணமாக இருந்தன. சக போராளித் தோழர்களை மதித்து, அவர்களோடு மனம் திறந்து பழகி, அனுசரித்து, அவர்களது தேவைகளை விளங்கி பூர்த்தி செய்யும் பக்குவம் அவனுக்கிருந்தது. போராளிகளை வளர்க்க வேண்டும், வேலைகளுக்குள்ளால் உள்வாங்க வேண்டும், நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டுமென்று அவன் விரும்பிச் செயற்பட்டான். அவனை விட வயதில் கூடியவர்களும், அனுபவசாலிகளும் இருக்குமிடத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தன்மை அவனிடமிருந்தது. அந்தக் கவர்ச்சி மிக்க ஆளுமை எல்லோரையும் அவன் பால் ஈர்த்தது. குறுகிய காலத்தில் அவன் மிக வேகமாக வளர்ந்தான். அவனது ஆற்றல், ஆளுமையின் வீச்சு, முதிர்ச்சியடைந்த தன்மை என்பவை மூலம் ஒரு பெரிய பொறுப்பைத் தனியே செய்யக்கூடிய நிலையினை அவன் அடைந்திருந்தான். அவன் நல்லவனாக



மட்டுமல்லாமல் வல்லவனாகவும் திகழ்ந்தான் என்பது தான் உண்மை.

இவ்வாறான நேரத்தில் தான் 18.04.2007 அன்று எதிர்பாராத வெடிவிபத்தில் கலையழகன் வீரச்சாவு என்ற செய்தி வந்தவுடன் நாம் எல்லோரும் துடிதுடித்துப் பதறிப்போனோம். ஆழிப்பேரலை வந்து தாக்கியது மாதிரியான உணர்வு, பூமியதிர்ந்து நிலம் பிளந்து போன மாதிரியான நிலை, இதயத்தை யாரோ சம்மட்டியால் அடித்த அதிர்வு. வார்த்தைகளில் வடிக்க முடியாத துயரமும் வலியும். வேதனைச்சகதியில் சிக்கித் தவிக்கின்ற சோகம். ஏன் இவ்வளவு வேகமாக எமை விட்டுப்பிரிந்தான் என்று மனதில் ஆழமான வலியுடன் எழும்பும் வினா. கலையின் இழப்பின் பெறுமதி, இழப்பின் இதயவலி, அதன் ஒட்டுமொத்தப் பரிமாணம் எனக்கே முழுமையாகத் தெரிந்திருந்தது. என்னையே முழுமையாகத் தாக்கியிருந்தது.

அவன் அழகானவன், பண்பானவன்,பழகுவதற்கு இனிமையானவன், கள்ளம்கபடமற்ற வெள்ளையுள்ளம் படைத்தவன். ஆளுமையெடுத்து செயற்கரிய பணிகளைச் செய்தவன். முதல் நாள் உயிரோடு வலம் வந்தவனை மறுநாள் விதைகுழியில் விதைத்துவிட்டு வந்தோம். இது எவ்வளவு துயரமாக, கொடுமையாக இருந்தது. ஆனாலும் எவ்வளவு இழப்புவரினும், இடர்வரினும் உறுதி தளரோம். லெப். கேணல் கலையழகனது தலைவர் மீதான பற்றும் பாசமும், விடுதலைவேட்கையும், தேசிய உணர்வும் கொண்ட எண்ணங்களை நெஞ்சினில் சுமந்து அவனது இலட்சியக் கனவை நனவாக்குவோம் என அவனது விதைகுழி மீது சத்தியம் செய்கின்றோம்.

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

★★★

டோபிடோவின் ஒளிச்சிதறலோடு சேர்ந்து கம்பி றோலும் மேலே எழுந்து கொண்டது. உடனே நாம் எல்லோரும் முதலாவது தடையினூடாகச் சென்று இரண்டாவது தடையை கட்டரினால் வெட்டும் போது, இடது பக்க காவல் நிலையில் இருந்து வந்த எதிரியின் சூடுகள் எம்மைக் காயப்படுத்திக்கொண்டே இருந்தது .எனது பக்கக் காவலரண் என்றபடியால் எனது RPK LMG அச்சூட்டை முற்றாக இல்லாது செய்துவிட.

★★★

கரும்புலி மேஜர் குமுதன் அண்ணாவுக்கு வலது கை முற்றாக முறிந்தே இருந்தது. அவரின் தொலைத்தொடர்பு சாதனம் நொறுங்கி விட்டது. கரும்புலி கப்டன் குமரேசிற்கு வலது கால் முற்றாக உடைந்த நிலையில் தடையுக் குள்ளேயே கிடந்தான். கரும்புலி கப்டன் செங்கதிருக்கு இடது கையிலும் வலது பாதத்திலும் காயம். மேலும் ஐந்து பேருக்கு சிறிய காயங்கள். எனக்கு வலது கால் மூட்டிலும் இடது காலின் முன்பகுதியிலும் ரவைகள் துளைத்து குருதி கொப்பளித்துக் கொண்டிருந்தது. **"எல்லோரும் இதால வாங்கோ"** என்ற குமுதன் அண்ணாவின் குரலோடு அவரோடு எல்லோருமே மிக வேகமாய் உள் நுழைந்து கொண்டிருந்தோம். காயத்தின் வேதனைகள் ஒன்றுமே எமக்குத் தெரியவே இல்லை.



★★★

ஆட்லறி நிலைப்படுத்தும் பகுதி வெறுமையாய் கிடந்தது. எங்கள் உள்ளத்திலும் ஒரு வித வெறுமை குடிகொள்ள லெப் .கேணல் சுபேசன் அண்ணாவின் 40mm செல்லும் எனது கவசத்துளைப்பு ரவையும் இடது புறத்தால் மாடிக்கட்டடத்தையும் தகரக் கொட்டகையை யும் கிளியர் பண்ணிக் கொண்டிருக்கும் போது வலது புறமாய் இருந்து வந்த சூட்டினை நோக்கி சுட்டுக் கொண்டே போன சுபேசன் அண்ணரின் தொடர்பு மட்டுமல்ல அவரின் சுவாசமும் புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம் என்ற தாரக மந்திரத்தோடு நின்றே போனது. அதுவரையும் குண்டு அடி ரவையடி அங்கால அடி இஞ்சால அடி என்று கட்டளையாய் வந்த அவரின் குரல் கணீர் என்று நின்றே போனது .

**சுபேசன் அண்ணாவே!**
**கடைசியில் கூட அருகில் நின்று**
**கட்டளை பிறப்பித்து – உங்கள்**
**கட்டுடலை இறைப்பித்து போனவரே**
**பொறுமையின் பெறுமதியாய்**
**எமக்கு என்றும் வழிகாட்டி**
**நிற்பீர் – கடைசியாய்**
**நீர் தந்த தண்ணீர்**
**எமக்கு என்றும் கண்ணீராய்.......**

திடீர் என பெரிய கட்டடம் ஒன்றில் இருந்து வந்த சரமாரியான சூட்டில் எனது இடது மேல்புறக்கையில் காயமடைந்த நிலையிலும் அக்கட்டடத்தின் சூட்டினை எனது RPK LMGயிலும் கைக்குண்டுகளாலும் நிறுத்தும் போது, (இதில் ஏழு கைக்குண்டுகளைப் பாவித்தேன்)

இரு நண்பர்கள் உடனே அவ்விடத்துக்கு வந்தே விட்டார்கள். எதிரி தனது முகாமுக்குள்ளேயே கத்திக் கத்தி ஓடிக்கொண்டே இருந்தான். இப்போது எந்த எதிர்ப்புமே வரவில்லை. எல்லோரும் சத்தம் வரும் திசைகளை நோக்கிச் சுட்டுக் கொண்டே நின்றார்கள். கரும்புலி மேஜர் குமுதன் அண்ணா எல்லோரையும் "விக்ரோ" பண்ணும்படி கூறியதாக யாரோ சொன்னபோது பெரிய ஒரு வேதனையோடும், நெஞ்சு கணக்கும் வேதனையோடும், தொலைத்தொடர்பு பரிவர்த்தனையையும், கட்டளைத் தலைமையையும் குழப்பி திகிலடைய வைத்த அரைகுறை திருப்தியோடு எல்லோரும் பின்வாங்கினார்கள்.

★★★

நான் குமுதன் அண்ணரிடம் வந்தேன் அவர் அதிக குருதி வெளியேறியதாலும் மார்பிலும் காயமடைந்ததாலும் அதிகமாக மயக்கமடைந்திருந்தார். அந்த நிலையிலும் **"அநியாயமாய்ச் சாகக்கூடாது எல்லோரும் போவோம்"** என்று தன்னையும் கொண்டு போகும்படி சொல்ல, அவரை அணைத்தபடி எனது காயத்தின் ரண வேதனையோடு கூட்டி வந்தேன். கொஞ்சத்தூரத்துக்கு நண்பி ஒருவர் உதவி செய்தார். பின் வெடிமருந்துப் பையோடு அவாவும் போய்விட முன்னே மண் அணை, அரைகுறையாய் வெட்டப்பட்ட கம்பித்தடையையும் தாண்டி வரும்போது.

★★★

கரும்புலி கப்டன் குமரேஸ் **"அறிவுக்குரண்ண என்னையும் கொண்டு போங்கோ காலில்லாட்டியும் இடியனையாவது கொண்டுபோய் இடிப்பன்"** என்று அந்த முடியாத வேளையில் கூட சொன்னான். தான் தன்னை இழக்கின்ற போது எதிரியையும் இலக்கையும் அழிக்க வேண்டும் என்ற தவிப்பைப் பாருங்கள். என்னால் எதுவுமே செய்ய முடியாத நிலையில் தவித்திருக்க அவன் எதுவுமே சொல்லவில்லை "சாச்சை" மட்டும் ஒன் (ON) பண்ணினான் . அதனோடு குமரேசின் இறுதியான வார்த்தையையும், அவனின் சிரித்தபடி இருக்கும் இளைய முகத்தையும், ஏன் அவனின் அந்தக் கட்டு உடலைக் கூட எங்களால் இனிக் காணவே முடியாது என்பதை நினைத்தபோது நெஞ்சில் ஒரு பெரும் வேதனையும் உறைந்து போனது.

**குமரேஸ்!**
**தம்பி**
**நீ விடைபெற்றுப் போய்**
**வெகு நாள் ஆகவில்லை – எனினும்**
**உடைபட்டுப்போனது – எங்கள்**
**உள்ளம்தான் – கால் உடைபட்டு**
**நீ கிடந்த காட்சியை**
**வெடியோடு நீ கரைந்த பொழுதினை**
**நினைக்கும்போது**
**வறண்டு போவது**
**தேகம் மட்டுமல்ல**
**கண்களும் தான் ....**

★★★

குமுதன் அண்ணாவைக் கொண்டு வந்து கொண்டே இருந்தேன். அவர் அடிக்கடி பிடியிலிருந்து நழுவி நழுவி தலையைக் குத்திக் குத்தி விழுந்து கொண்டே இருந்தார். அந்த ஆணையிறவின் கட்டளை மையத்தில் இருந்து 180 மீற்றரில் தன்னால் முழுமையாகவே இயலாது போக மயக்கமடைந்த நிலையிலும் நிதானமாய். தனது "சாச்சை" கழற்றி தனது நெஞ்சில் வைக்கும்படி கூறவே எப்படியோ மனதைத் திடப்படுத்தி அதைக் கழற்றி ON செய்யும் போது அதில் இருந்த இயங்கு நிலைத் தடையைக் கூறி அது இயங்காது எனக்கூறியபோது அவர் **"என்னால இனி வரேலாது உங்கட சாச்சைக் கழற்றி வையுங்கோ"** இதைக் கேட்டதும் நான் உறைந்தே போனேன், என்னோடு இருந்தவருக்கு எனது சாச்சையே வைப்பதா? என்னால் அதைப்பற்றி நினைக்கக் கூட முடியாமல் இருந்தது. அப்பப் எண்டால் இரண்டு பேருமே ஒய்டாக் கிடந்து "சாச்" இழுப்பம் என்று வேதனையோடு கூறி முடிக்கும் முன் **"அநியாயமாய் நாங்கள் சாகக் கூடாது. கெலிச்சண்டையைப் போல நிறையச் செய் திட்டுத்தான் வீரச்சாவடைய வேண்டும். இஞ்ச நடந்த பிரச்சனையை ஒண்டும் விடாமல் கட்டாயம் போய்ச்சொல்லுங்கோ"** என இடைவிடாது சொல்லிச் சொல்லிக் கொண்டான். மீண்டும் மீண்டும் அதே போதனையும், அதே கட்டளையும் தான் என்ன செய்வது பெரும் வேதனையோடு எனது உடலோடு இருந்த 'சாச்சை' கழற்றி அவர் சொன்னபடியே நெஞ்சில் வைத்து ஒரு பொத்தானை On பண்ணியபடி எஞ்சியிருந்த அவரின் இடது கையில் மற்றப் பொத்தானைக் கொடுத்த போது. மீண்டும் முன்னர் சொன்ன அதே போதனையும், கட்டளையும் அதனோடு இறுதியாய் **தம்பி விமலநாதனிடம் சுகமாக இருக்கச் சொல்லுங்கோ கெதியாய் போங்கோ கெதியாய் போங்கோ....** இது தான் அவர் என்னிடம் மட்டுமல்ல அவர் உதடுகள் சொன்ன இறுதி வார்த்தையும்.

★★★

வோக்கி மட்டுமல்ல என் உள்ளமும் சிதைந்து போன நிலையில் அவரின் வோக்கியையும்"சாச்சின்" பொறித் தொகுதியையும் எடுத்துக் கொண்டு **எனது பாதங்கள் தான் நகர்ந்தன. நான் நகரவே இல்லை. இப்போதும் அங்கு தான் என் உயிரே.** 05 மீற்றர் தூரம் சென்றிருப்பேன். எதிரி அந்த நீண்ட இடைவெளியில் தன்னை மீண்டும் தயார்படுத்தித் தாக்க தொடங்கினான்.

★★★

அப்போது திரும்பிப்பார்த்தபடி போய்க் கொண்டிருக்க எனது சாச்சின் வெடியதிர்வோடு அதன் ஒளிச்சிதறல் களோடு குமுதன் அண்ணாவின் உடலும் செந்துகழாகியது. **அம்மாவை விட பாசமாய் எம்மை அரவணைத்த அந்த உயிர் நண்பனை மூன்று களத்திலும் எமக்கு தலைமை தாங்கிய அந்த வீரனை, எனது வாழ்நாளிலே என் மனதைக் கவர்ந்த மாமனிதரை நாம் இழந்து போனோம்.**

05 நிமிட நேரக்கணிப்பில் இருந்த குமரேசின் வெடிமருந்துத் தொகுதியோடும் கிளியர் செய்ய முன்னுக்கு வந்த எதிரிகளோடும் சேர்ந்து குமரேசின் உடலும் பெரும் வெளிச்சத்தோடு உப்புக் காற்றில் கரைந்து கலந்து என் மூச்சுக் காற்றோடு கலந்தது.

**குமுதன் அண்ணாவே!**
**என் அம்மாவில் கூட காணாத**
**உங்கள் அரவணைப்பை**
**நினைக்க விழிகள் கலங்குதே**
**மூன்று களத்திலும் நீங்களே**
**தலைமை ஏற்றீர் -இன்று**
**எம் மூச்சில் கூட சுவாலை ஏற்றிச்**
**சென்றீரே.......**

★★★

இந்த இரண்டு தோழர்களினதும் உடல்கள் சிதறியதைப் பார்த்த என் உள்ளமும் சிதறியதுதான். எனினும் எனது அப்போதைய நிலையை எனது அப்போதைய உணர்வை எப்போதுமே என்னால் எழுத்தில் வடிக்க முடியாது. ஏனெனில். ஒன்றாய் உண்டு ஒன்றாய் உறங்கி ஒன்றாய்ப் பயிற்சி எடுத்து. ஒன்றாய்ப் பல தாக்குதல்களுக்குச் சென்று, ஒன்றாய் எந்த இன்பங்களையும் துன்பங்களையும் பங்கு கொண்டு ஒரு கூட்டுப் பறவைகளாய் இருந்த அந்தப் பாச உறவுகள், எம் உயிர்ச் சொந்தங்கள். என் கண்முன்னே எனது 'சாச்' சாலும் தங்கள் 'சாச்' சோடும் வெடித்து இருளோடு இருளாகிப் போனார்கள் அந்த இரும்பு மனிதரின் உள்ள உணர்வை அது என்னுள் ஏற்படுத்திய தாக்கத்தை, எந்தக் கரும்புலிகளினால் கூட வார்த்தைக்குள் அடக்க முடியாது. கரும்புலிகளின் தியாகமே அப்படியானது தான். அவர்களின் நினைவைச் சுமந்தபடி என் உள்ளத்தில் ஒருவித புதிய உத்வேகம் உந்தித்தள்ள அந்த ஆனையிறவின் மையத்தால் நகர்ந்து கொண்டிருந்தேன்.

★★★

ஒரு சிறிய பற்றைக்குள் முனகல்ச் சத்தம் கேட்கவே அங்கு போய்ப்பார்த்தேன். திகைத்தே போனேன். கரும் புலி கப்டன் செங்கதிர். **அண்ணா அவையள் முன்னுக்குப் போய்க் கொண்டிருக்கினம்** அவள் சொல்லி முடிப்பதற்குள், இதுவரையும் இருவரையுமே காப்பாற்ற முடியாமல் போன வேதனை மேலிட இவளை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு துடிப்பு. ஒரு புதிய ஆவேசம் என்னில் எழ அவளைத் தூக்கி அவளின் ஒரு கையை என் தோளைப் பிடித்திருக்க எனது வலது கையால் அவளை அணைத்தபடி எனது காயத்தின் வேதனையோடும் அதை வெளிக்காட்டாமல் தாண்டித் தாண்டி அவளைக் கொண்டு வந்து கொண்டி ருந்தேன். எதிரி முதலாவது 'பரா' வெளிச்சம் மறையும் முன்னர் மற்றப் பராவையும் அடித்துக் கொண்டிருந்தான். ஆனையிறவே அந்த நடு இரவில் பட்டப் பகலாய்க்கிடக்க கவர் எடுப்பதற்கு எந்த தடயமுமே இல்லாத அந்த வெட்டை வெளியால் நகர்ந்து கொண்டிருந்தோம். மோப்ப நாய்களும் துப்பாக்கி ரவையும், 40mm எறிகணையும் எம்மைத் துறத்திக்கொண்டேயிருந்தது. நாம் சென்றுகொண்டேயிருந்தோம்.

★★★

ஒரு இருசல் பற்றைக்கு அருகில் முன்னர் வந்தவர்களைக் கண்டு, பின் அவர்களோடு சேர்ந்து சென்றுகொண்டிருந்தோம். எதிரி துரத்திக்கொண்டே யிருந்தான். காயப்பட்டு அதிக குருதி வெளியேறியதால், செங்கதிர் தண்ணீர் தண்ணீர் என்று கத்திய வண்ணமே வர ஒரு உப்பு நீர் ஓடையில் நீரைக் குடித்ததும் உப்புத் தன்மை எமது காயங்களை இன்னும் வேதனைப்படுத்திக் கொண்டிருந்தது. செங்கதிர் மயக்கம் வரும்போது இருந்துவிடுவாள், பின்னர் படுத்தபடி **'கொஞ்சநேரம் இருந்துட்டுப்போவம்'** என்பாள். புகையிரத வீதியைக் கடந்து வந்துவிட்டோம். செங்கதிர் படுத்தால் எழும்பவே மாட்டாள், எழுந்து நடக்கும்போது எனது பிடியிலிருந்து நழுவி அடிக்கடி மயங்கி மயங்கி இருந்துவிடுவாள்.

★★★

மற்றவர்கள் விடிவதற்கிடையில் கண்டிவீதியைக் கடக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்க... எங்களுக்கா நீங்கள் எல்லோரும் நின்று வீனாய்ச் சாகக்கூடாது நீங்கள் போங்கோ, விடிஞ்சாப்பிறகு கொஞ்சம் மயக்கம் தெளிஞ்சிடும் வாறம் என்று சொல்லி எனது RPK LMG யைக் கொடுத்துவிட அவர்களும் ஒரு றைபிளை வைத்துவிட்டுச் சென்றார்கள். மலேரியாக் குளிசை குடித்த மாதிரியான மயக்கம் ஏற்படவே வாயில் குப்பியும், கையில் குண்டுடனும், காயத்தின் வேதனையால் அனுங்கிக்கொண்டு கிடந்தோம்.



★★★

*01.02.1998* காலை 6.00மணி இருக்கும் செங்கதிர் படுத்திருந்த பூவரச மரத்தடியில் எனது கோல்சரில் கிடந்த கைக் குண்டுகளில் ஒன்றினைச் செங்கதிருக்குக் கொடுத்துவிட்டு மிகுதி நான்கு குண்டுகளையும்

இடுப்பில் செருகிவிட்டிருந்தோம். அது வெட்டை வெளி உருமறைப்புச் செய்யமுடியாத ஈச்சம் பற்றைகள் நாம் இருந்த இடத்திலிருந்து கண்டி ரோட் 300m றில் இருந்தது. அதன் இரு மருங்கும் 200m இடைவெளியில் காவல் அரண்கள் தெரிந்தன. பகலிலே வீதியைக் கடக்க முடியவே முடியாது. இருண்டபின் தான் அந்த வீதியைக் கடக்க வேண்டும். அதுவரையும் வேதனையைத் தாங்கியபடி சாப்பாடும், நீரும் இன்றி இருக்கவேண்டும். அதைப் பற்றி நினைக்கவே முடியாமல் இருந்தது.

செங்கதிரின் கால்காயத்திற்கு என்னிடமிருந்த ஒரேயொரு குருதித் தடுப்புப் பஞ்சனையைக் கட்டிவிட்டு அவளின் அருகிலே அடிக்கடி ஏற்படும் அரைகுறை மயக்கத்தில் கிடந்தோம்.

கரும்புலி கப்டன் செங்கதிர் **குமுதன் அண்ணை யாக்கள் பாவம்** என அடிக்கடி சொல்லிச் சொல்லிக் கொண்டிருந்தாள். மற்றவர்களுக்காக இரக்கப்படுவதிலும், கவலைப்படுவதிலும் அவர்களுக்குத்தான் எவ்வளவு திருப்தி பாருங்கள்.

★★★

தண்ணீர்த் தாகம் அவளை வாட்டி எடுத்திருக்க வேண்டும். அடிக்கடி தாகத்தால் கத்திக் கொண்டிருந் தாள். மிகுதியாய் கிடந்த குளுக்கோசை அவளின் வாயில் கொட்டும்போது, **அண்ணா இதை உமிஞ்சு சாப்பிடக் கூட உமிழ் நீர் இல்லை** என அவள் கண்ணீரோடு சொன்ன வார்த்தை என் நெஞ்சை இப்போதும் உறைய வைத்துக்கொண்டேயிருக்கின்றது. அடுத்து நடக்கப்போவது என்ன என்பதை அறியாமல் கதைத்துக் கொண்டிருந்தோம்.



★★★

நேரம் 7.40 மணி எமக்கு வலப்புறமாகக் கேட்ட நாயின் குரையல் சத்தத்தில் தலையை உயர்த்திப் பார்த்தபோது எம்மை நோக்கி இராணுவத்தினர் வந்துகொண்டிருக்க, எல்லாமே வெட்டை வெளி ஆனபடியால் குரோலில் கண்டி ரோட்டை நோக்கிப் போய்க்கொண்டிருக்க, செங்கத்திர் இதாலையும் வாறாங்கள் எனச் சொல்ல, திரும்பிப்பார்க்க, அதாலையும் வந்துகொண்டிருந்தான். எதுவுமே செய்யமுடியாது. மீண்டும் தங்கியிருந்த பூவரசம் மரத்தடியைநோக்கி நகர்ந்து கொண்டிருந்தோம்.

★★★

எதிரி எம்மை நெருங்கி விட்டான். சுட்டுக்கொண்டே இருக்கின்றான். எங்களின் முன்னால் மண்ணைக் கிளறு கின்றது. அப்போது எங்கள் கைக்குண்டுகள் "சேப்றி" இழுத்துத் தயார் நிலையில் கையில் இருக்க செங்கதிர் வயிற்றுக்குள் குண்டை வைத்துவிட்டாள். நானும் அப்படித்தான். செங்கதிர் எதுவுமே கதைக்கவில்லை. ஆனால், அவளின் கண்கள் எதையோ சொல்லிக்கொண்டிருந்தது.

★★★

எதிரியின் சூடு அவளின் உடலில் துளையிட்ட மாத்திரத்தில் குண்டின் வெடியதிர்வு அவளின் உடலை அப்படியே மல்லாக்காகப் புரட்டிவிட செங்கத்திர் என்னைவிட்டு கண்முன்னாடியே போய்விட்டாள். அதை என்னால் ஜீரணிக்க முடியாமல் இருந்தது. பின்னர் எதிரியின் சூட்டைக் காணவில்லை செங்கதிர் வெடித்ததைப் பார்த்து பயந்திருப்பான் போலத்தான் இருந்தது.

***தங்கை செங்கதிரே!***
***எங்கு தான் உன்னைக் காண்பதினி ?***
***வெடித்துச் சிதறிட்ட வேளையில்***
***உங்கள் ஈகத்தையும்,***
***தண்ணீர்த் தாகத்தில்***
***நீ தவித்த பொழுதினையும்***
***எண்ணி அழுகின்றேன் – நெஞ்சுக்குள்***
***விம்மி அழுகின்றேன் மீண்டும்***
***சந்திப்பேன் மிக விரைவில்......***
***உங்கள் ஆசைகளை நிறைவேற்றியபடி***

ஏதோ ஒரு உணர்வு என்னை மேலும் உந்தித் தள்ள. சேப்ரி அகற்றப்பட்ட அந்தக் கைக்குண்டோடு தாண்டித் தாண்டிச் சென்றுகொண்டிருந்தேன். எதிரியின் ரவை களும் 40 mm செல்லும் எனக்கு முன்னால் வெடித்துக் கொண்டிருக்க ஆங்கிலத் திரைப்படக் கதாநாயகனைப் போல எந்தக் காயமும் இன்றிப் போய்க்கொண்டிருந் தேன். அதனை இப்போது என்னால் நினைத்தாலும் என்னால் நம்பமுடிவதில்லை.

★★★

200m தூரத்தில் ஒரு சிறிய நீர் நிலை தெரிய அங்கு போய் ஆசை தீருமட்டும் தண்ணீரைக் குடித்தேன். என்னால் குடிக்கமுடியவில்லை, செங்கதிர் தாகத்துடன் சொன்ன வார்த்தைகள் எனது உள்ளத்தை வெறுமை யாக்கிக்கொண்டிருந்தது. என் உடல் பலவீனத்தால் சோர்ந்துபோக அந்த "சேப்ரி" அகற்றிய கைக்குண்டை வெடிக்காத மாதிரி சேற்றில் புதைத்துவிட்டு நீரோடு நீராகி பாசியோடு பாசியாக நீந்திச் சென்று எதிரிவரும் திசையின் பக்கமாய் இருந்த சம்புப் புல்லுக்குள் கிடந்தேன். அவ்விடத்திற்கும் ஆமி வந்திட்டான். குளத்தின் உள்ளும் குளத்தினைக் கடந்தும் எதிரியின் சூடுகள் சென்று கொண்டிருக்கின்றது. MI –24 கெலியும் தேடுதல் நடத்துகின்றது. ஆனால் என்னைக் கண்டுபிடிக்க அவைகளால் முடியவில்லை.

★★★

எனது இரண்டு கால் காயத்தையும் கைக் காயத்தையும் மீன்கள் குடைந்து குடைந்து பிய்த்துப் பிய்த்துச் சுவைத்துக் கொண்டிருந்தது. நான் உடல் ரீதியாய்ச் செத்துக்கொண்டே சொல்லமுடியாத அந்த ரண வேதனையோடு விறைத்துப் போய்க் கிடந்தேன். ஏதோ ஏதோ எல்லாம் செய்தது. ஆனால் அவற்றையும் விட எம் தோழர்ககளும் செங்கதிரும் வெடித்த நினைவும் இறுதியாய்ச் சொன்னவையுமே நினைவை நிறைத்துக் கொண்டிருந்தது. **அப்போது வேதனை எல்லாம் எனக்கு வேதனையாய்த் தெரியவில்லை. ஆனால் இப்போது அதை நினைத்தால் அதுவே பெரும் வேதனையாய் என்னைக் கொல்லும்.** இப்படியாகத் தண்ணீருக்குள்ளே மீனோடும், வெளியே மூச்சு விடவும் அமிழ்ந்து அமிழ்ந்து போராடிக்கொண்டேயிருந்தேன். நண்பகல் 12.00 மணிக்கு பிறகுதான் இயக்கிச்சி முகாமிலிருந்து ஆட்லறிகள் ஏவப்பட்டன. சிறலங்காவின் CTB பஸ்கள் காயப்பட்ட இராணுவத்தினரை ஏற்றிச் சென்று கொண்டிருந்தது. அந்த வேதனைகளோடும் மயக்க நிலையோடும் இருட்டும் வரை விறைத்தபடி தண்ணீருக்குள்ளே ஊறியபடி கிடப்பது என்பதை சாதராண நேரங்களில் நினைத்தால் கூட வேதனையாய்த்தான் இருக்கின்றது.

★★★

எனது கண்கள் மட்டுமல்ல அன்றைய வானும் இருண்டுகொண்டிருக்க மெல்ல மெல்ல எழுந்து குப்பியை வாயிலும், குண்டினைக் கையிலும் கொண்டு காலை இழுத்து இழுத்து செங்கதிர் வெடித்த அதே இடத்துக்குப் போனேன். அங்கு செங்கதிரின் கழுத்துத் தகடு மட்டுமே கிடந்தது. அவளின் உடலை எதிரி இழுத்துப் போன தடையம் புற்களில் தெரிந்தன. அதை எடுத்து எனது "பொக்கற்" க்குள் வைத்து விட்டு கண்டி றோட்டை நோக்கி நகர்ந்தேன். என்னில் இருந்து 75m தூரத்தில் 7,8 ஆமிக்காரன் அவதானிப்புக்காய் சென்று கொண்டிருப் பதை கண்டு, உடனே திரும்பி மீண்டும் செங்கதிர் வீரச்சாவடைந்த இடத்தில் தங்கினேன். வானத்திலே நிலவு. என் மனதிலோ இருளோடும் அவளின் நினை வோடும் அதிலே நிலவு மறையும் வரை கிடந்தேன். **தனிமை என்பதையே உணரமுடியாத தனிமை அது. அவளின் அந்தத் தியாகத்தை தெரியப்படுத்த வேண்டும். அவர்கள் இறுதியாய் சொன்னதைக் கட்டாயம் சொல்ல வேண்டும். இதுவே எனக்குள் இருந்த வெறியாகும்.** இரவு 10.00 மணியிருக்கும் நிலவு மறைய மீண்டும் வானத்துச் சூரியனாய் பரா செல்கள் ஒளிபாய்ச்சிக் கொண்டிருக்க

★★★

எனது காலை இழுத்து இழுத்து ஒருவாறு கண்டி றோட்டையும் கடந்து கோயில் வயல்பகுதிக் காட்டுக்குள் வந்து விட்டேன், திசை மட்டுமல்ல எந்தப் பாதையும் இல்லாத முற்பற்றைகள் நிறைந்த காடு அது. எந்த வெட்டையையும் காணவில்லை. அங்கொன்று இங்கொன்றாய்த் தெரியும் பனைகளைப் பார்த்து நகர்ந்தால் அதன் அருகிலும் இருசல்காடுகளே, முட்கள் **என் பாதங்களை மட்டுமல்ல என் காயங்களையும் பதம் பார்த்துக் கொண்டிருந்தது.** எனக்கு உடல்ரீதியாய் சோர்வு ஏற்பட ஓரிடத்தில் படுத்தே விட்டேன்.

★★★

02.02.1998 காலை பழைய வயதானவர்களைப்போல தடியை ஊண்டியபடிதான் என்னால் நகர முடிந்தது. பகலில் கூட பற்றைகளின் ஊடாக நகர்வது கடினமாகவே இருந்தது. நகர்ந்து கொண்டு தான் இருந்தேன். சங்கத்தார் வயல்பகுதியில் இருந்த இராணுவ மினிமுகாமுக்கு அண்மையில் சென்று விட்டேன். இப்போது நான் வந்த பக்கமாக காட்டினைக் கிளியர் செய்ய ஆமிக்காறர் சென்ற தடயம் மட்டும் கண்ணில் தெரிய, நல்ல காலம் என்னை அவனுக்கு தெரியாமல் போன நிம்மதியோடு கிழக்குப் பக்கமாய் முகாமுக்கு சமாந்தரமாய் நகர்ந்து கொண்டிருந் தேன். இடைக்கிடை சப்பாத்துத் தடயங்கள். ஒருவாறு முன்னர் வந்து பாதை தெரியாமல் சென்ற அதே "ரெலிபோன்" வயர் வரும் பாதையை தொடர்ந்து நடந்து முன்னர் முக்கோண நிலை எடுத்த அதே இடத்தில் கிடந்தேன். அன்று புதைத்து வைத்து விட்டுப் போன மீதிச் சாப்பாட்டையும் பன்றி கிழறி, ஏதுமற்று எனது வயிற்றைப் போல் சாப்பாட்டுப்பையும் வெறுமையாய் கிடந்தது , தண்ணீர் விடாய் கொடுமைப்படுத்திக்கொண்டிருக்க முசுறு எறும்புகள் என் தசைகளில் புகுந்து கடித்துக்கொண்டிருந்தது. அதனைத் தடுக்கக் கூட சக்தியற்றுக் கிடந்தேன். **குமுதன் அண்ணா, சுபேசன் அண்ணா, குமரேஸ், செங்கதிர் ஆகியோரோடு இறுதியாய் உண்டு அவர்களின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்ட அதே இடத்தில் அந்த நினைவுகளோடு தனிமையில் தவியாய் தவித்துக்கொண்டிருந்தேன்.**

மாலையாகும் போது மெல்ல மெல்லச் சென்று அன்று சுபேசன் அண்ணாவோடு பாரப்பைகள் மறைத்து வைத்த இடத்தில் மீதிச் சாப்பாடு இருக்கும் என்ற நம்பிக்கையில் சென்றேன். அங்கு அவற்றைக் காண முடியவில்லை. இருட்டு வந்ததும் விக்னா வீதியையும் கடந்து மீண்டும் வெளிகள், பற்றைகள், வெட்டைகள் ஊடாக நகர்ந்து மின்சாரம் வழங்கும் மினிமுகாமுக்கு அண்மையில் சென்று விட்டேன். அங்கிருந்து நட்சத்திரங்களை வைத்து தெற்கு நோக்கி நகர்ந்தேன்.

★★★

கடல் நீர் ஏரிக்குள் இறங்கி விட்டேன் 200 m சென்றிருப்பேன். கரையில் வந்து எங்களின் 120mm எறிகணைகள் வந்து வெடிக்கின்றன.

★★★

நீரேரிக்குள் இருந்த பாசிகள் காயத்தை உரசிக் கொண்டிருந்தது, அவற்றுக்குக்கூட என் தசைகளும் குருதியும் தான் தேவைப்பட்டன போலும். நிலவு மறையும் வரை முன்னணி காவல் நிலைகளை அவதாணித்தபடி நீருக்குள் கிடந்தேன். முதல் நாள் இரவு தாக்குதல் நடத்தி எமது அணிகள் வெளியேறியபடியால் எதிரி எல்லா நிலை யிலும் ரோச் அடித்தபடியே இருந்தான். ஒரு மணி நேர இடைவெளிக்கு ஒரு முறை ஒரு இயந்திரப் படகு அவற்றை 'அலேட்'பண்ணிக்கொண்டிருந்தது. எப்படியா வது அவற்றைக் கடந்து வரத்தான் வேண்டும். நிலவு மறையவும் மெல்ல மெல்ல சென்று அந்தப் படகு சென்று மறைந்த பின் காவல் நிலையிலிருந்து 15m வேலியைப் பிரித்து முதலாவது "ரீப் லைட்" லைனையும் கம்பி றோலை கையால் அழுத்தியபடியும் கடந்து இரண்டா வதையும் அப்படியே செய்து (கம்பி றோல் கறல் பிடித்து இருந்தபடியால் அழுத்தும்போது அது இலுகுவாய் அழுத்தப்பட்டது.) மீண்டும் கடல் நீரேரியால் கொம்படிப் பக்கமாய் நீருக்குள் தெரிந்த நிலப்பகுதிக்கு அண்மையில் சென்றபோது "பிறிஸ்ரல்"மணம் மூக்குள் நுழைய அது இராணுவப் பிரதேசம் என்பதை உணர்ந்து மீண்டும் தெற்கு நோக்கி நகர்ந்து உடல் நீரில் கிடந்தபடியால் மேலும் இயலாமற்போக மயக்க நிலையில் மணல் திட்டியில் படுத்துவிட்டேன்.

★★★

03.02.1998 காலையில் எதிரியின் காவல் நிலையில் ரீப்லைட் அணையமுன் மூன்றாவது நாளாக வும் வேதனைகளோடும், உள்ளத்திலிருந்த அந்த உறுதி யோடும் உப்பு நீர் நிறைந்த வயிற்றோடும் நகர்ந்து கொண்டிருந்தேன். இரணைமடுவின் மேலதிக நீர் வெளியேற்றும் அந்த ஆற்றுப்படுக்கையை இரண்டு தடவை வெவ்வேறு இடங்களால் கடந்து நடந்து கொண் டேயிருக்கின்றேன், இப்போது எனது காயங்களை மணி இழையானும்,அந்த வெளியின் புற்களுமே சுவைத் துக்கொண்டிருக்க சூரிய வெப்பம் என் மேனியில் பட மேலும் தலைச்சுற்றாகவே இருந்தது. கரம்பைக் காய்களைச் சாப்பிட்டுக்கொண்ருக்கும்போதே, அவை உடனுக்குடன் வாந்தியாய் வெளியில் வந்துகொண்டேயிருக்கும்.

★★★

03.02.1998 அன்று முற்பகல் 11.40 மணிக்கு கண்டா வளைக் கிராமத்துக்குள் மெல்ல மெல்ல நுழைந்து கொண்டிருந்தேன். என்னைக் கண்டவுடன் தோட்டத் துக்கு நீர் ஊற்றிக்கொண்டிருந்தவர்கள் ஓடி விட்டார்கள். இருவர் மட்டுமே அசையாமல் நின்று பார்த்துக்கொண்டே நின்றார்கள். வேதனையிலும் சிரித்தபடி அவர்களிடம் விபரத்தைக் கேட்டபோது ஓடியவர்கள் ஆமிக்காரர் என நினைத்து ஓடுவதாயும், ஆமிக்காரார் என்றால் தடியூண் டியபடி வரமாட்டான் என்பதால் தாங்கள் ஓடவில்லை என்றும் சொல்லிக்கொண்டார்கள். பனையோலை வாளி யில் நீர் குடிக்கத் தந்தார்கள். எனது காயத்துக்கு பொழுத்தீனால் இலையான் மொய்க்காமல் கட்டிவிட்டு, தங்களின் மாட்டு வண்டிலைக் கொண்டு வந்து, அதில் என் காயங்கள் தாங்காத மாதிரி வைக்கோல் நிரப்பிய சாக்கில் என்னைத் தூக்கி ஏற்றிக் கொண்டு வந்தார்கள். நாங்கள் ஆழமாக நேசிக்கும் மக்களின் அந்த பங்கும் பணியும் இன்னும் தொடரவேண்டும். இடையில் வேவுப்புலி கப்டன் விடுதலையும் மற்றும் ஓர் போராளியும் என்னை உழவு இயந்திரத்தில் மாற்றி ஏற்றி வந்தார்கள்.



★★★

04.02.1998 அன்று சுய நினைவு பெற்று எழுந்தபோது நான் அபையன் மருத்துவ மனையில் மட்டுமல்ல ஈழநாதம் பத்திரிகையில், ஆணையிறவிலும் கிளிநொச்சியிலும் வீரகாவியமான பதினான்கு கரும்புலிகளில் ஒருவனாய் இருந்தேன். **மீண்டும் புதிய போரியல் அனுபவங்களின் ஊடே எதிரியின் இலக்கை நோக்கி என் பாதங்கள்.....**

# சாவும் வாழ்வும் விடுதலைக்கானால் தீயும்கூடக் குளிர்கிறது

வியாசன்

**நெஞ்சினிலே பஞ்சுவைத்து**
**எண்ணையிட்ட நெருப்பு**
**நில்லெனவே சொல்வதற்கு**
**யாருமில்லை எமக்கு**
**சாகவென்று தேதிசொல்லிப்**
**போகும்புயல் கறுப்பு**
**நாளைபகை மீதினிலே**
**கேட்குமெங்கள் சிரிப்பு**

**யூலை - 5**

புதிய திசையொன்றின் புலர்வு தினம்.
ஆதிக்கக் கதிரைகள்
அச்சத்தில் உறையும் நாள்.
நெல்லியடியில் மில்லர் தொடக்கி வைத்த
சொல்லியடிக்கும் திருநாள்.
"கரும்புலிகள்"
மேகத்தில் முடியும் ஆழத்தில் அடியும் கொண்டு
தாகத்தில் திரியும் கோபங்கள்.
தேகத்தில் தீ மூட்டும் போதும்
சோகத்தின் திரைமூடாத திருமுகங்கள்.
ஆழத்திற் கிடக்கும் இவரின் அனல்வேர்களை
எந்த ஆய்வாளர்களாலும்
அளவெடுக்க முடிவதில்லை.
அழுதழுது வரும் வார்த்தைகளாற் கூட
இவர்களை எழுதிவிட முடியாது.
கரும்புலிகளைப் பாடும் போதுதான்
கவிஞர்கள் தோற்றுப்போகின்றனர்.
வெடித்த புயல்களுக்கு எழுதிய கவிதைகளை
இருக்கும் கரும்புலிகள் படிக்கும்போதுதான்
எழுத்தின் இயலாமை தெரியவருகிறது.
தூரிகை எடுத்து ஓவியம் தீட்டலாம்
வர்ணங்கள் தோற்றும்போகும் இறுதியில்.
முலைகொடுத்த தாயர்கள் கூட
மலைகளை நிமிர்ந்து பார்க்கலாமே தவிர
அவர் உள்ளக்கிடக்கையை
உணர்ந்துகொள்ள முடியாது.
சாவொன்றின் முன்னேதான்
அதிகமானோர் சகலதையும் இழக்கின்றனர்.
விஞ்ஞானத்தால் சாவுக்குத் தேதிவைக்க
முடியுமெனில்
அச்சத்தில் அந்தரித்துப் போகும் உலகு.
இந்தப்புயல்கள் மட்டும் தேதிவைத்த பின்னர்தான்
சந்தோசத்தை தலையில் வைத்துக்
கூத்தாடுகின்றனர்.
நகம் வெட்டும்போது தசை கிள்ளுப்பட்டாலே
வேர்த்து விறுவிறுத்துப்போகும் இனத்தில்
இந்த உற்பவங்கள் எப்படி சாத்தியமானது?
விதி வழியேதான்
சாவுவருமென நம்பும் சமூகத்தில்
இந்தப் புதுவிதிகள் பிறப்பெடுத்தது எப்படி?
வீதியிற் காணும்போது அமுக்கமாகவும்
வீட்டுக்கு வரும்போதில் வெளிச்சமாகவும்
குதித்துக்கொள்கின்றன இந்தக்
குளிரோடைகள்.
நாளை இவர்களா வெடிக்கப்போகின்றனர்?
நம்ப முடியாமல் இருக்கும் சிலவேளைகளில்.
சத்திரசிகிச்சை என்றாலே
நாங்கள் பாதி செத்துவிடுகிறோம்.
சாகப்போகும் நேரத்திலும்
இவர்களால் எப்படித் தலைவார முடிகிறது?
எல்லா உயிர்களையும் இருந்து பார்க்கும்
இயமன்
இவர்களின் உயிரைமட்டும் எழுந்து
பார்ப்பானாம்.
கரும்புலிகளின் பிறப்பின் சூத்திரம்
உயர்மலையொன்றின் உச்சியிலிருக்கிறது.
இவர்களின் நதிமூலம்
தலைவனின் நம்பிக்கைப் புள்ளியில்
ஊற்றெடுக்கிறது.
வழி தவறாத பயணியென நம்பியே
கரும்புலிகள் கந்தக வெடியாகின்றனர்.
இவர்கள் வரலாறு திருப்பும் பொழுதுகளில்
பூப்பூத்துக்கொள்கின்றன வாசல் மரங்கள்.
மிதித்துச்சென்ற முட்செடிகள் கூட
போய் வருவோருக்குப் புன்னகை
எறிகின்றன.
பயணம் சொல்லிப்போன காற்தடங்களை
பவுத்திரப்படுத்திக் கொள்கிறது காற்று.
தரையில்
கடலிலும்
மறைவிலும் அதிரும்வெடி ஒவ்வொன்றும்
காற்றில் கலந்து கரைவதில்லை
உளிவரும் திசையில் வரையப்படுகின்றன.
அறிந்தழும் தாயரின் குரல்கூட
அடித்தலறி ஒப்பாரி வைப்பதில்லை
மௌனமாக மாரடித்துக்கொள்கிறது.
கரும்புலிகள் எங்கள் காவற்தெய்வமென
நாளை வரும் இளைய உருத்தாளர்
பூட்டனுக்கும், பெத்தாச்சிக்கும்
கோயிலெழுப்புவர்.
வெடியம்மன் கோயிலென விளக்கேற்றுவர்.
பேச்சியம்மனும்,
பிடாரியம்மனும் இன்றிருப்பதுபோல
வெடியம்மன் நாளை விளங்குவாள்.
வாழ்வின் அர்த்தம் புரியாமல்
நாங்கள் வெறும்வெளியில் வழக்காடுகிறோம்.
எவரையும் நிகழ்காலம் தீர்மானிப்பதில்லை
இல்லாத காலத்தில் எதிர்காலமே
தீர்மானிக்கிறது.
வாழும்போதில் வாழ்வதுமட்டும் வாழ்வல்ல
சாவின் பின்னர் வாழ்வதுதான் வாழ்வாகிறது.
முன்னோர்கள் இதைத்தான்
சொர்க்கமெனச் சொன்னார்கள்.
கரும்புலிகள் வானத்திலில்லை
பூமியிலேயே வாழ்வார்கள்.
சாவுடன் முடியும் சரித்திரமல்ல இவர்கள்
தீயுடன் எரியும் ஜீவன்களல்ல இவர்கள்.
வரலாற்றில் வாழ்தலென்பது
செய்யும் தியாகத்தால் வருவது.
சந்தனமாய்க் கரையும் வாழ்விலிருந்து
விரிவது.
கரும்புலிகளின் வாழ்வு கோடிதவம்
பூர்வ புண்ணிய வரம்.
ஆணென்றும் பெண்ணென்றும் பேதமின்றி
இந்த அனற்குஞ்சுகளின் பிறப்புக்கு
உலகம் உருகாலம் தலைசாய்க்கும்
ஈழத்தமிழருக்கான விடுதலையை
எவர் தரமறுத்தாலும்
அவரைக் கரும்புலிகளின் கறுப்பு அச்சமூட்டும்.
கறுப்பே அழகு
கறுப்பே வலிமை
கறுப்பே வர்ணங்களின் கவிதை
கறுப்புத்தான் உலகின் ஆதிநிறம்.
அதனாற்தான் ஆதிமனிதனான தமிழனும்
கறுப்பாய் விளங்குகிறான்.
கரும்புலிகள் காலமெழுதிகள்
எழுதும் காலத்தின் எல்லைக்கற்கள்.
எல்லையைக் கடந்து எதிரிகள் வராமல்
இந்த இடியேறிகள் காவலிருக்கின்றனர்.

**கரும்புலி போகும் திசையினையெந்த**
**மனிதரும் தெரிவதில்லை - அந்தக்**
**கடவுளென்றாலும் இவர்களின் வேரை**
**முழுவதும் அறிவதில்லை**
**அழகிய கனவும் மெழுகிய அழகும்**
**இவரிடம் பூப்பதில்லை - இந்த**
**அதிசய மனிதர் உலவிடும் பூமி**
**பகையிடம் தோற்பதில்லை.**

